# கேரளப் பாடநூல்

# தமிழ்

வகுப்பு IX

**பகுதி 2**

Kerala Reader - Tamil (AT)
Standard IX
Part - 2

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
**2024**

ST-807-1-TAMIL (AT)-9-VOL-2

# தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

# உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தோர் எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன். எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

## தமிழ்

## 9

*Prepared by*
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition : 2024
Printed at : KBPS, Kakkanad, Kochi-30
© Department of General Education, Government of Kerala

## முகவுரை

உலகில் நாம் காணும் உயிரினங்களை ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர் என ஆறுவகை உயிரினங்களாக வகைப்படுத்தியிருப்பதை நாம் அறிவோம். உயர்ந்தபட்சமாக ஆறறிவு படைத்தவன் மனிதன். ஆறாவது அறிவு என்பது சிந்திக்கும் ஆற்றல். அந்தச் சிந்தனைக்கு மூலகாரணமாக விளங்குவது மொழி. எனவே பிற உயிரினங்களிடமிருந்து மனிதனை வேறுபடுத்திப் பெருமைப்படுத்துவது மொழியே எனலாம்.

மொழி! அது கருத்துப் பரிமாற்றத்திற்கான ஒரு கருவியாக மட்டுமே பொதுவாகப் பலரும் கருதுகின்றனர். ஆனால் மொழி பன்முக ஆற்றல் வாய்ந்த ஒன்று. அதற்கு உயிருண்டு என்று கூறினாலும் தவறில்லை. மொழியானது மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்ப, காலந்தோறும் அதன் ஆழத்திலும் பரப்பிலும் வளர்ச்சியடைந்து கொண்டேயிருக்கும் தன்மையது.

இன்றைய அறிவியல் உலகில் உயர் வகுப்புகளுக்கு மொழிக்கல்வி தேவையா? என்ற கேள்வியைச் சிலரேனும் எழுப்புகின்றனர். எந்த வகுப்பு ஆனாலும் மொழிக்கல்வியும் அதனால் கிடைக்கும் பயனும் இல்லையென்றால் மனிதனும் இயந்திரமாகிவிடுவான் என்பது உண்மை. மொழிப்பாடங்கள், படித்துச் சுவைப்பதற்கான பாடங்களாக மட்டும் இருந்துவிடக் கூடாது. அவை தனிமனித வாழ்க்கைக்கும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் பயன் தருவனவாக அமைதல் வேண்டும்.

மொழிக்கல்வியின் வாயிலாக மொழிப்பயிற்சி, மொழி அழகு, மொழி ஆற்றல், மொழிக்கூறுகள், மொழி வெளியீட்டு வடிவங்கள், படைப்பிலக்கியங்கள் முதலானவற்றிலும் மாணவர்கள் திறன்பெற வேண்டும். இவற்றையெல்லாம் உள்வாங்கியே இப்பாடநூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. அறிவு என்பது கேட்டுப் பெறுவதல்ல; ஆக்கிக்கொள்வது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

**வாழ்த்துகள்.**

**முனைவர். ஜெயப்பிரகாஷ், ஆர்.கெ.**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி.

# Textbook Development Committee

## Tamil - IX (AT) Part II

### Advisor

**Dr. Nainar, M.**
Reader in Tamil (Rtd.), University College, Thiruvananthapuram.

### Chairperson

**Dr. Santhi, P.**
Associate Prof., Dept. of Tamil, University College, Thiruvananthapuram.

### Experts

**Dr. Dhanya, V.S.**
Asst. Prof., Dept. of Tamil, University College, Thiruvananthapuram.
**Dr. Karthikeyan, A.**
Prof. (Rtd.), Tamil University, Thanjavur.
**Dr. Sajan**
Associate Prof., Dept. of Tamil, NMCC, Marthandam.
**Dr. Soundara Mahadevan**
Associate Prof., Dept. of Tamil, Sadakathullah Appa College, Tirunelveli.

### Members

**Archana, M.,** HST, CPMGHSS Peermade, Idukki.
**Hepsi Christinal, S.,** BPC, BRC Munnar, Idukki.
**Dr. Jayalakshmi, S.,** HM, GHSS, Devikulam, Idukki.
**Mercy Premalatha, R.,** HST (Rtd.), LMS Tamil HS, Cheuvarakkonam, Parassala, Thiruvananthapuram.
**Dr. Nagaraj, G.**, HST, BRC Trainer, Parali BRC, Palakkad.
**Parameswaran, K.,** HST, GHS, Muthalamada, Palakkad.
**Pushpalatha, P.,** HST, GHS, Vandiperiyar, Idukki.
**Shailaja, S.,** HST, GHS, Pambanar, Idukki.
**Selvakumar, R.,** HST, GTHS, Mattathukad, Palakkad.
**Soumya, S.**, HST, GHSS, Marayur, Idukki.
**Velkuthalam, P.,** HST, GHSS, Chinnakanal, Idukki.
**Vijila Rani, M.**, HST, GTV & HSS, Chalai, Thiruvananthapuram.
**Bimal Kumar**, Drawing Teacher, Anchalamoodu, Kollam.
**Jessy, V.A.**, Drawing Teacher, St. Thomas HSS, Koorathund, Kozhikode.
**Lakesh, G.L.,** Drawing Teacher, National HS, Vattoli, Kozhikode.
**Premjith Sureshbabu**, Artist, Nelolpana, Pakaloor, Thiruvananthapuram.
**Santhosh, K.**, Drawing Teacher, GHS, Neduva, Malappuram.

### Academic Co-Ordinator

**Dr. Sahaya Dhas, D.**
Assistant Professor (Tamil), SCERT.


மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| அலகு 4 | இசையும் நடனமும் | 95 – 118 |
| | அழகோவியம் | 96 – 100 |
| | தந்தனத்தோம் | 101 – 109 |
| | விருந்து | 110 – 118 |
| அலகு 5 | கூடி வாழ்! | 119 – 138 |
| | குடும்ப உறவு | 120 – 127 |
| | இலக்கியத்தில் உறவு | 128 – 131 |
| | யாதும் ஊரே | 132 – 138 |
| அலகு 6 | உழைப்பே உயர்வு | 139 – 165 |
| | வயலும் வாழ்வும் | 140 – 148 |
| | மலைச்சாரல் | 149 – 156 |
| | கட்டுமரம் | 157 – 165 |
| | அகராதி | 166 |

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

அலகு 4

# இசையும் நடனமும்



நம் பண்பாட்டை உணரவும் பரவச் செய்வதற்கும் கலைகள் பெரிதும் உதவுகின்றன. கலைகள் பல்வகைப்படும். அவற்றுள் கவின் கலைகளும் நாட்டுப்புறக் கலைகளும் உட்படுகின்றன. இத்தகு கலைகளையும் பண்பாடுகளையும் போற்றுவதும் பாதுகாப்பதும் நமது தலையாய கடமையாகும்.

# அழகோவியம்



## தமிழ்க் கலை

வியப்புற இன்பம் விருப்புற விளைக்கும்
காரியத் திறமையே 'கலை' எனப் படுவது;
இன்பம் தருகிற எல்லாச் செய்கையும்
கலையின் இனமாய்க் கருதத் தக்கதே;
இன்பம் என்பதில் இரண்டு விதங்கள்;

இயற்கை இன்பமும் செயற்கை இன்பமும்,
இயற்கை இன்பம் ஈடற்ற தெனினும்
செயற்கை இன்பமே சிறப்பென எண்ணி
மகிழ்வது மாறில மக்களின் இயல்பு.
கண்ணாற் காணும் இயற்கைக் காட்சியைச்

சித்திரம் வரைந்து சிறப்பென எண்ணுவர்.
உயிருடன் பார்க்கும் ஒருவரின் உருவைச்
சிற்பச்சிலையில் சீராட்டு வார்கள்.
ஊக்கமும் உணர்ச்சியும் ஊட்டும் சொற்களைப்
பாட்டாய்க் கேட்கவே பலரும் விரும்புவர்.

தமிழன் கலையெனத் தந்தன யாவும்
அறங்களைப் போற்றும் அறிவையே நாடும்.
வேடிக்கை என்றும் விநோதம் என்றும்



அநேகக் கலைகளைத் தமிழன் அறிவான்;
ஆயினும், அவைகளும் அறத்தையே அடுக்கும்;

நூல்களை எழுது கலையின் நோக்கமும்
கற்பனைக் கதையின் கலையும் அறமே
தருமம் பேசாத் தமிழ்நூல் கலையை
இலக்கிய மாகவே எண்ணான் தமிழன்.
கலைகளின் வழியே கருணையைப் புகட்டல்

எளிதாம் எனநம் முன்னோர் எண்ணியே
எண்ணுங் கருத்துமாய்க் கலைகளைக் காத்தனர்.
இயலென எழுதியும் இசையெனப் பாடியும்,
கற்பனை நிறைந்த கவிதைகள் செய்தும்,
நாட்டியம் பயின்றும் நாடகம் நடித்தும்,

குளங்களை வெட்டியும் கோபுரம் கட்டியும்,
சிலைகளைச் செதுக்கிச் சித்திரம் வரைந்தும்,
மலைகளைக் குடைந்து மண்டபம் ஆக்கியும்
கலைகளை வளர்த்த காரணம் எல்லாம்,
செயற்கை இன்பமும் இயற்கையில் சேர்ந்துடன்

அறிவைத் துலக்கி அன்பைப் பெருக்கிச்
சச்சர வில்லாச் சமுதாய வாழ்வை
உண்டாக்கி வைத்தல் ஒன்றே நோக்கம்.

– நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை



**நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை :** இவர் 1888 அக்டோபர் 19 இல் தமிழ்நாட்டிலுள்ள நாமக்கல் மாவட்டம், மோகனூரில் பிறந்தார். இவரது பெற்றோர் வெங்கடராமன் பிள்ளை, அம்மணியம்மாள் ஆவர். இவர் சிறந்த எழுத்தாளர், பத்திரிகையாசிரியர், விடுதலை வீரர் மற்றும் சமூக சீர்த்திருத்தவாதி எனப் பன்முகத்திறன் கொண்டவர். இவரது குறிப்பிடத்தக்க படைப்புகள் மலைக்கள்ளன், காணாமல் போன கல்யாணப் பெண், மாமன் மகள், என் கதை போன்றனவாகும். இவர் தமிழ்நாட்டின் முதல் அரசவைக் கவிஞர் ஆவார். மேலும் பத்மபூஷன் விருதையும் பெற்றுள்ளார். 1972 இல் மறைந்தார்.

## செயல்பாடுகள்

- "இயலென எழுதியும் இசையெனப்பாடியும்
  கற்பனை நிறைந்த கவிதைகள் செய்தும்
  நாட்டியம் பயின்றும் நாடகம் நடித்தும்
  குளங்களை வெட்டியும் கோபுரம் கட்டியும்
  சிலைகளைச் செதுக்கிச் சித்திரம் வரைந்தும்
  மலைகளைக் குடைந்து மண்டபம் ஆக்கியும்"
  இப்பாடலடிகளில் வரும் கலை வடிவங்களை வரிசைப்படுத்துங்கள்.



ST-807-2-TAMIL (AT)-9-VOL-2

✍ "கண்ணாற் காணும் இயற்கைக் காட்சியைச்
சித்திரம் வரைந்து சிறப்பென எண்ணுவர்
உயிருடன் பார்க்கும் ஒருவரின் உருவைச்
சிற்பச் சிலையில் சீராட்டுவார்கள்."
இப்பாடல் அடிகளின் கருத்தினை விமர்சனம் செய்து குறிப்பு எழுதுங்கள்.

## கதகளி

கேரளம் என்றாலே முதலில் நம் நினைவுக்கு வருவது வண்ணமயமான ஒரு வட்ட முகம்தான். கதகளி முகம்! கதகளி கேரளத்திற்கே உரிய ஓர் ஆட்டக்கலை. இது ஒரு செவ்வியல் கலையுமாகும். 'கத' என்றால் கதை. இதன் பொருள் நமக்குத் தெரியும். 'களி' என்றால் விளையாட்டு. மகிழ்ச்சியால் ஆடும் ஆட்டம் என்றும் சொல்லலாம். களிக்கு 'மகிழ்ச்சி' என்ற பொருளும் உண்டு. ஒரு கதையை மையமாகக்கொண்டு மேளதாளத்துடன் பாடி ஆடும் ஆட்டம் 'கதகளி'. தமிழில் இதைக் 'கதைகளி' எனலாம்.

கொட்டாரக்கரைத் தம்புரான் என்பவர் 1555–க்கும் 1605–க்கும் இடையே 'ராமனாட்டம்' என்னும் ஓர் ஆட்டக்கதையை வடிவமைத்தார். இராமன் கதையை எட்டுப் பகுதிகளாகப் பிரித்து, எட்டு நாட்கள் ஆடுவதற்குத் தகுந்தவாறு உருவாக்கினார். இந்த ராமனாட்டம் என்னும் ஆட்டக் கலைவடிவம்தான் பிற்காலத்தில் கதகளி என்னும் கலையாகப் பரிணமித்தது. எனவே கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஒரு கலையாகக் கதகளியைக் கருதலாம்.

பாரதத்தின் புகழ்வாய்ந்த இரண்டு மகா இதிகாசங்களாகிய இராமாயணம், மகாபாரதம் ஆகிய புராணங்களிலிருந்து ஏதேனும் ஒரு கதைப் பகுதியை எடுத்து அதற்குப் பாட்டு வடிவம் கொடுத்து, அந்தப் பாட்டின் கருத்திற்கேற்ப கதாபாத்திரங்கள் முத்திரைகள் காட்டி ஆடுவதுதான் கதகளி. பக்கமேளம், இசை, இலக்கியம், ஆட்டம் இவற்றின் ஒருங்கிணைந்த ஓர் உன்னதக் கலையாகக் கதகளி விளங்குகிறது. ஆடும் கதாபாத்திரங்களுக்குக் கண்ணைக் கவரும் வண்ணக் கோலங்கள் புனையப்படும். பாடும் பாட்டு வடமொழியில் அமைந்திருக்கும். செண்டை, மத்தளம், சேங்கில, இலைத்தாளம் இவை பக்கமேளத்திற்குப் பயன்படுத்தப்படும்

### நாட்டியக் கலை விளக்கம்

**எங்கும் நடனம்**

விண்ணும் மண்ணும் நடனசாலையாயிருக்கின்றன.

சுற்றிலும் இடைவிடாமல் நடனக் காட்சிகள் நடக்கின்றன. இக்காட்சிகளைக் காணக் காண உள்ளம் பூரிக்கிறது. இரவின் கருந்திரையைப் பிளந்து கொண்டு கம்பிமின்னல் வரும் ஒய்யாரத்தைப் பாருங்கள். மேகமார்பை ஊடுருவிப் பாய்ந்து பாய்ந்து பளிச்சிட்டு நடம்புரியும் மின்னலை இரவெல்லாம் பார்த்துப் பார்த்துப் பரவசமாகாத கவியுள்ளமில்லை! மின்னற் கொடியின் நடனத்துடன் மேக கர்ச்சனையும் சேர்ந்துவிட்டால், அந்த இன்பத்தைச் சொல்லால் அளக்க முடியாது! சூரியன் குபுக்கென்று கிழக்கே ஒரு குதி குதித்தெழுந்து, சாந்த நடனம் புரிந்து, மற்றொரு குதி குதித்துத் தணல் மயமாக மேற்கே மறையும் காட்சியைக் கண்டு நம் உள்ளம் இன்பக் கூத்தாடுகிறது! காற்றுப் பாட்டை வரவேற்று, அதனுடன் கூடிக் குழைந்து குலாவி நடனம்புரியும் மரஞ்செடி கொடிகளைப் பாருங்கள்! காற்றின் வேகத்திற்குத் தக்கபடி பூவும், இலையும் அசைவதைப் பாருங்கள். இலைகள், முத்திரை காட்டுவது போலவும், காற்று, வீணையை மீட்டும் விரல்கள் போலவுங் காண்கின்றன! மலையிலிருந்து அருவி தடதடவென்று படிகத்தை உருக்கி விட்டது போல் ஆனந்த நடனமாடி வருவதைப் பார்த்தால், நம் உள்ளமும் ஆனந்தக் கூத்தாடும். கடலின் அகண்ட கீதமும், ஆவேச நடனமும் கண்ணுள்ள மட்டும் பார்த்துக் கொண்டிருக்கலாம்; காதுள்ள மட்டும் கேட்டுக் கொண்டே இருக்கலாம்! உலக வாழ்வே நடனந்தான்!

எல்லாவுயிர்களும் இன்பம் வந்தால் துள்ளிக் குதிக்கின்றன. துன்பம் வந்தாலும் சோக நடனமாடுகின்றன. விருப்பு, வெறுப்பு, இன்பம்,

முக்கிய இசைக்கருவிகள். மாலைநேரத்தில் ஆரம்பமாகும் கதகளி விடிய விடிய நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று இத்தனை மணிக்கு இன்ன கதை இங்கு நடைபெறும் என்பதை மேளதாளங்கள் முழங்க அரங்கத்தில் அறிவிப்பர். இவ்வறிவிப்பு 'கேளிகொட்டு' எனப்படுகிறது. பின்னர் நிகழ்ச்சி ஆரம்பமாகிவிட்டது என்பதைத் தெரியப்படுத்த தாளங்கள் முழக்குகின்றனர். இதனை 'கணபதிகொட்டு' என்றும், 'அரங்குகேளி' என்றும் சொல்வர். தொடர்ந்து கடவுள் வாழ்த்தும் வணக்கமும். அந்நேரம் ஒரு திரை முன்னர் பிடிக்கப்படும். அத்திரைக்குப் பின்னால் நின்றுகொண்டு முக்கிய கதாபாத்திரங்கள் ஆடுவர். இது 'தோடயம்' எனப்படுகிறது. அடுத்து சில வாழ்த்து 'சுலோகங்கள்' சொல்லப்படுகின்றன. இதனை 'வந்தனா சுலோகம்' என்கின்றனர். பின்னர் முக்கியமான ஒரு ஆண் கதாபாத்திரமும் பெண் கதாபாத்திரமும் கடவுள் வழிபாடு நடத்துவர். இதனைப் 'புறப்பாடு' என்பர். தொடர்ந்து கதகளி ஆரம்பமாகும்.

பழங்காலத்தில் ஆண்கள் மட்டுமே இந்நிகழ்ச்சியில் பங்குபெற்று வந்தனர். நீண்டகாலம் இது தொடர்ந்தது. பெண் கதாபாத்திரங்களை ஆண்களே வேடம்கட்டி ஆடினர். முகத்தில் வண்ணச் சாயங்கள் பூசுவதற்கும், ஆடை, ஆபரணங்கள் அணிவதற்கும் நீண்டநேரம் தேவைப்படும். பொறுமை வேண்டும். ஒவ்வொரு கதாபாத்திரத்திற்கும் ஏற்பத் தனித்தனி வேடங்கள் உண்டு. வேடத்தைப் பார்த்தே இன்ன கதாபாத்திரம் என்று சொல்லிவிடலாம். பச்சை, கத்தி, தாடி, கரி, மினுக்கு, பழுப்பு ஆகியவை முக்கியமான வேடங்கள்.

முகத்தில் பச்சைநிறம் பூசுவது பச்சை வேடம். அரசர்கள், வீரர்கள், இராமன், இலட்சுமணன் போன்ற கதாபாத்திரங்கள் பச்சை வேடத்தில் வருவர். இராவணன், துரியோதனன், கீசகன் போன்ற அரக்கர் குணம் படைத்தவர்களுக்குக் கத்தி வேடம். தாடி வேடத்தில் வெள்ளைத்தாடி, சிவப்புத்தாடி, கறுப்புத்தாடி என மூன்று வகையான தாடிகள் உண்டு. அனுமன் போன்ற கதாபாத்திரங்களுக்கு வெள்ளைத்தாடி, இராஜகுணம் படைத்தவர்களுக்குச் சிவப்புத்தாடி. துட்ட கதாபாத்திரங்களுக்குக் கறுப்புத்தாடி. காடுவாழ் கதாபாத்திரங்களுக்குக் 'கரி' வேடம், பெண் கதாபாத்திரங்களுக்கும் முனிவர்களுக்கும் இடுவது மினுக்கு (பளபளப்பு) வேடம். சிவன் முதலான தேவர்களுக்குப் பழுப்பு வேடம் இடுவர்.

கதகளியில் இசை முக்கியத்துவம் பெறுகிறது. அரங்கில் ஒரு பெரிய விளக்கு

இடர், கசப்பு, களிப்பு முதலிய எந்தத் தன்மையும் ஒரு முகக் குறியால், கைக்குறியால், இடுப்பு வளைவால், அங்க அசைவால் நமக்குப் புலனாகின்றன. பேச்சுடன் கைவீச்சும் கால் வீச்சும் முகச் சுளிப்புகளும் இளிப்புகளும் களிப்புகளும் சேர்ந்துதான் உள்ளக் கருத்தை உணர்த்துகின்றன. உயிரே நமது உள்ளத்தில் 'பட் பட்' டென்று நடம்புரிந்து கொண்டிருக்கிறது. இரத்த நாடிகளெல்லாம் டப் டப் என்று நடம்புரிகின்றன. இந்த நடனம் நின்றால் மனிதர் வாழ முடியாது. படச்சுருளை ஓட்டும் மின்சாரப் பொறியைப் பாருங்கள்! ஒரு சுரங்கத்தில் தங்கம் காய்ச்சும் பெரிய இயந்திரங்களின் தாண்டவத்தைப் பாருங்கள்! எந்த இயந்திரமும் நடனமாடிக் கொண்டுதான் வேலை செய்கிறது. இந்தச் சீவயந்திரத்தின் விசை இதயத்தில் நடக்கும் திருவடி நடனமே!

**நடனக் கலையின் வரலாறு**

மனிதன் பேசத் தெரியும் முன்பே முகக்குறி, கைக்குறிகளாலும் உறுப்பசைவுகளாலும் தன் உணர்ச்சியையும் கருத்தையும் வெளியிட்டான். ஆதலால், மொழிக்கும் இசைக்கும் முன்பே நடனம் இருந்தது. மொழியும் இசையும் சேர்ந்து நடனக் கலைக்கு ஒரு வடிவமீந்தன. சொல்லிற்கேற்ற கைக்குறி, கண்குறிகளும் சொல்லாலான இசைகளுக்கேற்ற ஆட்டங்களும் இயற்கையாகவே உண்டாயின. இசைக்கேற்றபடி இராக தாளங்கள் உண்டாயின. இராக தாளங்களுக்கு முதலில் குரலும் கைகளும் பயனாயின. பிறகு, மனித அறிவும் சுவையும் முதிர முதிரப் புதிய புதிய இசைக்கருவிகளும் ஆடல் பாடல்களின் முறை வகுப்புகளும் அபிநய லட்சணங்களும் எழுந்தன. யாழ், குழல், முழவு முதலிய கருவிகள் மனிதக்குரலை இன்புறுத்தித் துணை செய்தன. இவ்வாறே இயற்கையான நடனம், பல கலை நுணுக்கங்களுடன் வளர்ந்து

ஒரு சாத்திரமானது. தகுந்த அருட்புலவர் அதற்கு இலக்கணமும் இலக்கியங்களும் வகுத்தனர். இதுதான் நடனக்கலையின் இயற்கையான வரலாறாகும்.

**வாழ்வே நாட்டியம்**

வாழ்வே, ஒரு நாட்டியக் கலைதான், மனித உணர்ச்சி தான் மூளையில் அறிவாகவும், நாவில் பேச்சாகவும் வாக்கில் கவியாகவும் குரலில் பாட்டாகவும் விரலில் கருவியிசையாகவும் நடம்புரிகிறது. உணர்ச்சிதான் முகபாவனைகளாலும் தலை, மார்பு, கைகள், இடுப்பு, கால்கள், அங்கங்களாலும் அபிநயத்துச் சாடையில் பேசுகிறது. பேச்சுடன் அபிநயமும் கலந்தே வருகிறது. பேச்சில்லாமல் சாடையாலேயே உணர்ச்சியை வெளிப்படுத்துகிறோம். ஒருவன் மனதை முகக் குறியும் கைக்குறியும் காட்டும். ஹா என்ன வியப்பு! அப்பா காரியம் ஒரு வழியாக முடிந்தது! என் இன்பமே வா! வா! என் கண்ணே சாப்பிடு! இப்படி இயற்கையாக வருவதே உண்மையான நாட்டியமாகும்.

வெள்ளையர் கலைமுறையில் நடனம் ஒரு சமுதாயத் தேவையாயிருக்கிறது. ஐரோப்பியர் சண்டையிலும் சமாதானத்திலும் ஆண், பெண் கைகோர்த்து நடனம் புரிகின்றனர். பாட்டும், கொட்டும், விருந்தும், கூட்டமும் சேர்ந்து அவர்கள் கால்களையும் கைகளையும் அசைத்து நடிக்க உற்சாகப்படுத்துகின்றன. பலவகையான கலை நடனங்கள் எல்லாம் ஐரோப்பியரிடையே முறையாக வளர்ச்சி பெற்றிருக்கின்றன. ஆனால் நாட்டியக் கலையின் உயிரையும், பயனையும் உயர்ந்த இலட்சியத்தையும் கண்டு போற்றியது நமது பாரத தேசமேயாகும். அதிலும் தமிழகமேயாகும்.

– யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

கொளுத்தி வைக்கப்படுகிறது. அரங்கின் பின்னால் நின்றுகொண்டு இருவர் கதையைப் பாட்டாகப் பாடுகின்றனர். பாட்டில் சொல்லப்படும் நிகழ்வுக்கும் உரையாடல்களுக்கும் ஏற்பக் கதாபாத்திரங்கள் கைகால்களை அசைத்தும், உரையாடலுக்கேற்ற முத்திரைகள் காட்டியும், முகத்தில் பல்வேறு ரசங்களைக் கொண்டுவந்தும் ஆடுவர். கதகளியில் கண்களும் கன்னமும் உதடுகளும் எல்லாம் நடிக்கின்றன என்றுதான் சொல்லவேண்டும்.

நிகழ்த்தப்போவது எந்தக் கதை என்று தெரிந்துகொண்டு, அந்தக் கதையை மனதில் உள்வாங்கிக்கொண்டு கதகளி ஆட்டத்தைப் பார்த்தால் மட்டுமே நன்றாக ரசிக்க முடியும். இல்லையென்றால் வெறுமனே பார்த்துக்கொண்டு இருக்கவேண்டியதுதான். இதனைக் 'கத அறியாதெ ஆட்டம் காணருது' என்று மலையாளத்தில் சொல்வதுண்டு.

மலைநாடாம் கேரளநாடு உலகுக்களித்த உன்னதக் கலை வடிவம் கதகளி.

– மொழிபெயர்ப்பு

இப்பாடப்பகுதி இணையத்திலிருந்து தொகுக்கப்பட்டு மொழிபெயர்க்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- உங்கள் பள்ளிக் கலைவிழாவின்போது கேரளத்தின் தனிக் கலையான கதகளிக் கலை நடைபெற உள்ளது. இதற்கான அறிவிப்பு தயாரியுங்கள்.
- கேரளக் கதகளியைப் பரதநாட்டியத்துடன் ஒப்பிட்டுக் குறிப்பு தயாரியுங்கள்.
- கதகளியின் தனித் தன்மைகளைச் சுட்டிக்காட்டி நண்பனுக்குக் கடிதம் எழுதுங்கள்.



# தந்தனத்தோம்...



## நாட்டுப்புறக் கலைகள்



மனிதனின் வாழ்வில் இயல்பாகத் தோன்றி விதிமுறை வகுப்பின்றி எளிமையாக வளர்ந்து உண்மையான உணர்ச்சிகளின் உறைவிடமாகப் பாமர மக்களைக் கவர்ந்து களிப்படையச் செய்யும் இனிய கலைகளை நாட்டுப்புறக் கலைகள் என்று அழைக்கலாம். தொடக்க காலத்தில் மனிதன் இயற்கையுடன் பின்னிப் பிணைந்தே வாழ்ந்து வந்தான். வாழ்வுக்கு வேண்டிய வசதிகள் வாய்ப்பாக அமையும் இடங்களில் குடியமர்ந்து உணவுக்குத் தேவையான தொழில்களைச் செய்து மன நிறைவு பெற்று இன்பப் பொழுது போக்காகப் பலவிதமானக் கலைகளை உருவாக்கி மகிழ்ந்துள்ளான். அவனுடைய களிப்புக்குக் கட்டுப்பாடுகளோ விதிமுறைகளோ கிடையாது. போட்டியும் பூசலும் அதிகம் இருக்க இடமில்லை. மக்கள் நெருக்கம் குறைந்த காலம். தன் திறமைக்குத் தக்கவாறு கலைகளை உருவாக்கும் சூழல் அமைந்திருந்தது. கலையுடன் கலைஞன் ஈடுபட்டுத் தனக்கும் பிறருக்கும் இன்பம் கொடுத்தான். சிறப்பாக இன்பக் களிப்பு என்ற ஒரே நோக்கத்துடன் நாட்டுப்புறக் கலைகள் தோன்றி வளர்ந்தன.



நாட்டுப்புறக் கலைகள் மனிதனின் உள்ளத்தில் ஊறி எழும் உண்மையான உணர்ச்சிகளின் வடிகால்களாக அமைந்துள்ளன. சுருங்கக் கூறின் இக் கலைகள் மக்களுடைய உணர்ச்சிகளின் உயிரோட்டமான மாற்று உருவங்கள் ஆகும். இன்பம் பொங்கி எழும். துன்பம் துவண்டு பாயும். வீரம் விளங்கிச் சிறக்கும். சினம் கடுகடுத்துத் தோன்றும். அச்சம் நடுநடுங்கிப் பதுங்கும். இழிவரல் அருகியும் நகை பெருகியும் காணப்படும். இத்தனையும் கூடிக் கலந்து மனித மனத்தை உருவகித்துக் காட்டுவது நாட்டுப்புறக் கலைகள். புற நடிப்பை விடவும் உள்ளத் துடிப்பே சிறப்பாகப் புலப்படும்.

உண்மையான உணர்ச்சியின் வெளியீடாக நாட்டுப்புறக் கலைகள் அமைவதனால் அவை மாசற்ற மக்களின் மனதைக் கவர்ந்து காலங்காலமாக வேர்விட்டுத் தழைத்து வளர்ந்துள்ளன. பெரும்பாலான நாட்டுப்புறக் கலைகளை மக்கள் ஈடுபாட்டுடன் சுவைத்து மகிழ்வதனால் மாறும் காலத்தாலும் மயக்கும் நாகரிகத்தாலும் அவற்றை மங்கச் செய்யவோ மறைத்துவிடவோ முடியவில்லை. இன்றும் நாட்டுப்புற மக்கள் இத்தகைய பழமையான கலைகளைத் தங்களுடைய வாழ்வியலின் ஒரு பகுதியாக மதித்துப் பாராட்டி உயிர்ப்புடன் வளர்த்து வருகின்றனர். நாகரிகத்தின் தாக்கம் நாட்டுப்புறக் கலைகளை நசுக்கப் பார்த்தாலும் அவற்றை ஆற்றலுடன் தாங்கி கால வெள்ளத்தைக் கடந்து அவை இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய உறுதியான பிடிப்பில் தான் நாட்டுப்புறக் கலைகளின் உண்மையான உயர்வை உணர முடியும்.

நாட்டுப்புறக் கலைகளில் மிகச் சிறந்த ஒரு கலையாக வில்லுப்பாட்டை உறுதியாகக் கூறலாம். திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் வில்லுப்பாட்டின் தாயகமாக விளங்குகின்றன. இக்கலை இல்லாமல் இங்குள்ள ஊர்த் தெய்வங்களுக்கு விழா நடப்பது இல்லை என்றே கூறலாம். இராமநாதபுரம் மாவட்டத்தின் தென்பகுதியிலுள்ள சில சிற்றூர்களிலும் வில்லுப்பாட்டு நடைபெறுகிறது. ஆனால் கலைஞர்கள் (அவர்களைப் 'புலவர்' என்றே கூறுவர்) நெல்லையிலும் குமரியிலும் தான் மிகுதியாக இருக்கிறார்கள்.

வில்லுப்பாட்டுக்குக் குறைந்தது ஐந்துபேர் வேண்டும். ஏழுபேர் பாடுவது மிகச் சிறப்பாக இருக்கும். வில் கூந்தல் பனங்கம்பு அல்லது மூங்கிலால் சீவிச் செய்யப்பட்டிருக்கும். அதன் மேல் பல வண்ணத் தாள்களை ஒட்டி அழகுபடுத்தி இருப்பர். அதன் இரு முனைகளையும் தோல் அல்லது நரம்பினால் ஆன நாண் கயிற்றால் வளைத்துக் கட்டி இருப்பர். அதில் அடித்ததும் இனிய நாணொலி பிறக்கும். வில்லில் வெண்கலத்தினால் செய்யப்பட்ட இனிய ஒலி மிக்க மணிகளை இடைவெளிவிட்டு ஒரு கம்பியில் கட்டி இணைத்திருப்பர். இரண்டு குட்டையான வீசுகோல்களைக் கொண்டு வில்லின் நாணில் அடித்ததும் மணிகள் குலுங்கி அசைந்து ஒலிக்கும். வீசுக்கோலிலும் வீசுமணிகளைக் கைப்பிடிக்கு மேல் பொருத்தியிருப்பர்.

வில்லிசைக்குத் துணையாக உடுக்கு, குடம், தாளம், கட்டை ஆகிய கருவிகள் பயன்படுத்தப்படும். குடத்தின் வாயில் ஒரு பத்தையைத் தட்டியும் குடத்தின் மேல் இடக்கையால் கொட்டியும் நல்ல தாள ஒலியை எழுப்புவர். பம்பையும் முன்னால் இணைக்கப்பட்டிருந்ததாகக் கூறுவர். இப்பொழுது சிலர் அர்மோனியம், புல்லாங்குழல் ஆகியவற்றையும் சேர்த்துக் கொள்கின்றனர். இந்தக் கருவிகளின் கூட்டொலியும் புலவர்களின் பாட்டொலியும் பாடுகின்ற கதைப் பொருளும் இணைந்து நாட்டுப்புற மக்களைக் கிறுகிறுக்கச் செய்துவிடும். அனைவரும் இரவெல்லாம் விழித்து வில்லிசையில் ஒன்றி விடுவதைக் காணக் காண வில்லுப்பாட்டின் உண்மையான சிறப்பும் உயர்வான கலைத்தன்மையும் உள்ளவாறு விளங்கும்.

– ஏ.என். பெருமாள்



**ஏ.என். பெருமாள் :** இவர் குமரி மாவட்டத்திலுள்ள உசரவிளை என்ற ஊரில் 1933 ஆம் ஆண்டு சித்திரை 1 இல் பிறந்தார். பள்ளி ஆசிரியராகவும், கல்லூரி விரிவுரையாளராகவும் பணியாற்றிய இவர் நாட்டுப்புறக் கலைகள் பற்றி ஏராளமான நூல்களை எழுதியுள்ளார். இவர் தம் இலக்கியச் சேவைக்காக எழுத்து ஏந்தல், தமிழ் மாமணி, கலைமாமணி போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார். இவர் எழுதிய 'தமிழக நாட்டுப்புறக்கலைகள்' எனும் நூலிலிருந்து இப்பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- உங்களுக்குத் தெரிந்த நாட்டுப்புறக் கலைகளைப் பட்டியலிடுங்கள்.
- பள்ளி இலக்கிய மன்றம் சார்பில் நடைபெறவுள்ள வில்லுப்பாட்டு நிகழ்ச்சியினை அனைத்து மாணவர்களுக்கும் தெரிவிக்கும் பொருட்டு சுற்றறிக்கை தயாரியுங்கள்.
- வில்லுப்பாட்டிற்குப் பயன்படுத்தப்படும் இசைக் கருவிகளைப் பற்றிக் கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.
- ஊர்த்திருவிழாவில் நீங்கள் கண்டு களித்த ஏதேனும் ஒரு நாட்டுப்புறக் கலையைப் பற்றி வருணனைக் குறிப்பு தயாரியுங்கள்.

## நேர்காணல்

"தந்தனைத்தோம் என்று சொல்லியே
வில்லினில் பாட – வில்லினில் பாட
வந்தருள் சந்தான தெய்வமே..."

என்று ஓங்கிக் குரலெடுத்து அழுத்தந் திருத்தமாகப் பாடுகிறார் வில்லிசைக் கலைமாமணி ஆத்தூர் கோமதியம்மாள். கனத்த சரீரம், கம்பீரமான தோற்றப் பொலிவு, கணீர் என்று ஒலிக்கும் சாரீரம். பதினோரு வயதில் தொடங்கிய கலைப்பயணத்தை எழுபது அகவையைத் தாண்டியும் மங்காத குரல் வளத்துடன் மறையாத நினைவாற்றலுடன் தொடர்ந்து கொண்டிருக்கின்றார். இவரது வில்லிசையில் இலக்கிய நயங்கள், நாட்டு, நகர் வருணனைகள், கண்ணி, சிந்து மெட்டுகள் புதுப்புனல் அருவியாய்க் கொட்டுகின்றன. இதிகாசம், காப்பியம், புராணம், பக்தி, கதைப்பாட்டு என்று இவரது நாவில் நடனமிடாத கதைகளுமில்லை, பாடினால் அருள்வந்து ஆடாத கொடைச்சாமிகளும் இல்லை. 'கோமதியின் வில்லிசை இல்லாமல் நம்மூரில் கொடைவிழா இல்லை' என்னுமளவிற்கு இளம் பருவத்தில் வில்லிசையில் கொடிகட்டிப் பறந்தவர். சொற்சிலம்பம் ஆடும் வில்லிசை வித்தகி. காந்தி ஜெயந்தி நாளில் 'வில்லுப்பாட்டில் காந்தி மகான்' கதை என்னும் பொருளில் கலையாட வந்த கலைமாமணி ஆத்தூர் கோமதியம்மாள் அவர்களிடம் செய்த நேர்காணல் பதிவு இது.

**நீங்கள் வில்லுப்பாட்டுக் கலையில் அறிமுகமானது குறித்து...**

நான் பத்து வயதாய் இருக்கும் போதே என் அம்மா இறந்துவிட்டார். எனக்குப் பின்னால் ஒரு தங்கை, தம்பி. என் அப்பா பிச்சையா பிள்ளை எனது அம்மா வழித் தாத்தா இராமையா பிள்ளையின் வில்லுப்பாட்டுக் குழுவில் தாளம் வாசிச்சுக்கிட்டிருந்தார். நல்லாப் பாடவும் செய்வார். வில்லுப்பாட்டு நடக்குற இடத்துக்கெல்லாம் எங்களையும் கூட்டீட்டுப் போவார் அப்பா. அங்கே தம்பி



தங்கையைப் பார்த்துக்கிறது என்னோட வேலை. நான் முழிச்சிக்கிட்டே வில்லுப்பாட்டைக் கேட்டுக்கிட்டிருப்பேன். வீட்டில் இருக்கும்போது வில்லுப்பாட்டுல வர்ற பாட்டுகளைப் பாடிப் பார்ப்பேன். என்னோட ஆர்வத்தைத் தெரிஞ்சுக்கிட்ட அப்பா என்னைய மேடையிலே உட்காரவச்சுச் சில பாடல்களைப் பாடச் சொல்வார். எனக்குப் பதினொரு வயசு இருக்கும். அப்பவெல்லாம் பெண்கள் மேடையில் ஏறி வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடத்துறதில்ல. பதினாலு வயசில நான் தனியாகவே கச்சேரி செய்யத் தொடங்கிட்டேன். மிருதங்கம் வாசிக்கவும் கத்துக்கிட்டேன். வறுமை காரணமா எங்க குடும்ப உறுப்பினர்கள் எல்லாரும் இந்தக் கலையில் ஈடுபட்டோம். திருமணத்துக்கு முன்னாலேயே திருச்சி வானொலி நிலைய ஆடிசன்ல தேர்வாகி இன்னைக்கு வரைக்கும் பல வானொலி நிலையங்கள்லயும், தொலைக் காட்சிகள்லயும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி செஞ்சுக்கிட்டு வர்றேன்.



**உங்களுடைய குருநாதர்(கள்) பற்றி...**

என்னுடைய குருநாதர்கள்ன்னா என் அப்பாவும், தாத்தாவும் தான். அவங்க தந்த உற்சாகம், பாதுகாப்புலதான் இந்தக் கலையில நான் ஈடுபட்டேன். அப்ப இருந்த அய்யா பிச்சைகுட்டி மாதிரி இருந்த பெரியவங்க நடத்துற வில்லுப்பாட்டு நிகழ்ச்சியையும் ஆர்வமாக் கேப்பேன். அந்தப் பாட்டுகளையும் பாடிப் பயிற்சி எடுத்துக்கிருவேன்.

**உங்களோட முதல் அரங்கேற்றம் எந்தக் கோயில் கொடையில் நடந்தது? அது பற்றிய நினைவு இருக்கின்றதா?**

என்னோட பிறந்த நாள் மாதிரி என்னோட முதல் அரங்கேற்றமும் நல்லா ஞாபகத்தில் இருக்கு. தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் வட்டம், சிவலார் பட்டிதான் நான் பிறந்த ஊர். 12 வயசில அங்க இருக்குற நிறைகுளத்தம்மன் கோயில் கொடையில் சீதாக் கல்யாணம் கதைய வில்லுப்பாட்டுல பாடி என்னோட அரங்கேற்றத்த ஆரம்பிச்சேன். நிறைகுளத்தம்மன் அருளால நல்லபடியா என்னோட வில்லிசை வாழ்க்கை தொடர்ந்துக்கிட்டிருக்கு.

**இசையை முறையாக யாரிடம் கற்றுக் கொண்டீர்கள்?**

நான் யாருகிட்டேயும் இசையைக் கத்துக்கிறல. எல்லாம் கேள்வி ஞானம்தான். திரையிசைப்பாட்டுகள் வழியாத் தான் நான் பாடக் கத்துக்கிட்டு மேடைகள்ல பாடத் தொடங்கினேன். ஒரு தடவை கேட்டுட்டா எந்தப் பாட்டையும் சாதகம் செஞ்சு அப்படியே பாடீருவேன். எனக்கு நிறைய இரசிகர்கள் இருக்காங்க. சில பாடல்களைத் திரும்பத் திரும்பப் பாடச்சொல்லிக் கேட்பாங்க.

**வில்லுப்பாட்டு இன்றைக்கும் செல்வாக்கோட நிகழ்த்தப்படுற பகுதி எது?**

கன்னியாகுமரி மாவட்டத்திலதான் அதிகளவில் வில்லுப்பாட்டுக்காரங்க இருக்காங்க. அங்க வில்லுப்பாட்டு இல்லாமக் கொடைவிழா இல்ல. கோயில்களும் அதிகம். எத்தனை நாள் கொடையின்னாலும் அத்தனை நாளும் வில்லுப்பாட்டுத் தவறாம நடக்கும், 'வில்லடிச்சான் கோயிலிலே விளக்கு வைக்க நேரமில்லை'ங்கிற பழமொழி அங்கதான் பொருந்தும்.

**வில்லுப்பாட்டு அதிகமாக எந்தெந்த நிகழ்வுகளில் இடம்பெறுகின்றது.?**

பெரும்பாலும் கொடைகள்லதான் வில்லுப்பாட்டு அதிகமா நடக்கும். சடங்கு, காதுகுத்து, கல்யாண வீடுகள்லயும் நிகழ்ச்சி நடத்தக் கூப்புடுவாங்க. அரசு விழாக்கள், தமிழக அரசின் இயல் இசை நாடக மன்றம், தென்னகப் பண்பாட்டு மையம், சுற்றுலாக் கழக விழாக்கள், வானொலி நிலையங்கள்ல நிகழ்ச்சி நடத்துவோம்.

**வில்லுப்பாட்டிற்கென்றே உள்ள தனித்த இசை முறைகளைப் பற்றி...**

வில்லுப்பாட்டு இசையே தனியானது. அந்த இசை, ராகம், மெட்டுகளை வேற எந்தக் கலையிலேயும் கேட்க முடியாது. வீரம், மகிழ்ச்சி, சோகம், துக்கம், சிருங்காரம், அருள், சாமியாட்டம், சாமி அழைப்புன்னு ஒவ்வொன்னுக்கும் தனித்தனி மெட்டு, பாடல்கள் இருக்கு. எந்த எடத்தில் அதைப் பாடணுமோ அந்த எடத்தில் எசையாப் பாடீருவேன். பாட்டும் உடுக்கும் பானைத்தாளமும் சேருறப்ப அந்தப் பாட்டோட கம்பீரமே தனிதான். கிளிக்கண்ணி, காவடிச் சிந்து, ஊஞ்சல் பாட்டு, அம்மானைப் பாட்டு, கும்மி இப்படி நெறைய ராகங்கள்ல பாடுவேன். இப்பப் பல குழுக்கள் வில்லிசையை மெல்லிசையாக, திரையிசையாக மாத்தீட்டாங்க.

– முனைவர் ஒ. முத்தையா

**முனைவர் ஒ. முத்தையா :** இவர் தமிழ்நாட்டில் காந்தி கிராமம், கிராமியப் பல்கலைக் கழகத்தில் நாட்டுப்புறவியல் துறையில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். நாட்டுப்புறவியலில் நாட்டுப்புறக் கலைகள் மற்றும் நாட்டுப்புற இலக்கியங்கள் ஆகியவற்றில் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். சேவையாட்டம், தேவராட்டம், நாட்டுப்புறக் கதைக் களஞ்சியம் போன்றவை இவரது முக்கிய நூல்கள்.

## செயல்பாடுகள்

- வில்லுப்பாட்டுக் கலையின் தனித்தன்மைகளைப் பற்றிக் கலந்துரையாடிக் குறிப்பு தயாரியுங்கள்.
- நாட்டுப்புறக் கலைஞர் ஒருவரைப் பேட்டி காண்பதற்கான வினாநிரல் எழுதுங்கள்.
- உங்கள் பள்ளிக் கலைவிழாவில் சிறப்பு விருந்தினராக நாட்டுப்புறக் கலைஞர் கலைமாமணி ஆத்தூர் கோமதியம்மாள் வருகை தர உள்ளார். அந்நிகழ்ச்சிக்கான வரவேற்புரை தயாரியுங்கள்.

- நாட்டுப்புறக் கலைகளையும் கலைஞர்களையும் பாதுகாப்பதைக் கருத்திற்கொண்டு பள்ளிக் காலைக் கூட்டத்தில் வாசிப்பதற்கான உறுதிமொழி ஒன்றைத் தயாரியுங்கள்.

## வில்லிசைக் கலைஞர் சாத்தூர் பிச்சைக்குட்டி

எஸ்.பி. பிச்சைக் குட்டி என்னும் சங்கரலிங்கம் பார்வதிநாதன் பிச்சைக் குட்டியின் சொந்த ஊர் கோவில்பட்டி. பணியின் காரணமாக சாத்தூரில் குடியேறினார். அந்தப் பெயரே அவருக்கு முன்னொட்டாக மாறிவிட்டது. இவர் ஆரம்பத்தில் படித்தது கோவில்பட்டி அரசுப் பள்ளியில். பள்ளி இறுதி வகுப்பு முடிந்ததும் அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படித்திருக்கிறார்.

பின்னர் சென்னைப் பல்கலைக்கழகம் வழி இண்டர்மீடியட் படித்திருக்கிறார்.

இவர் ஆசிரியர் பயிற்சி முடிந்ததும் சாத்தூர் அருகே உள்ள தியாகராஜபுரம் என்ற ஊர்ப் பள்ளிக்கூடத்தில் பணிக்குச் சேர்ந்தார். இங்கு இரண்டு ஆண்டுகள் வேலை பார்த்தார். பின்னர் சாத்தூர் அருகே உள்ள மேலக்கரந்தை ஊரிலுள்ள நடுநிலைப் பள்ளியில் வேலைக்குச் சேர்ந்தார். ஐந்து ஆண்டுகள் பணி செய்தார்.

### குறிப்பு வினைமுற்று

| | | |
|---|---|---|
| அண்ணாவி | : | தந்தனத்தோம் என்று சொல்லியே வில்லினைப் பாட வந்தோம். |
| பின்பாட்டுக்காரர் 1 | : | ஆமா... வில்லினைப் பாட வந்தோம். |
| பின்பாட்டுக்காரர் 2 | : | பள்ளிக்கூடத்தில் வந்தோம் அம்மா... தந்தனத்தோம் பாடினால் போதுமா? என்ன பாட வந்தோம்? |
| அண்ணாவி | : | சொல்லுவமில்லே .... தந்தனத்தோம் என்று சொல்லியும் குறிப்பு வினைமுற்றைப் பாட வந்தோம். |
| பி. பா. 2 | : | ஆமா ... குறிப்பு வினைமுற்றுண்ணா என்ன? |
| அண்ணாவி | : | பொன்னன், நாடன், ஆதிரையான், கண்ணன், நல்லோர், நடையன் |
| பி. பா. 2 | : | இப்படிப் பெயர்களை மட்டும் சொன்னா எப்படி? சரியாகச் சொல்லுங்கையா... |
| அண்ணாவி | : | இதுதான் குறிப்பு வினைமுற்று. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றுள் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு காலத்தை வெளிப்படையாகக் காட்டாது செய்பவனை மட்டும் காட்டும் சொல் குறிப்பு வினைமுற்று. |
| பி. பா 1 | : | ஆமா .... குறிப்பு வினைமுற்று |
| பி. பா. 2 | : | வந்த வேலை முடிந்தது. குறிப்பு வினைமுற்றும் புரிந்தது. எல்லோருக்கும் வணக்கம் சொல்லியே வில்லினால் பாடி முடித்தோம். |

பிச்சைக்குட்டி பிறவிக் கலைஞரோ, மரபுவழிக் கலைஞரோ அல்லர். அவர் வில்லிசைக் கலைஞராக வந்ததற்குத் தற்காலிகமான ஒரு நிகழ்ச்சி தான் காரணம். 1948 – இல் சாத்தூர் பகுதியில் காலரா நோய் பரவலாக இருந்தது. அரசு, எந்திரம்போல தீவிரமாகச் செயல்பட்டாலும் ஊர் மக்கள் காலரா பரவியதற்கு அம்மனின் குற்றம் என்று நம்பினர். சாத்தூர் மாரியம்மன் கோவிலில் விழா நடத்தினர். ஏற்கனவே மரபுவழிக் கவிதைப் பயிற்சியும் இசைப் புலமையும் நல்ல சாரீரமும் உடைய பிச்சைக் குட்டிக்குத் தானே வில்லிசை நிகழ்ச்சி நடத்தலாம் என்ற நம்பிக்கை வந்தது.

இவர் ஆரம்ப காலத்தில் தன் மாணவர்களுக்கு வில்லிசைக் கலையைப் பயிற்சி அளித்திருக்கிறார். அவர்களுடன் மேடையிலிருந்து பாடியிருக்கிறார்.

இவர் வில்லிசை வேந்தர், வில்லிசை பிரவீண, கலைமாமணி (1970 தமிழக அரசு) போன்ற பல விருதுகளைப் பெற்றிருக்கிறார். பிச்சைக்குட்டி தான் வாழ்ந்த காலத்தில் தீவிரமான படைப்பாளிகள், பிரபலமான விமர்சகர்கள், அரசியல் கட்சி பிரமுகர்கள் என எல்லோரும் பாராட்டும் படியாக வாழ்ந்திருக்கிறார்.

பிச்சைக்குட்டி நடத்திய வில்லுப்பாட்டுகளுள் கண்ணகி கதை, பாரதியின் பாஞ்சாலி சபதம், இந்திய சுதந்திர வரலாறு, கட்டபொம்மனின் கதை, காந்தி மகான் கதை போன்றவை முக்கியமானவை. பிற கலைஞர்களிடம் இருந்து இவர் வித்தியாசமானவர்.

தமிழ் இலக்கியங்களையும் கற்றவர். கவிதை எழுதவும் தெரியும். இதனால் வில்லுப்பாட்டில் சில மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கிறார். வில்லிசை நிகழ்ச்சியில் நீண்ட நேரம் பாட வேண்டும் என்ற மரபையும் தளர்த்தினார்.

மூன்று மணி நேர நிகழ்ச்சி என்பதை நடைமுறையில் கொண்டு வந்தார். முக்கிய பாடகர்கள் பாடும் போது இசைக் கருவிகள் மெல்ல ஒலிக்க வேண்டும். பாடல், விளக்கம் இரண்டையும் சொல்லும் போது தெளிவு வேண்டும். ரசிகர்களுக்குப் புரிய வேண்டும். உடுக்கு, குடம், டோலக்கு, ஹார்மோனியம் என்னும் இசைக்கருவிகளை இவர் பயன்படுத்தினார். ஆனால் இந்த இசைக்கருவிகளை இயக்கியவர்களுக்குச் சில நெறிமுறைகளைக் கற்றுத் தந்திருக்கிறார். இவருக்குக் குடம் அடித்த பூவலிங்கம், உடுக்கு அடித்த மீனாட்சிசுந்தரம், ஐயப்பன் போன்ற கலைஞர்கள் இவரைப் பற்றிக் கூறும் போது வில்லுப்பாட்டுகாரர்களுக்குச் சமூகத்தில் ஒரு மதிப்பைக் கொடுத்தவர் என்று கூறியுள்ளனர்.

– அ.கா. பெருமாள்



**அ.கா. பெருமாள் :** இவரது இயற்பெயர் அ. காக்கும் பெருமாள். 1947–ஆம் ஆண்டு குமரி மாவட்டம், பறக்கையில் அழகம்பெருமாள், பகவதிஅம்மாள் இணையருக்கு மகனாகப் பிறந்தார். ஓலைச் சுவடிகள் காட்டும் சமூகம், நாட்டார் நிகழ்த்துக் கலைகள் களஞ்சியம், தென் குமரியின் கதை, தென்னிந்திய தோல்பாவைக் கூத்து போன்றவை இவருடைய படைப்புகளுள் குறிப்பிடத்தக்கவை. இவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது, ஈரோடு ஜீவா அறக்கட்டளை விருது, கவிமணி விருது எனப் பல விருதுகள் கிடைத்துள்ளன. இவர் தற்போது நாகர்கோவிலில் வாழ்ந்து வருகிறார்.

## செயல்பாடுகள்

- சாத்தூர் பிச்சைக்குட்டி வில்லிசைக் கலைஞராக உருவானதற்கான காரணங்களைக் கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.
- உங்கள் பள்ளியில் குழந்தைகள் தினவிழாவை முன்னிட்டு வில்லிசைக் கலைஞர் மா. மாதவி அவர்களின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இதற்கான நிகழ்ச்சி நிரல் தயாரியுங்கள்.
- வில்லிசைக் கலைஞர் சாத்தூர் பிச்சைக்குட்டி பெற்ற விருதுகளை வரிசைப்படுத்துங்கள்.



# விருந்து





## விவேக சிந்தாமணி

ஒப்புடன் முகம லர்ந்தே யுபசரித் துண்மை பேசி
உப்பிலாக் கூழிட்டாலு முண்பதே யமிர்தமாகும்
முப்பழ மொடுபாலன்னம் முகங்கடுத் திடுவராயின்
கப்பிய பசியினொடு கடும்பசி யாகுந்தானே!

**விவேக சிந்தாமணி :** இந்த நூல் அனுபவ மூதுரைகளைக் கொண்ட தனிப்பாடல்களின் தொகுப்பு ஆகும். இந்நூலில் 135 பாடல்கள் உள்ளன. இந்நூலின் ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை.

## பெரும்பாணாற்றுப்படை

குன்று உ றழ் யானை மருங்குல் ஏய்க்கும்,
வண்தோட்டுத் தெங்கின் வாடுமடல் வேய்ந்த
மஞ்சள் முன்றில், மணம்நாறு படப்பை,
தண்டலை உழவர், தனிமனைச் சேப்பின்
தாழ்கோட் பலவின் சூழ்சுளைப் பெரும்பழம்
வீழ்இல் தாழைக் குழவித் தீம்நீர்
கவைமுலை இரும்பிடிக் கவுள்மருப்பு ஏய்க்கும்
குலைமுதிர் வாழைக் கூனி வெண்பழம்
திரள் அரைப் பெண்ணை நுங்கொடு, பிறவும்
தீம்பல் தாரம் முனையின், சேம்பின்
முளைப்புற முதிர்கிழங்கு ஆர்குவிர்

– கடியலூர் உருத்திரங்கண்ணனார்

**பெரும்பாணாற்றுப்படை :** பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான இந்நூலின் ஆசிரியர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் ஆவார். 500 அடிகளைக்கொண்ட இந்நூல் பேரியாழ் வாசிக்கும் பாணனொருவன் வறுமையால் வாடும் இன்னொரு பாணனைத் தொண்டைமான் இளந்திரையன் என்னும் மன்னனிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

### செயல்பாடுகள்

- 'முப்பழமொடு பாலன்னம் முகங்கடுத் திடுவராயின்
  கப்பிய பசியினொடு கடும்பசி யாகுந்தானே' – விவேக சிந்தாமணி

  'மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
  நோக்கக் குழையும் விருந்து' – திருக்குறள்

  இவ்விரு பாடல் அடிகளை ஒப்பிட்டுக் குறிப்பு தயாரியுங்கள்.
- விவேக சிந்தாமணி பாடலின் மையக்கருத்தைச்சுட்டி நயம் பாராட்டி எழுதுங்கள்.
- பெரும்பாணாற்றுப்படை பாடலிலுள்ள முன்றில், படப்பை, தாழை, மருப்பு, பெண்ணை போன்ற சொற்களை அகர வரிசைப்படுத்திப் பொருள் எழுதுங்கள்.
- முக்கனி – மா, பலா, வாழை இதுபோல நான்மறை, ஐம்புலன்கள், நவமணிகள் போன்ற தொகைச் சொற்களை விரித்து எழுதுங்கள்.

## பொய் மனிதர்கள்

சுப்புராசுவுக்குச் சென்னை புதிதல்ல. அடிக்கடி வந்து போகக்கூடியவர். பேரம் பேசி பொருள்களை எடுத்து வைத்தார். கையில் சரியான முகவரி இருந்தது. அவர் பரசுராமன் வீட்டை அடையும்போது மணி ஏழரை ஆகிவிட்டது. வீடு

உள் வீதியில் இருந்தது. பரசுராமன் வீடு சற்றுப் பெரிய வீடு. நவநாகரிகமாய்க் கட்டப்பட்டிருந்தது. அநேகமாய் ஒன்றரைக் கிரவுண்ட் இருக்கும்.

வெளியில் இருந்து பெல்லை அடித்தார். சில நிமிடங்கள் கழித்து உயரமாய், சிவப்பாய்ச் சதைப்பிடிப்பான பெண்மணி வந்தார்.

"யார் நீங்க. என்ன வேணும்?"

"அம்மா, நான் தோணுகாலிலிருந்து வர்றேன். என் பேரு சுப்புராசு. நம்ம மாரிமுத்து சாரு ஊரு. சாருக்குப் பிரண்ட்."

எதுவும் பேசாமல் கதவைத் திறந்து விட்டார் அந்தப் பெண். ஏதோ வேண்டா வெறுப்பாய் வரவேற்ற மாதிரி இருந்தது.

"சார் இருக்காரா?"

"இருக்கார், உள்ளே இருக்கார். கூப்பிடுகிறேன்" என்று சலிப்பாய்ச் சொல்லிக்கொண்டே உள்ளே போனார்.

வராந்தாவில் நின்று கொண்டிருந்தார் சுப்புராசு. சிறிது நேரம் கழித்துப் பரசுராமன் சார் வந்தார்.

"'வாங்க, வாங்க.." என்றார் பரசுராமன்.

"ஆமா, சார் நல்லா இருக்கீங்களா... பார்த்து மூணு, நாலு மாசமாச்சு. உடம்பு எல்லாம் எப்படி இருக்கு" என்றார் சுப்புராசு.

"நான் நல்லா இருக்கேன். என்ன செய்றது. நிறைய உடம்புப் பிரச்சினைகள். அதுவும் சிட்டி லைப், ரொம்ப டென்ஷன் பிடிச்சது. அதான் கொஞ்சம் டல்லா இருக்கேன். உட்காருங்க!" என்றார்.

வராந்தாவில் நான்கு பிளாஸ்டிக் நாற்காலிகள் கிடந்தன, சுவர் ஓரமாய்ச் செருப்பு வைக்கும் ஸ்டேண்ட் இருந்தது. அங்கிருந்த பிளாஸ்டிக் சேரில் உட்காரச் சொன்னார். அவரும் எதிரே உள்ள சேரில் அமர்ந்தார்.

"விவசாயமெல்லாம் எப்படியிருக்கு, இந்த வாட்டி நல்ல மழை போல இருக்கு. வெள்ளாமை நல்லா இருக்கும்னு நினைக்கிறேன்' என்றார் பரசுராமன்.

மேலே பேன் ஒன்று சுற்றியது.

### எல்லோர்க்கும் கொடுமதி

குடும்ப வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் ஒற்றுமையை ஏற்படுத்துகின்ற, மகிழ்ச்சியைத் தருகின்ற நல்ல செயல்பாடுகளை நாம் தொடர்ந்து செய்யும்போது, அவை பழக்கவழக்கங்கள் ஆகிவிடுகின்றன. அத்தகைய பழக்கவழக்கங்களைத்தான் நாம் பண்பாடு என்கிறோம். மிகப் பழங்காலத்திலிருந்தே உயர்ந்த பண்பாடுகளின் உடைமையாளர்களாக விளங்கிவருபவர்கள் தமிழர்கள். இது பொய்யல்ல, உண்மையே என்பதற்குப் பழந்தமிழ் இலக்கியங்கள் சான்று பகிர்கின்றன. தமிழர் பண்பாடுகள் உன்னதமானவை அவற்றுள் பகுத்துண்டு பல்லுயிர்களைக் காப்பதையும் விருந்தோம்பலையும் தமிழர்களின் தலையாய பண்புகள் எனலாம்.

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தரணி போற்றும் அருந்தமிழ்ப் புலவர் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவரது பெயர் பெருஞ்சித்திரனார். சேர்ந்தே இருப்பது புலமையும் வறுமையும்' என்பார்கள் அக்கூற்று பெருஞ்சித்திரனாருக்குப் பொருத்தமாகவே இருந்தது அவரது குடும்பம் வறுமையில் வாடித் தவித்தது மூப்பின் மிகுதியால் கண்பார்வை குறைந்து நடக்க முடியாததால் கோலைக் காலாகக்கொண்டு நடக்கிறாள் புலவரின் தாயார். அழுக்கேறிய உடையுடன் எல்லும் தோலுமாகக் காட்சியளிக்கிறாள் புலவரின் மனைவியார். குடிக்கத் தாய்ப்பால் கிடைக்காது தேம்பித் தேம்பி அழுகிறது புலவரின் இளம் குழந்தை. சோற்றுக் கலனைத் திறந்து பார்த்து, ஒரு பருக்கை கூடக் காணாது பசியால் வாடித் தளர்ந்து கிடக்கிறான் புலவரின் மூத்த புதல்வன். குடும்பத்தினரின் பசியாற்ற முடியாத நிலையில்

"இருங்க, வாறேன்". பரசுராமன் எழுந்து உள்ளே போனார். உள்ளே சிறிது நேரம் கழித்து ஏதோ உரத்த குரலில் சத்தம் கேட்டது. அவரது மனைவியின் குரல் உயர்ந்து ஒலித்தது.

அன்றைய பேப்பர், பக்கத்தில் ஒரு ஸ்டூலில் இருந்தது. அதை எடுத்துச் சுப்புராசு படிக்க ஆரம்பித்தார்.

பத்து நிமிடம் கழித்துப் பரசுராமன் சார், கையில் ஒரு காபி கோப்பையைச் சிறு தட்டில் எடுத்து வந்தார்.

"இந்தாங்க காபி சாப்பிடுங்க"

அதைக் குடித்த சுப்புராசுவிற்குக் கடைக் காபியே தேவலை போலிருந்தது.

"என்ன இது சாக்குப்பை – லக்கேஜ்"

"சார் எல்லாம் உங்களுக்குக் கொடுக்கத்தான் கொண்டு வந்தேன். இது நம்ம காட்டில் வெளஞ்ச வெங்காயம்; காய்கறிகள்; நீங்க விரும்பி சாப்பிடுற குழிப்பாகற்காய் மார்க்கெட்ல போய் இரண்டு படி வாங்கி வந்தேன். அப்புறம் உளுந்து, பாசிப்பயறு, வத்தல்" என்று ஒவ்வொன்றாக எடுத்து வைத்தார். அந்தச் சாக்கினுள் எல்லாப் பொருட்களும் சிறு சிறு பைகளாக அழகாய்க் கட்டப்பட்டிருந்தன.

"இந்தாங்க சார் துண்டுக்கருவாடு, நெத்திலி. சாருக்கு எல்லாம் தேடிப்பிடித்து வாங்கி வந்தேன்."

"என்ன பெரிய மளிகைக் கடையையே கொண்டு வந்திட்டீங்க போலிருக்கு" என்றார் சிரித்துக்கொண்டே பரசுராமன்.

குட்டிச்சாக்கில் இருந்த ஒரு சிறுத் துணிப்பையை மட்டும் எடுத்துத் தனியே வைத்தார்.

"என்ன சார். எல்லாம் நம்ம காட்டிலே விளயறது. கொண்டு வந்தா என்ன கொறைஞ்சா போறோம். இந்தப் பை என் தங்கச்சி தனலெட்சுமிக்குக் கொண்டு போகணும். அவங்க மதினி கொஞ்சம் பருப்புப் பொடி கொடுத்து விட்டிருக்கா. சரி சார், எல்லாத்தையும் எடுத்து உள்ளே வையுங்க.. உங்களால் தூக்க முடியுமா? நான் வேணா எடுத்து வர்றேன்" என்றார் சுப்புராசு.

"வேண்டாம் நானே எடுத்து வைக்கிறேன் உங்களுக்கு எதுக்குச் சிரமம்" ஒவ்வொரு பொருளாய் உள்ளே எடுத்துக் கொண்டு போனார்.

கொல்லையில் விளைந்த குப்பைக்கீரையைப் பறித்துவந்து உப்பின்றி வேகவைத்து அதையே உணவாகக் கொடுக்கிறாள் புலவரின் மனைவி.

இத்தகைய வறுமையின் கொடுமையை அனுபவித்த புலவர் குமணன் என்னும் குறுநிலமன்னனை நாடிச் செல்கிறார். .இதுகாறும் வரையாது வழங்கிப் புலவர்கள் முதலான இரவலர்களைப் புரந்துவந்த பாரி, ஓரி, காரி, அதியமான், பேகன், ஆய் அண்டிரன், நள்ளி எனும் கடையெழு வள்ளல்கள் இல்லாத நிலையினையும் தமது வறுமை நிலையினையும் குமணனின் சிறப்பினையும் எடுத்துரைத்துப் பாடுகிறார். புலவரின் வறுமையைக்கேட்டு மனமிரங்கி அவரது தமிழைக் கேட்டு மனம் மகிழ்ந்து பரிசில்களை வாரி வழங்குகிறான் குமணன். மீண்டும் அவனை வாழ்த்தி வணங்கி மகிழ்ச்சியோடு வீடு திரும்புகிறார் புலவர்

வீட்டை வந்தடைந்த புலவர் தம் மனைவியை நோக்கி 'அம்மையே இவை முதிரைமலைத் தலைவன் குமண வள்ளல் என் தமிழுக்குத் தலைவணங்கிக் கொடுத்த செல்வங்கள் நாம் மிகவும் வறுமையால் வாடுகின்றவர்கள்தாம். அதற்காக இந்த செல்வம் முழுவதையும் நாமே பாதுகாத்து வைத்துக்கொண்டு. நீண்டநாள் மகிழ்ச்சியோடு வாழலாம் என்று எண்ணாதே இந்தப் பொருட்களைப் பங்கிட்டு எல்லோருக்கும் கொடு அவ்வாறு கொடுக்கும்போது யார் யாருக்கெல்லாம் கொடுக்கவேண்டும் என்று என்னிடம் கேட்கவேண்டாம். நீ யார் யாரையெல்லாம் விரும்புகிறாயோ அவர்களுக்கெல்லாம் கொடு. உன்னை யார் யாரெல்லாம் விரும்புகிறார்களோ அவர்களுக்கும் கொடு.

இடையில் மனைவியைக் கூப்பிட்டார். அந்த அம்மாள் "இங்கே எனக்கு நிறைய வேலையிருக்கு என்னால வர முடியாது" என்று வெளியில் கேட்கும்படிச் சத்தமாய்ச் சொன்னாள்.

"இருங்க ஒரு முக்கிய வேலையிருக்கு முடிச்சுட்டு வந்துர்றேன். பேப்பர் பாருங்க" எழுந்து உள்ளே போனார்.

மணி எட்டரை ஆகிவிட்டது. சுப்புராசுக்குக் குளிக்க வேண்டும் போல் இருந்தது.

இரயிலில் வந்த கசகசப்பு. உடம்பெல்லாம் இரும்புத்துரு வாசனை ஒட்டியமாதிரி இருந்தது. உள்ளே ஹால் பெரியதாக இருந்தது. உள்ளே போய்ப் பார்க்கலாமா என்று மனதில் சிந்தனை ஓடியது. வந்த விருந்தாளியை இப்படி வராந்தாவில் உட்கார வைக்கலாமா என்று தோன்றியது. சார் ஏதோ அவசர வேலையாய் இருப்பதால் மறந்திருக்கலாம் என்று தோன்றியது. மனம் பழைய நினைவுகளில் ஓடியது.

பரசுராமன் சார் சுப்புராசாவின் உறவினர் இல்லை. தோணுகாலில் இருக்கும் மாரிமுத்து சாரின் வீட்டுக்கு சார் வருவார். அரசாங்க ஜீப்பில் வருவார். இரண்டு நாட்கள் தங்குவார். மாரிமுத்து சார் கோவில்பட்டியிலுள்ள அரசு மேல்நிலைப்பள்ளி ஆசிரியர். ஊரிலிருந்து தினமும் போய் வருவார். ஊரில் நல்ல விவசாயம். வீட்டம்மா லெட்சுமியும்கூட டீச்சர்தான். பக்கத்துப் பள்ளியில் வேலை. விவசாயத்தை விடாமல் இருவரும் பார்ப்பார்கள்.

மாரிமுத்து சாருக்குப் பத்து ஏக்கருக்கு மேலே தோட்டம். பக்கத்துத் தோட்டம் சுப்புராசுவினுடையது. தோட்டத்தில் பம்புசெட் அருகே ஒரு செட் போட்டிருப்பார்கள். பரசுராமன் சார் வந்தால் அங்குத்தான் இருப்பார். தென்னந்தோப்புக்கு நடுவே குளு குளுப்பான இடம். பம்பு செட்டைச் சுற்றி ரம்யமான சூழ்நிலை. நிறைய பூச்செடிகள் வைத்து டீச்சர் பராமரித்தார்கள். அந்தத் தென்னங் கீற்றுக்களால் ஆன செட். எந்நேரமும் குளுமையாய் இருக்கும். பகல் நேரங்களில் அங்கேயே இருவரும் பேசிக்கொண்டு இருப்பார்கள். சாப்பாட்டிற்கு மட்டும் வீட்டிற்குப் போவார்கள். பரசுராமன் சார்

நாம் பசியால் வாடியபோது நமக்கு உதவிக்கரங்கள் நீட்டிய சுற்றத்தார்களுக்கும் கொடு எல்லோருக்கும் கொடு" என்கிறார் அந்தத் தண்டமிழ்ப் புலவர் பெருஞ்சித்திரனார். என்னே அவரது மனிதநேயம்|சங்க இலக்கியம் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூற்றில் 133 முதல் 153 வரையிலான பாடல்களில் இச்செய்திகளைப் படிக்கலாம்.

இருப்பதையெல்லாம் நாமே அனுபவித்து வாழலாம் என்றெண்ணாது பலரும் இன்புறப் பகுத்துண்டு வாழ்வதையும் விருந்தோம்பலையும் தலையாய பண்புகளாகக் கருதியவர்கள் தமிழர்கள். இவ்வாறு கொடுத்து வாழ்வதால் நாம் எதையும் இழந்துவிடப் போவதில்லை. மாறாக எல்லா ஆக்கங்களும் நம்மை வந்தடையும் என்பதுதான் உண்மை. இதனையே திருவள்ளுவர் 'காக்கை கரவா கரைந்து உண்ணும் ஆக்கமும் அன்ன நீரார்க்கே உள, என எடுத்துரைத்தார். பகுத்துண்டு வாழ்வதையும் விருந்தோம்பலையும் குறித்து எல்லாத் தமிழிலக்கியங்களும் எடுத்தோதியிருக்கக் காணலாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் எனச் சொல்லிச்சென்றவர் மணிமேகலை எனும் காப்பியம் தந்த சீத்தலைச் சாத்தனார். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் எனப் பாடியவர் இராமலிங்க வள்ளலார். நற்பண்புகள் எல்லாவற்றிலும் தலையாய பண்பு பகிர்ந்தளித்து வாழ்வதுதான் என்பதைப் 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' என உறுதிபடக் கூறினார் பொய்யாமொழியார் வள்ளுவப் பெருமகனார். நாமும் இத்தலையாய பண்பினை நாளும் பின்பற்றுவோம்.

– கோ.மா குணசீலன்

முத்துச்சாமி உடன் படித்தவர். கவர்மெண்டில் செல்வாக்கான பதவியில் இருப்பதாகச் சொல்வார்கள்.

பக்கத்துத் தோட்டம் என்பதால் எட்டிப்பார்த்து அப்படியே பேசிப் பழக்கமாகி விட்டது. இந்தப் பழக்கம் நட்பாய் இறுகியது. ஒருதடவை பிரியத்தில் சுப்புராசு, வீட்டிற்குச் சாப்பிடக் கூப்பிட்டிருந்தார். அவர் மனைவி சுப்புலட்சுமி நன்றாகச் சமைப்பாள். காலை இட்லி, தோசை,சாம்பார், சட்னி, வடை என்று பண்ணியிருந்தார்கள். சட்னி ஆட்டு உரலில் ஆட்டிச் செய்து வைத்திருந்தாள். பரசுராமன் சாருக்கு அப்படி வைத்தால்தான் பிடிக்கும் என்பார்கள்.

பரசுராமன் வந்தார்.

"சட்னி, ரொம்ப அருமை, சாம்பார் கைமணம் கமழுது" என்று ரசித்துச் சாப்பிட்டார். சட்னியையும், சாம்பாரையும் ஊற்றி ஊற்றிச் சாப்பிட்டார்.

அவரும் சுப்புராசுவும் முடிக்கும்போது இரண்டு சட்டிகளும் ஏறக்குறைய காலி. அவர் சாப்பிட்டு முடித்துப் போனவுடன் சுப்புலட்சுமி சொன்னாள்.

"என்ன இந்த ஆள் காணாததைக் கண்ட மாதிரி சாப்பிடுகிறார்... மத்தவங்களுக்கு இருக்கான்னு பார்க்க வேண்டாமா?"

"அட சும்மா இரு. அவர் ருசிச்சு சாப்பிட்டாரு. சாப்பிடறதிலே கூச்சம் இருக்கக்கூடாது" என்றார் சுப்புராசு.

"என்னமோ.. உங்க பழக்கம். இதிலே பாதி அளவாவது, நம்ம மாதிரி ஆளுக போனா அவுக வீட்டிலே செஞ்சா சரிதான்" என்றாள் லட்சுமி.

"ஆமா.. நீ ரொம்ப கண்டவ... அவர் படிப்பென்ன... பழக்கமென்ன.. எதையாவது பேசாதே.."

சுப்புலட்சுமி அதன் பிறகு ஒன்றும் பேசவில்ல. மற்றவர்களுக்கு அவள் மறுபடியும் சட்னி அரைத்தது வேறு விஷயம்.

மணி எட்டு நாற்பது ஆகிவிட்டது. சாரைக் காணோம். உள்ளே என்ன செய்கிறார் என்று தெரியவில்லை.

வருடம் பலமுறை சுப்புராசு சென்னை வருவார். தங்கை வீட்டில்தான் தங்கல். பெரிய வீடு. தங்கையும், மாப்பிள்ளையும் அவரைத் தாங்குவார்கள். மாப்பிள்ளையின் பைக்கை எடுத்துக் கொண்டு எல்லா இடத்திற்கும் போய்வருவார்.

இந்தத் தடவை சென்னை வரும்போது பரசுராமன் சாரைப் பார்க்க வேண்டும் என்று நினைத்தார். வெள்ளாமைகள் எடுத்து வீடு சேர்த்த கையோடு கிளம்பிவிட்டார்.

சென்னை வரும்போது அட்ரஸ் வாங்க மாரிமுத்து சார் வீட்டுக்குப் போய் விஷயத்தைச் சொன்னார். "அப்படியா" என்றார், சார் சுரத்தில்லாமல். "பரசுராமன் சாருக்குக் காய்கறி, மத்த சாமான்களை எடுத்துட்டுப்போறேன். சும்மா போனா நல்லா இருக்குமா".

"போங்க, போய் பார்த்துட்டு வாங்க, கேட்டதாச் சொல்லுங்க. தனத்தையும், மாப்பிள்ளையையும் ரொம்ப கேட்டதாகச் சொல்லுங்க" என்றார் மாரிமுத்து சார்.

"தனத்துக்கு என்ன கொண்டு போறீங்க" என்றார் லட்சுமி டீச்சர். "என்ன டீச்சர் அவங்க மதினி தனியா எடுத்து வச்சிருக்கா. வருஷா வருஷம்தான் சுமக்கிறோமே.. பத்தாதா. இந்த வருஷம் அவளுக்குக் கம்மிதான்.. சாருக்கு வேற கொண்டு போறேன். எவ்வளவு சுமக்கறது!"

"மற்றவர்களுக்குக் கொண்டு போறதைவிட உடன் பிறந்தாளுக்குக் கொண்டு போனா மரியாதை இருக்கும்" சுள்ளென்று பதில் சொன்னார் டீச்சர்.

டீச்சரின் வார்த்தைகளின் அர்த்தம் புரியவில்லை.

"எதுக்குக் கண்டதையும் பேசுற. நீங்க போய்ட்டு வாங்க தம்பி" என்றார் மாரிமுத்து.

மணி ஒன்பது ஆகிவிட்டது. பேப்பரை வரி வரியாய்ப் படித்தாயிற்று. உள்ளே போனவரைக் காணவில்லை.

உள்ளே ஹாலில் டி.வி.யின் சத்தம் கேட்டது. எழுந்து உள்ளே எட்டிப்பார்த்தால், உள்ளே ஒரு பெரிய பையன் டவுசர் போட்டுக்கொண்டு டி.வி. பார்த்துக் கொண்டிருந்தான். சாருடைய பையனாக இருக்கலாம்.

ஹால் விஸ்தாரமாய் இருந்தது. பெரிய பெரிய சோபாக்கள், பெரிய டீவி., டெக் என்று மிக நவீனமயமாக இருந்தது. பையன் இவரைப் பார்த்துவிட்டு எதுவும் பேசாமல் மறுபடியும் டீவியில் ஆழ்ந்துவிட்டான்.

சுப்புராசுவிற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நேரம் போய்க் கொண்டு இருந்தது. ஏற்கனவே தனத்திடம் "சார் வீட்டுக்குப் போய் வருவேன்" என்று சொன்னதால் தேட மாட்டார்கள்.

சாரைக் காணோம்.

"தம்பி, அப்பாவைக் கூப்பிடு" என்றார் சுப்புராசு. பையன் அவரை ஏறிட்டுப் பார்த்தான்.

அசையாமலேயே "டாடி – இங்கே ஒருத்தர் உங்களைக் கூப்பிடுகிறார்" என்று பலமாகக் கத்தினான்.

எந்தவித பதிலும் இல்லை. சமையலறையில் மிக்ஸி ஓடும் சத்தம் கேட்டது.

சுப்புராசு "சார், சார்" என்று குரல் கொடுத்தார்.

பரசுராமன் சார் அறையிலிருந்து வெளியில் வந்தார். "சாரி உங்களை மறந்திட்டேன். கொஞ்சம் வேலை. கம்பியூட்டரில் மெயில் பார்க்க வேண்டியிருந்தது. அதான்... நீங்க கிளம்பிட்டிங்களா"

சுப்புராசுவிற்குச் சுரீரென்றது. இவர் வீட்டில் காலையில் இருந்து காத்துக் கிடக்கிறோம். ஒரு வார்த்தை உள்ளே வா என்று அழைக்கவில்லை, உற்றது கேட்கவில்லை. ஒரு வார்த்தை மாரிமுத்துசாரைப் பற்றி கேட்கவில்லை.

"வந்து நேரமாச்சு சும்மாவே உட்கார்ந்திருக்கேன். குளிக்கணும், அடுத்த சோலிகளைப் பார்க்கணும்ல."

"ஆமா, ஆமா" என்றார் அவர்.

"இது உங்க பையனா சார்... சாருக்குப் பொண்ணு உண்டுல்ல?"

"ஆமாங்க. இது பையன், கிருஷ். காலேஜ் படிக்கிறான். பொண்ணு இன்னும் எழுந்திருக்கல. தம்பி இவர் நம்ம மாரிமுத்து சார் ஊர்க்காரர். சும்மா பார்க்க வந்திருக்கார்"

பையன் ஒரு மரியாதைக்கு கூட அவரை ஏறிட்டுப் பார்க்கவில்லை. டீவியில் ஆழ்ந்திருந்தான். ஏதோ அந்நியன் மாதிரி நிற்பது போல் இருந்தது சுப்புராசுவிற்கு.

"அடுத்து எங்கே போகணும்."

"தங்கச்சி தனம் வீட்டுக்குப் போகணும். அவங்க முகப்பேரிலே இருக்காங்க. அங்கே போனபின்புதான் மத்ததெல்லாம்" என்றார் சுப்புராசு.

"அப்படியா! கிளம்புங்க. வெளியில் போனால் பக்கத்தில் ஆட்டோ ஸ்டாண்ட் இருக்கு. ஐம்பது ரூபா கேப்பான். இருபது நிமிடத்தில் போய்விடலாம். இப்போ கொஞ்சம் பிஸி. அடுத்த தடவை வரும்போது வாங்க. ப்ரீயாகப் பேசலாம்" என்றார் பரசுராமன்.

சுப்புராசுவிற்கு ஒன்றும் ஓடவில்லை. என்ன மனிதர் இவர். அங்கே வந்து பேசிய பேச்சுக்கள் என்ன? சப்புக்கொட்டி சாப்பிட்ட விபரம் என்ன? இவ்வளவு தூரம் வந்து பொருட்களைச் சுமந்து எடுத்து வந்து பார்க்க வந்திருக்கிறோம். குளித்தாயா, ஒரு வாய் சாப்பிடுகிறாயா என்று கேட்கவில்லை. என்ன மனிதர் இவர். வீட்டில் யாரும் ஒரு வார்த்தை பேசவில்லை. எரிச்சலாய் வந்தது. பசி வேறு வயிற்றைக் கிள்ளியது.

"அப்போ வர்றேன் சார்"

"போய்ட்டு வாங்க. அடுத்த தடவை ஊருக்கு வரும்போது சந்திப்போம்."

சுப்புராசு செருப்பை மாட்டி திரும்புவதற்கு முன், பரசுராமன் உள்ளே போய்விட்டார்.

சுப்புராசு வெளியில் வந்தார். கேட்டைச் சாத்திவிட்டு நடந்தார். பெருத்த அவமானமாய் இருந்தது. சகமனிதனை மதிக்கத் தெரியாத இவர் என்ன உலக விஷயம் பேசி என்ன பயன். தெருவில் இறங்கி நடந்தார்.

சுப்புராசுவிற்கு மாரிமுத்து சாரின் பேச்சு நினைவுக்கு வந்தது. மாரிமுத்து சாருக்கு இந்த அவலம் நேர்ந்திருக்கலாம். போன தடவை ஏதோ வேலைக்குச் சென்னை வந்தபோது சாரைப் பார்க்கப் போவதாகச் சொன்னார், இங்கே உள்ள நிலையைப் பார்த்துத்தான் அப்படி விட்டேத்தியாகப் பதில் சொன்னாரோ?

"மற்றவர்களுக்குச் செமந்து கொண்டு போறதைவிட உடன்பிறந்தாளுக்குக் கொண்டு போனா மரியாதை இருக்கும்."

லெட்சுமி டீச்சர் சொன்னதன் அர்த்தம் தெளிவாகப் புரிந்தது.

– இரா. நந்தகோபால்

**இரா. நந்தகோபால் :** கரிசல் பூமியில் பிறந்த இவர், அரசியல் அறிவியலில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார். தமிழக அரசின் பல்வேறு துறைகளில் பணியாற்றிய இவர், தற்போது ஐ.ஏ.எஸ். பதவி உயர்வு பெற்று மதுரை மாநகராட்சி ஆணையராகப் பணிபுரிந்து வருகிறார். இவரது படைப்புகள் வாழ்வியல் அனுபவங்களையும் மானுட அவலங்களையும் தெளிவுபடுத்துகின்றன. 'பொய் மனிதர்கள்' என்ற கதையானது இவர் எழுதிய 'பிம்பங்கள்' என்ற கதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- 'தமிழ்க்கலைகள்' எனும் தலைப்பில் பள்ளி இலக்கிய மன்றத்தில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவுரை எழுதுங்கள்.
- நலிவடைந்து வரும் நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாப்பதற்காக மக்களிடையே விழிப்புணர்வூட்டும் வகையில் துண்டுப்பிரசுரம் எழுதுங்கள்.
- 'இன்றைய மக்களிடம் விருந்தோம்பல் பண்பு குறைகிறதா? வளர்கிறதா?' என்ற தலைப்பில் நடைபெறும் பட்டிமன்றத்தில் பேச நீங்கள் விரும்பும் ஏதேனும் ஒரு தலைப்பிற்கான குறிப்பு தயாரியுங்கள்.
- பள்ளி இலக்கிய இதழில் வெளியிடுவதற்காக 'தமிழர்களும் விருந்தோம்பலும்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.



அலகு 5

# கூடி வாழ்!



சமூக மயமாக்கல் என்பது மனிதன் சமூகத்தில் ஒன்றிணைந்து வாழ்வதைக் குறிக்கும். காலங்காலமாக மனிதர்கள் தங்கள் குடும்பம், இனம், சமூகம் என்னும் உறவுகளுடன் வாழ்ந்து வளர்ச்சி நிலையை அடைந்துள்ளனர். சமூகத்தின் அடிப்படை அமைப்பே குடும்பம். குடும்பம் சிறப்பாக அமைந்தால்தான் சமூகமும் நாடும் சிறப்படையும். அத்தகைய குடும்ப உறவுகளைப் பேணிக் காப்பது நம் கடமை. 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்ற கூற்றிற்கேற்ப மனிதர்கள் கூடி வாழ்ந்தால் குடும்பமும் சமுதாயமும் நாடும் வளமடையும்.

# குடும்ப உறவு



## உறவு

யாதும் ஊரே யாவரும் கேளிர்
    என்றார் கணியன் பூங்குன்றன்!
யாதும் ஆகி நின்றிடும் கடவுள்
    ஈன்ற மக்கள் எனலாலே!
நாதன் ஒருவன் நாமவர் குழந்தை
    நாவால் இதனை நவின்றாலும்
ஈதுள் எத்தனை உறவுகள் அடக்கம்!
    எண்ணிப் பார்த்தால் விந்தையலோ!

அம்மா என்னும் முதலில் குழந்தை!
    அப்பா என்னும் அடுத்தபடி!
சும்மா நாவைச் சுழற்றிட் டாலும்
    சொல்லை மாமா என்போமே!
இம்மை செய்த பயனே என்போம்!
    எங்கள் அண்ணன் எனும்போதே!
எம்மாம் இன்பம் இதயம் எழுமோ
    எங்கள் தங்கை எனவழைத்தால்!

யாரோ ஒருவர் இறந்தார் என்ன
    யாதும் அறியா திருப்போரும்



சீராய் வளர்த்த செல்வக் குழந்தை
  சிறிதே நொம்பலம் கொண்டாலும்
ஓரா யிரமாய்ச் சிந்தை ஓங்க
  ஓவென் றலறித் துடிப்பதுவும்
பாரோர் அறிவார்! பகர்தல் வேண்டா!
  பாசம் உறவால் பலநிலையாகும்!

நேரில் காணா நிலையே எனினும்
  நினைந்தால் உள்ளம் மகிழுதன்றோ!
பாரில் எங்கோ பாதிப் பென்றால்
  பதைக்கும் உள்ளம் நாமறிவோம்!
ஊரில் பயன்மரம் உலர்ந்த தெனினே
  உள்ளம் துயரம் உறுதன்றோ!
தேரின் காரணம் தெரிவோம் உறவே!
  தெளிந்தே உறவை வளர்த்திடுவோம்!

வானில் மின்னும் வகையாம் உடுக்கள்
  வலமே வருதல் உறவாலே!
கானில் வாழும் கணக்கில் விலங்குகள்
  கலகல வாழ்தலும் உறவாலே!
ஆன செல்வம் அள்ளி வழங்கும்
  ஆழி உயிர்கள் உறவாலே!
தனமாய்க் கொண்டும் கொடுத்தும் தரையில்
  தரமாய் வாழ்வதும் உறவாலே!



வறுமை எல்லாம் வளமாய் மாற
  வாழ்வில் வேண்டும் நல்லுறவே!
திறமை எல்லாம் திக்கில் பரவ
  தேர்ந்த உறவும் தேவையன்றோ!
உறவை வளர்ப்போம்! உயர்ந்து வாழ்வோம்!
  உலகில் நூலும் உறவன்றோ!
சிறப்பாய் வாழச் சீலம் உறவே!
  செம்மை வாழ்வும் உறவாலே!

– கு. நாராயணப்பெருமாள்

**கு. நாராயணப்பெருமாள் :** குற்றாலதாசன் எனும் புனைப்பெயர் கொண்ட இவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆளூர் எனும் ஊரில் 1947 ஜூன் 7 ஆம் நாள் பிறந்தார். மேனிலைப் பள்ளித் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். இவருடைய படைப்புகள் 'குற்றாலதாசன் கவிதைகள்' எனும் நூலாக வெளிவந்துள்ளன.

### செயல்பாடுகள்

- 'உறவு' என்ற கவிதையினை நயம் பாராட்டி எழுதுங்கள்.
- 'கூடிவாழ்ந்தால் கோடி நன்மை' என்னும் பழமொழிக்கேற்ப கூட்டுக் குடும்ப வாழ்வின் முக்கியத்துவத்தையும் நன்மையையும் விளக்கும் வகையில் நண்பனுக்குக் கடிதம் எழுதுங்கள்.



ST-807-5-TAMIL (AT)-9-VOL-2

- "உலகில் நூலும் உறவன்றோ" – இவ்வரியின் மூலம் நீங்கள் புரிந்துகொண்ட கருத்தினைக் குறிப்பாக எழுதுங்கள்.
- யானைகள் கூட்டமாய்க் கூடி வாழ்வதைக் குறித்து குறிப்பு தயாரியுங்கள்.
- தனிமனித முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவுவது சமூக உறவா? குடும்ப உறவா? என்னும் தலைப்பில் நிகழவிருக்கும் பட்டிமன்றத்திற்கான உரை தயாரியுங்கள்.

## ஆயா

ஓர் ஊர்ல ஓர் ஆயா இருந்துச்சி. அந்த ஆயா அப்பாவைப் பெத்த ஆயா, பெயரன் எப்பவும் ஆயா ஆயான்னுப் பின்னாடியே சுத்திட்டு இருப்பான். ஒருநாள் இவன்கூடப் படிக்கிற பையன் இவன் கிட்ட, "எங்க வீட்ல எல்லாம் நாங்க பாட்டின்னுதான் கூப்பிடுவோம். வேலைக்காரங்களைத்தான் ஆயான்னு சொல்லுவோம்"னு சொன்னதைக் கேட்டதும், இவனுக்கு என்னமோ மாதிரி ஆயிடுச்சு. அந்தப் பையன் பணக்காரப் பையன். அவன் சொன்னா, அது சரியாத்தான் இருக்கும்னு தோணிச்சு. அதற்கப்புறம் ஒரு ரெண்டு நாள் இவனும் பாட்டின்னு கூப்பிட ஆரம்பிச்சான். அது ஏதோ ஆயாவுக்கு பணக்கார கவுன் போட்ட மாதிரி தோணவே ஆயாவுக்குப் பணக்காரத் தோற்றம் வேணாம்... அது ஏழையாவே இருந்துட்டு போகட்டும்னு விட்டுட்டான்.



அப்பாவைப் பெத்த அந்த ஆயாவை இவனுக்கு ரொம்பப் பிடிக்கும். இவனை வளர்த்தது அந்த ஆயாதான் செக்கச்செவேல்னு அழகா இருக்கும். அழகுலயே பல அழகு இருக்கு. தீ மாதிரி மிரட்டுற அழகு; அருவி மாதிரி பிரமிக்க வெக்கிற அழகு; கடல் மாதிரி கொந்தளிக்கிற அழகுன்னு சொல்லிக்கிட்டே போகலாம். அந்த ஆயாவோட அழகு, மலை மாதிரி அமைதியான அழகு, முதுமையோட கோடுகளும் சேர்ந்து அந்த அழகை ஓர் அற்புதமான ஓவியமா மாத்தியிருந்தது.

அந்த ஆயா சுத்த சைவம். வாரத்துல நாலு நாள் விரதம் இருக்கும். அதனால, வீட்ல அசைவம் சமைக்க மாட்டாங்க. இவன் இப்ப வரைக்கும் அசைவத்தை ரொம்ப விரும்பிச் சாப்பிடறதுக்கு அதுவும் ஒரு காரணம்.

ஆயா, பதிமூணு வயசுல கல்யாணமாகி தாத்தாவுக்கு வாக்கப்பட்டு வந்துச்சாம். இவன் பொறக்குறதுக்கு முன்னாடியே தாத்தா இறந்துட்டாரு. அந்தக் காலத்துல வண்டி கட்டிப் போயி, மகாத்மா காந்தியோட பேச்சைக் கேட்டது; சுதந்திரம் வந்தப்போ.. ஊரே கொண்டாட்டமா இருந்ததுன்னு நெறைய கதை சொல்லும்.

கதை கேட்கிறதுன்னா, இவனுக்கு அப்படிப் பிடிக்கும். ஆயாகிட்ட இவன் கேட்ட கதைகள்ல கம்பளம் பறக்கும்; மோதிரம் பேசும்; ஏழு கடல் தாண்டி,

ஏழு மலை தாண்டி, கிளியோட கழுத்துல இளவரசியோட உயிர் இருக்கும்; தெனாலிராமனோட கத்தரிக்காய்க்கு கிரீடம் முளைக்கும்.

இவன் ஆயா மடியில படுத்துக்கிட்டே கதை கேப்பான். சமையலறைப் புகை, பூண்டு, வெங்காயம், விபூதின்னு கலப்படமா ஆயா மேல ஒரு வாசனை அடிக்கும். அது இவனுக்கு ரொம்பப் பிடிக்கும். பாதி கதையில தூங்கிட்டாலும் கனவுக்குள்ள அவங்க குரல் கேட்டுக்கிட்டே இருக்கும்.

இவனுக்குச் சின்ன வயசிலேயே அம்மா இறந்துட்டதால, அந்த ஆயா இவனுக்கு எல்லாமா இருந்துச்சி. இவன் மேல அப்படி ஒரு பிரியம். டவுனுக்குப் போயிட்டுத் திரும்பும்போது முந்தானையில் மடிச்சி போண்டா வாங்கிட்டு வரும். அத்தை வீடுகளுக்குக் கூட்டிட்டுப் போயி, இவனுக்காகக் கறி எடுத்து சமைக்கச் சொல்லும். எண்ணெய் தேய்ச்சிக் குளிப்பாட்டும். காது அழுக்கு எடுத்துவிடும். விளையாடிட்டு வந்து தூங்கும்போது கால் அமுக்கிவிடும்.

ஒரு முறை இவன் குழந்தையா இருக்கும்போது, வீட்டுக்குப் பக்கத்துல இருந்த குட்டையில விழுந்துட்டான். எல்லாரும் எங்கெங்கேயோ தேடறாங்க. அப்ப இவன் தலையில் குடுமி போட்டிருப்பான். இவனோட அம்மாதான் சிவப்பு கலர் ரிப்பன் குட்டைக்கு மேல தெரியறதைப் பார்த்து இவனைத் தண்ணிக்குள்ள எறங்கிக் காப்பாத்துனாங்க. எல்லாரும் சேர்ந்து ஆஸ்பத்திரிக்குத் தூக்கிட்டுப் போனது இவனுக்கு இப்பவும் ஞாபகம் இருக்குது.




அப்ப இருந்து இவனுக்குத் தண்ணியில கண்டம்னு ஆயா தண்ணி பக்கமே விடாது. இவனோட கூட்டாளிங்க கெணத்துல சொட்டாங்கல்லா குதிக்கும்போது இவன் கரையில இருந்து பார்த்துட்டு இருப்பான். ரொம்ப நேரமா இவனைக் காணோம்னா, ஆயா வயல்காட்டுல இருக்குற கெணறு கெணறாத் தேட ஆரம்பிச்சிடும். இவன் கரை மேல இருக்கிறதைப் பார்த்த பிறகுதான் அதுக்கு நிம்மதி வரும். ஆயாவோட பயத்தால, இன்னிக்கும் இவன் நீச்சலே கத்துக்கல.

இந்த மாதிரிதான் நெறைய விஷயங்கள்ல இருந்து இவன் தள்ளியே இருந்தான். ப்ளஸ் டூ படிக்கும்போதுதான் இவனுக்குப் பள்ளிக்கூடத்துக்கு சைக்கிள்ல போற அனுமதியே கெடச்சது. டியூசன் எல்லாம் முடிஞ்சு ராத்திரி வர்றவரைக்கும் ஆயா திண்ணையிலேயே உட்கார்ந்திருக்கும். "இனிமே பஸ்லயே போ... சைக்கிள்ள போகாதே பயமா இருக்கு"ன்னு சொல்லும்.

"ரா முழுக்கக் கண்ணு முழிச்சி எழுதிக்கிட்டே இருக்காதே. ஒடம்பப் பார்த்துக்கோ. பேசாம காலேஜ் வாத்தியாரு வேலைல சேர்ந்துட்டு, ஊர்லயே இரு"ன்னு எப்பவும் சொல்லிக்கிட்டே இருக்கும்.

இவன் சிரிச்சிக்கிட்டே பேச்சை மாத்திருவான், ஆயாவுக்கு இப்ப 92 வயசு. இப்பவும் ஊருக்குப் போனா, அவங்க மடியில் படுத்துப்பான். எதுவும் பேசாம

இவன் மொகத்தை நடுங்குற விரலால் தடவிக்கொடுத்துட்டே இருக்கும். இவன் அப்பவே தூங்கிடுவான். கனவுக்குள்ள அது முன்ன சொன்ன கதைகளோட குரல்கேட்கும்.

ஆயா வீட்டுக்கு வரும்போது எல்லாம், ஆயா மண் சட்டியில் மீன் ஆய்வதை வேடிக்கை பாக்குறதுதான் இவனோட பொழுதுபோக்கு. மண் சட்டியில ஆயா வெக்கிற மீன் குழம்போட ருசியை இன்னிக்கி வரைக்கும் இவன் வேற எங்கயும் சாப்பிட்டதில்ல. மீன் குழம்பு இல்ல, அது தேன் குழம்பு.

வாய்யான்னு பாசத்தோடு கூப்பிட்டு, வெத்தலை பாக்குக் கறையோட கன்னத்துல முத்தம் கொடுக்கும். கல்லூரி முடிஞ்சி கல்யாணம் ஆகற வரைக்கும், இவன் இந்த ஆயா வீட்லதான் இருந்தான். அஞ்சு மாமா, மாமிங்க, அக்கா, குழந்தைங்கனு கூட்டுக் குடும்பம்.

ஆல மரம் மாதிரி ஆயாதான் எல்லோரையும் தாங்கிட்டு இருந்துச்சி. எங்கேயாவது வெளிநாட்டுக்கோ, வெளியூருக்கோ போகும்போது, இவனைச் சாமி படத்துக்கு முன்னாடி நிக்கவெச்சி விபூதி பூசிவிடும். இவன் கால்ல விழுவான். சுருக்குப் பையில இருந்து பத்து ரூபா எடுத்துக் கொடுத்து, "பார்த்துச் செலவு பண்ணுய்யா.. பத்திரமாப் போயிட்டு வான்னு அனுப்பிவைக்கும். அந்த பத்து ரூபாய, பல லட்சம் ரூபாயா இவன் நெனச்சிப்பான். செலவே பண்ண மாட்டான்.

இந்த ஆயா கொஞ்சம் வைராக்கியமான ஆயா. அப்படி வைராக்கியமா இருந்ததால்தான், தனி ஆளா நின்னு இத்தனை புள்ளைகள வளர்த்திருக்கு. ஆயாவைக் கேக்காம யாரும் எதுவும் செய்ய மாட்டாங்க. அப்படி ஒரு பயம் கலந்த மரியாதை.

இவன் ராத்திரி எல்லாம் கண்ணு முழிச்சிப் படிச்சிட்டு இருப்பான். இவன் காஃப்காவைப் படிக்கிறானா? காம்யூவைப் படிக்கிறானா? சுந்தர ராமசாமியைப் படிக்கிறானா? சில்வியா ஃபிளாத்தைப் படிக்கிறானா? எதுவுமே ஆயாவுக்குத் தெரியாது. அதைப் பொறுத்த வரைக்கும் பேரன் படிச்சிக்கிட்டு இருக்கான். நிச்சயம் பெரிய ஆளா வருவான்னு நெனப்பு.



பரீட்சைக்குப் படிக்கிறவங்களுக்குக் குடுக்குற மாதிரி, அதுவும் கூடவே முழிச்சிருந்து டீ போட்டுக் கொடுக்கும். காலையில எல்லோரும் பள்ளி, கல்லூரி, வேலைக்குப் போன பிறகும் இவன் தூங்கிக்கிட்டு இருப்பான். யாராவது சத்தமாப் பேசுனா, "பேரன் படிச்சிட்டுத் தூங்கறான், மெள்ளப் பேசுங்கடி"ன்னு விரட்டி விட்டுடும்.

பதினஞ்சு வருஷத்துக்கு முன்னால இவனோட கவிதைப் புஸ்தகத்தை பாரதிராசா வெளியிட்டாரு. பாலுமகேந்திரா, பெரியார்தாசன், பாரதிப் புத்திரன்னு நிறையப் பெரியவங்க பேசினாங்க. புத்தகப் பிரதியை பாரதிராசாகிட்ட மேடையேறி வாங்குன ஆயா, அவரு காதுல ஏதோ

சொல்ல.. அவரு பேச வரும்போது இந்தக் கவிஞனோட பாட்டி என் காதுல என் பேரன்தான் பத்திரமாப் பாத்துக்குங்கன்னு சொன்னாங்க..... "எனக்கு எங்க அப்பத்தா ஞாபகம் வந்துடுச்சி"ன்னு அழ ஆரம்பிச்சிட்டாரு. அந்த நிகழ்ச்சியே நெகிழ்ச்சியா மாறிடுச்சி. இவன்மேல அதுக்கு அப்படி ஒரு அக்கறை.

இந்த அக்கறை சில சமயம் வேற மாதிரியும் முடியும். ஒரு முறை இவனைப் பேட்டி எடுக்க ஒரு பத்திரிகை நிருபர் வீட்டுக்கு வந்தாரு. இவன் இதுவரை எழுதிய பாடல்கள், இப்ப எழுதிட்டு இருக்கிற பாடல்கள்னு எல்லாவற்றையும் அவர் கிட்ட சொல்லிட்டு இருந்தான்.

அவரு கிளம்பிப் போனதும், ஆயா இவன்கிட்ட வந்து, "இவருகூடப் பழகாத, உன்னைப்பத்தி தெரிஞ்சிட்டுப் போக வந்திருக்காரு"ன்னு சொல்லிச்சு. இவன், "இல்ல ஆயா.. அதுதான் அவரோட தொழிலே, அவரு பத்திரிகை நிருபர்"னு சொன்னான். உடனே, "இப்படி வெள்ளந்தியா இருக்காதே. எல்லாத்தையும் எல்லார்கிட்டயும் சொல்லாதே" ன்னு சொல்லிட்டு உள்ள போயிடுச்சு. அதுக்கு மேல புரியவைக்க முடியாம இவனும் சரின்னு தலையாட்டுனான்.

இந்த ஆயாவுடன் தன்னோட பத்தாங் கிளாஸ் லீவுல இந்தியா முழுக்க நாப்பத்தி எட்டு நாள் பேருந்துல டூர் போனது இவனால மறக்கவே முடியாது. இப்ப நெனச்சிப்பார்த்தா, கங்கையில தொடங்கி கோதாவரி வரை இந்தியாவுல இருக்குற எல்லா நதியிலயும் நீச்சல் தெரியாமலேயே இவன் இறங்கிக் குளிச்சிருக்கான். இந்த ஆயாவைப் பார்க்கும்போது எல்லாம் இவனுக்கு அப்படியே வயசான அம்மாவைப் பார்க்கிற மாதிரியே இருக்கும்.

–நா. முத்துக்குமார்

**நா. முத்துக்குமார் :** இவர் 1975 ஆம் ஆண்டு ஜூலை 12 ஆம் நாள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் கன்னிகாபுரம் எனும் ஊரில் பிறந்தார். சிறு வயதில் இருந்தே புத்தகங்களை உலகமாகக் கொண்டார். இயற்பியலில் இளங்கலை பட்டமும், தமிழ் இலக்கியத்தில் முதுகலை பட்டமும் பெற்றுள்ளார். 'தமிழ்த்திரைப்படப் பாடல்கள் 1990 முதல் 2000 வரை' என்ற தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டமும் பெற்றார். கவிதை, புதினம், கட்டுரைத் தொகுப்புகள் போன்றவற்றை வெளியிட்டுள்ளார். சிறந்த பாடலாசிரியர் விருது, பிலிம் ஃபேர் விருது மற்றும் தேசிய விருது போன்ற விருதுகளையும் பெற்றுள்ளார். 2016 ஆகஸ்ட் 14 ஆம் நாள் காலமானார்.

## செயல்பாடுகள்

- "ரா முழுக்கக் கண்ணு முழிச்சி எழுதிக்கிட்டே இருக்காதே. ஒடம்பப் பார்த்துக்கோ. பேசாம காலேஜ் வாத்தியாரு வேலைல சேர்ந்துட்டு ஊர்லேயே இரு"ன்னு இப்பவும் சொல்லிக் கிட்டே இருக்கும் – தூயத் தமிழ் நடையில் எழுதுங்கள்.
- 'ஆயா' என்ற கதையை விமர்சனம் செய்து எழுதுங்கள்.
- நீங்கள் பாட்டியிடம் கேட்ட ஏதேனும் கதையை எழுதி வகுப்பறையில் வெளியிடுங்கள்.
- குடும்ப உறவுகளை விளக்கும் பழமொழிகளைத் திரட்டி எழுதுங்கள்.

## யாருக்குப் பொங்கல்

உறுப்பினர்கள் : சின்னையன், வெள்ளையப்பன்.
இடம் : வீட்டு முற்றம்.

வெள் : என்னய்யா சின்னைய்யா, எல்லோரும் நலந்தானா? கண்ணிலொளி மாறவில்லை; கட்டுடலும் தேயவில்லை!

சின் : வயிற்றுக்குப் பசியில்லை; வருவாய்க்குத் தடையில்லை அயர்வுக்கும் இடமில்லை; ஆறுதலும் தேவையில்லை! எளியவர்கள் எப்போதும் இருப்பதுபோல் இருக்கின்றோம்!

வெள் : களிப்புடனே இருக்கின்ற காட்சியொன்று போதாதோ? ஊராரின் வாழ்வுக்கே உன் தந்தை விளக்கேற்றி சீராகச் செய்த பணி சிந்தையிலே நிலைத்திருக்கும். சிற்றூரின் பள்ளியிலே சிறப்பான ஆசானாய்க் கற்க வரும் சிறுவர்க்குக் கல்விநலம் ஊட்டியவர். இருண்டமனக் காடுகளில் ஏற்றி வைத்த ஒளிவிளக்கைத் தெரிந்தவர்கள் வாழ்த்திடுவார்; சிரந்தாழ்த்தி வணங்கிடுவார்.

சின் : ஊரிலுள்ளோர் முன்னேற ஓயாமல் உழைத்திருந்தார். பேரறிவும் அறநெறியும் பிணைகின்ற வாழ்க்கைக்குப் பாதையிட்டார்; பலரதிலே பயணத்தைத் தொடர்ந்தார்கள்; பேதைகளாய் இருந்தவர்கள் பிழைசெய்து தாழ்வுற்றார்!

வெள் : பொழுதெல்லாம் பிறர்பணிக்கே போக்கியவர்; குடும்பத்தார் பிழைப்பதற்குச் சிறிதேனும் பொருள் சேர்த்து வைத்ததுண்டோ?

சின் : அவர் சேர்த்த பொருளெல்லாம் யாருக்கும் தெரியாது. புவியினிலே பொன் சேர்ப்பார் மண் சேர்ப்பார் பார்த்திருப்பீர்! எம்தந்தை எம்நெஞ்சில் ஏராளம் சேர்த்துவைத்தார் இந்நிலத்தில் வாழ்வதற்கே. இணையற்ற அறிவுரைகள் நாள்தோறும் சொல்லிவைத்து நலஞ்சேர்த்துப் போனதனால் வாள்போலத் துயர்வந்து வழிமறிப்பதில்லையெமை! ஓட்டுமனை ஒன்றே என் முன்னோர்கள் வைத்த நிதி. ஈட்டியதில் மீதமொன்றும் எம்தந்தை வைக்கவில்லை. பழஞ்சொத்தை அழிக்காமல் பார்த்திருந்த அவர் திறத்தை தொழுதிருக்க யாம்மறவோம்; சொன்னவழி நடக்கின்றோம்! குறையேதும் எமக்கில்லை; குடும்பநலம் குன்றாமல் நிறைவோடு வாழ்கின்றோம்; நெஞ்சத்தில் ஒளிகண்டோம்.



– ஆலந்தூர் கோ. மோகனரங்கன்.

**ஆலந்தூர் கோ. மோகனரங்கன் :** இவர் சென்னை, ஆலந்தூரில் பிறந்தார். இவரின் தந்தை ம. கோபால், தாயார் கோ. மீனாம்பாள். இவர் ஒரு மரபுக் கவிஞர். நாவல், சிறுகதைகள் எனப் பல்வேறு நூல்கள் எழுதியுள்ளார். எண்ணற்ற இசைப் பாடல்களையும் கவிதை நாடகங்களையும் படைத்துள்ளார். இவருடைய 'இமயம் எங்கள் காலடியில்' என்னும் கவிதைத் தொகுப்பு நூல் தமிழக அரசின் பரிசினைப் பெற்றுள்ளது. வானொலி, தொலைக்காட்சி, பாவரங்க மேடை என்று பல ஊடகங்களில் பங்கேற்றுள்ளார். இவர் 2019 அக்டோபர் 4 அன்று சென்னையில் இயற்கை எய்தினார்.

## செயல்பாடுகள்

- 'குறையேதும் எமக்கில்லை குடும்ப நலம் குன்றாமல்
  நிறைவோடு வாழ்கின்றோம் நெஞ்சத்தில் ஒளி கண்டோம்' – கோ . மோகனரங்கன்

  'நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்' – பாரதிதாசன்

  – இரு கவிதை வரிகளையும் ஒப்பிட்டுக் குறிப்பு எழுதுங்கள்.

- இன்றைய இயந்திரத்தனமான உலகில் முதியோர்களை முதியோர் இல்லங்களில் சேர்த்து விடுகின்ற சூழலைக் காணமுடிகின்றது. எனவே முதியோர் தினத்தன்று முதியோர்களைப் போற்றும் நோக்கில் உங்கள் பள்ளியில் விழிப்புணர்வு முகாம் நடைபெற இருக்கிறது. இதற்கான சுவரொட்டி தயாரியுங்கள்.

- பெற்றோர்களை மதிக்கும் பொருட்டு அவர்களின் மேன்மையை எடுத்துக்கூறும் விதமாக உறுதிமொழி தயாரியுங்கள்.



# இலக்கியத்தில் உறவு





## கலித்தொகை

'ஆற்றுதல்' என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்;
'போற்றுதல்' என்பது புணர்ந்தாரைப் பிரியாமை;
'பண்பு' எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்;
'அன்பு' எனப் படுவது தன்கிளை செறா அமை;
'அறிவு' எனப் படுவது பேதையார் சொல் நோன்றல்;
'செறிவு' எனப் படுவது கூறியது மறாஅமை;
'நிறை' எனப்படுவது மறை பிறர் அறியாமை;
'முறை' எனப்படுவது கண்ணோடாது உயிர் வௌவல்
'பொறை' எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்;
ஆங்கு அதை அறிந்தனிர் ஆயின்! என்தோழி

**கலித்தொகை :** எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. நல்லந்துவனார் இந்நூலைத் தொகுத்துள்ளார். கடவுள் வாழ்த்துப்பாடல் உட்பட 150 பாடல்களைக் கொண்டது. துள்ளலோசையில் பாடப்பட்டு கலிப்பா எனும் பாவகையால் பெயர் பெற்ற நூல். 11 அடி முதல் 80 அடி வரையுள்ள பாடல்கள் கலித்தொகையில் இடம் பெற்றுள்ளன.

## நாலடியார்

அழன்மண்டு போழ்தின் அடைந்தவர்கட் கெல்லாம்
நிழன்மரம்போல் நேரொப்பத் தாங்கிப் – பழுமரம்போல்
பல்லார் பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்.

– சமண முனிவர்கள்

**நாலடியார் :** பதினெண் கீழ்க்கணக்கு நீதி நூல்களுள் ஒன்று. இது நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆனது. சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நானூறு தனிப்பாடல்களின் தொகுப்பாகும். இதனால் இது 'நாலடி நானூறு' எனவும் 'வேளாண் வேதம்' எனவும் பெயர் பெற்றது. 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' எனும் பொன்மொழியில் நாலு என்பது நாலடியார் நூலைக் குறிக்கும்.

## திருக்குறள்

பற்றுஅற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள.

விருப்புஅறாச் சுற்றம் இயையின் அருப்புஅறா
ஆக்கம் பலவும் தரும்.

சுற்றத்தான் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்.

கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தான் சுற்றப் படும்.

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள.

– திருவள்ளுவர்

**திருக்குறள் :** அற இலக்கியங்களுள் முதன்மையானது. திருவள்ளுவரால் எழுதப்பட்டது. குறள் வெண்பா எனும் பாவகையாலான 1330 பாடல்களைக் கொண்டது இந்நூல். அறம், பொருள், இன்பம் எனும் மூன்று பகுப்புகளையும் ஒவ்வொரு பகுப்பிலும் முறையே அறம் – 38 அதிகாரங்கள், பொருள் – 70 அதிகாரங்கள், இன்பம் – 25 அதிகாரங்கள் என்று மொத்தம் 133 அதிகாரங்களை உள்ளடக்கியுள்ளது.

### செயல்பாடுகள்

- 'பண்பெனப்படுவது பாடறிந் தொழுகுதல்
  அன்பெனப்படுவது தன்கிளை செறாஅமை' – என்ற பாடல் அடிகள் உணர்த்தும் கருத்துகளைக் குறிப்பாக எழுதுங்கள்.
- பாடல்களில் இடம்பெறும் கடினச் சொற்களை அகரவரிசைப்படுத்திப் பொருள் எழுதுங்கள்.
- நல்ல ஆண் மகனின் கடமையாக 'நாலடியார்' கூறும் செய்திகளைக் குறிப்பாக எழுதுங்கள்.
- திருக்குறள் வெளிப்படுத்தும் உறவுகளின் முக்கியத்துவத்தைக் குறிப்பாக எழுதுங்கள்.



ST-807-6-TAMIL (AT)-9-VOL-2

## ஊருடன் கூடிவாழ்

நீ வாழும் சமுதாயத்துடன் ஒத்துவாழக் கற்றுக்கொள்ள வேண்டும். இப்படிச் சொல்லும் போது ஒருவன் தன்னுடைய தனித்தன்மையினை இழந்து அனைவருடனும் இணங்கிப் போக வேண்டும் என்று அர்த்தமல்ல.

எந்த ஒரு மனிதனும் இரண்டு நிலைகளில் வாழ வேண்டியவனாக இருக்கிறான். தனக்காகவும், தன் குடும்பத்திற்காகவும், தன்னைச் சார்ந்தவர்களுக்காகவும் வாழ்வது ஒரு நிலை. தான் வாழும் சமுதாயப் பொறுப்புகளை உணர்ந்து வாழ்வது மற்றொரு நிலை. "ஊருடன் கூடி வாழ்" என்பது இந்த இரண்டாவது நிலையினையே குறிக்கும் வாசகமாகும்.

எந்த ஒரு மனிதனும் தனித் தீவாக வாழ்ந்துவிட முடியாது. பல்வேறு நிலைகளில் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினருடன் இணைந்து வாழவேண்டிய கட்டாயம் இருக்கிறது. அடுத்த வீட்டுக்காரனையும் எதிர்வீட்டுக்காரனையும் பகைத்துக் கொண்டு வாழ்வது சாத்தியமில்லை. ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ வேண்டிய அவசியமும் இருக்கிறது. எனவே சில சந்தர்ப்பங்களில் சமுதாயத்தின் ஒட்டுமொத்த நலனுக்காகச் சொந்த சுகங்களை விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய அவசியமும் ஏற்படலாம். இதன் மூலம் அமைதியான சமுதாய வாழக்கையினை உருவாக்கிக் கொண்டு நாமும் நிம்மதியாக வாழ முடியும்.

அண்டை அயலாரைப் பகைத்துக்கொண்டு வாழ்வது புத்திசாலித்தனமான செயலல்ல. சமுதாய நல்லிணக்கம் என்பது வாழ்க்கைக்குத் தேவையான ஒன்றாகவே இருக்கிறது. பொதுநலன் கருதி எடுக்கப்படும் முடிவுகளுக்குத் தனிநபர் கட்டுப்படுவது அவசியமாகிறது. குறிப்பாக நவீன யுகத்தில் தொழில் நுணுக்க வளர்ச்சியால் சமுதாய அமைப்பு மிகவும் சுருங்கிவிட்டது. சார்புநிலை அதிகரித்துக்கொண்டே போகிறது. இந்தச் சூழ்நிலையில் ஊருடன் ஒத்து வாழாமல் எந்தச் செயலையும் சாதிப்பது சாத்தியமில்லை



'ஊருடன் கூடிவாழ்' என்னும் வாசகம், வேறு எந்தக் காலத்தையும் விட இந்தக் காலத்திற்கு மிகவும் தேவையான ஒரு வாசகமாகும்.

– பி.சி.கணேசன்

**பி.சி. கணேசன் :** சிறந்த எழுத்தாளர். உங்களால் முடியும், உங்கள் குழந்தைக்குச் சிந்திக்கக் கற்றுக்கொடுங்கள், எளிய தமிழில் ஆங்கில இலக்கணம் போன்றவை உள்ளிட்ட ஏராளமான நூல்களை எழுதியுள்ளார். இவர் தொகுத்த 'வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஔவையார்' என்ற தொகுப்பிலிருந்து இக்கட்டுரை எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- ‘ஊருடன் கூடிவாழ்’ என்ற வாசகம் உங்களுக்குள் ஏற்படுத்திய தாக்கத்தைக் குறிப்பாக எழுதுங்கள்.
- சமூக உறவுகள் தொடர்பான பொன்மொழிகள், மேற்கோள்கள் போன்றவற்றைச் சேகரியுங்கள்.




### குற்றியலுகரம்

(சமையலறையில் அம்மாவும் மகளும் உரையாடுகின்றனர்.)

அம்மா : கமலா.. அந்தக் கடுகு எடுத்துக் கொடு

மகள் : அம்மா அது உளுந்து தானே! கடுகில்லையே?

அம்மா : உளுந்து டப்பாவுக்கு அருகில் உள்ள டப்பாவை எடு... அதில் தான் கடுகு உள்ளது.

மகள் : அம்மா எனக்கொரு சந்தேகம்....

அம்மா : என்ன?

மகள் : கடுகு, உளுந்து என நாம் சொல்லும்போது முழுமையாக உச்சரிப்பதில்லையே... ஆனால் எழுதும் போது க, டு, கு.... உ, ளு, ந், து என முழுமையாக எழுதுகிறோம். எழுதும் போது சரியாக எழுதிவிட்டு உச்சரிக்கும்போது மட்டும் பாதியாக உச்சரிப்பது பிழை இல்லையா அம்மா?

அம்மா : பிழை இல்லை. இதனைக் குற்றியலுகரம் என்கிறார்கள். அதாவது தனிக்குறில் எழுத்து அல்லாத பிற எழுத்துகளைத் தொடர்ந்து வல்லின உகர எழுத்துகளான கு, சு, டு, து, பு, று வரும்போது அவைதன் இயல்பான ஒரு மாத்திரையிலிருந்து குறைந்து அரை மாத்திரையாக ஒலிக்கும். இதற்குத்தான் குற்றியலுகரம் எனப் பெயர்.

மகள் : அது என்னம்மா தனிக்குறில் எழுத்து?

அம்மா : தனியாக வரும் குறில் எழுத்து. உதாரணமாக பசு – இங்கு ‘ப’ என்னும் எழுத்துடன் ‘சு’ என்ற எழுத்தை உச்சரிக்கும் போது முழுமையாக உச்சரிக்கிறோம்.

மகள் : சரி அம்மா ... குற்றியலுகரத்திற்குச் சில உதாரணங்களைக் கூறுங்களேன்!

அம்மா : ம் ... தாராளமாக... அன்றாட வாழ்க்கையில் நாம் ஏராளமான குற்றியலுகரச் சொற்களைப் பயன்படுத்துகிறோம். வந்து, சென்று, காசு, பட்டு, ஆறு, படகு ... இப்படி ஏராளமாக. இச்சொற்களை இப்போது கூறிப் பார். சொற்களின் இறுதியில் வருகின்ற உகரத்தை முழுமையாக உச்சரிப்பதில்லை.

இவ்வாறு தனிக்குறில் அல்லாத பிற சொற்களின் இறுதியில் வல்லின உகர எழுத்துகள் (கு, சு, டு, து, பு, று) வந்தால் அவை தனக்குரிய ஒரு மாத்திரை ஓசையிலிருந்து குறைந்து அரை மாத்திரையாக ஒலிக்கும். இதனைக் குற்றியலுகரம் என்று கூறுவர்.

மகள் : காடு, காசு, ஆறு இப்படித்தானே... நன்றாகப் புரிந்தது அம்மா! நீங்கள் கற்றது எனக்கும் பயன்படுகிறது.

# யாதும் ஊரே





## பயண உண(ர்)வுகள்

சுவிட்சர்லாந்து : பிரசித்திபெற்ற ‘டிட்லிஸ்’ மலைப்பகுதிக்குச் சென்றுவர ஆசை. எனவே, லூசர்ன் மரப்பாலத்திற்குப் பெயர் பெற்ற அழகிய நகரிலிருந்து ‘எங்கல்பர்க்’ என்ற சிற்றூருக்கு மதியம் புறப்பட்டுச் சென்றேன்.

ஏற்கனவே முன்பதிவு செய்து வைத்திருந்த ‘ஹோட்டல்’ அறையில் பெட்டிகளை வைத்துவிட்டுக் காலாற ஊரைச் சுற்றி வந்தேன். சுவிஸ் நாட்டிலுள்ள எல்லா ஊர்களைப் போலவும் அந்த ஊரும் மிக அழகு. சுற்றியுள்ள பனி முகடுகள் மாலைக்கதிரவன் உதவியோடு தங்கமாக ஜொலிப்பதை ரசித்தபடியே ஹோட்டலுக்கு வர மணி ஏழரை ஆகிவிட்டது. நல்ல பசி.

ஹோட்டல் வரவேற்பிலிருந்த பெண்மணியிடம் இரவு உணவு தேவை என்று சொன்னேன். வந்த பதில் கேட்டுக் கொஞ்சம் அதிர்ச்சி.

"சாரி! நீங்கள் முன்னமேயே உணவுக்குச் சொல்லியிருக்க வேண்டும். 'ஆர்டர்' கொடுத்தவர்களுக்கு மட்டுமே நாங்கள் உணவு தயாரிப்போம்." நான் மீண்டும் வேண்டினேன்.

"ஒரு முறை சொன்னால் புரிந்து கொள்ளுங்கள். நான், என் கணவர் மட்டுமே எல்லாவற்றையும் தயார் செய்ய வேண்டும். எனவே, என்னால் மீண்டும் உங்களுக்காகத் தயாரிக்க முடியாது."

"இதை ஏன் என்னிடம் முன்பே தெரிவிக்கக் கூடாது?"

''உங்கள் அறையில் உள்ள ஏட்டில் விரிவாக ஆங்கிலம் மற்றும் ஐரோப்பிய மொழிகளில் எழுதப்பட்டுள்ளது. நீங்கள் படித்திருக்க வேண்டும். தயவுசெய்து சிறிது தூரம் சென்றீர்களானால், அங்கே ஒரு இத்தாலியன் ரெஸ்டாரண்ட் இருக்கிறது. இரவு உணவு கிடைக்கும்" என்றார்.

''சரி பரவாயில்லை!'' என்றபடியே அறைக்குச் சென்றேன். சிறிது நேரம் கழித்து எனது பெட்டியில் எப்போதும் எடுத்துச் செல்லும் கடலை உருண்டை, முறுக்கு அடங்கிய பையை எடுத்துக்கொண்டு ரெஸ்டாரண்டில் அமர்ந்தேன். அந்த அம்மையார் அருகில் வந்தார்.

"குடிக்க டீயாவது போட்டுத் தர முடியுமா?'' என்றேன். ஒருவித முகச் சுளிப்போடு 'சரி' என்றபடி சென்றார்.

நான் கடலை உருண்டையையும் முறுக்கையும் சுவைக்கத் தொடங்கினேன். அப்போது அங்கே விளையாடிக் கொண்டிருந்த சாக்லேட்டுக் குழந்தை ஒன்று அருகில் வந்து கை நீட்டியது. கடலை உருண்டையை எடுத்துப் பொடி மாதிரி செய்து அதன் கையில் வைத்தேன். வாயில் போட்டுச் சுவைத்து விட்டு, மீண்டும் கைநீட்டியது அக்குழந்தை. மீண்டும் கொடுத்தேன். அப்போது அம்மையார் பதற்றத்துடன் ஓடி வந்தார்.

"என்ன கொடுக்கிறீர்கள்?"

"பதற்றப்பட வேண்டாம். அது இந்தியன் 'கேண்டி'. கடலை உருண்டை. நீங்களும் ஒன்று சாப்பிடுங்கள்," என்று கொடுத்தேன். தயக்கத்தோடு ருசித்துப் பார்த்து அற்புதமாக உள்ளது என்றார். இன்னும் இரண்டு மூன்று உருண்டைகளும் முறுக்கும் கொடுத்தேன். அவரும் குழந்தையும் ரசித்துச் சாப்பிட்டார்கள். நான் மெதுவாக 'டீ' யை உறிஞ்சியபடியே ரசித்தேன்.

பிறகு அறைக்குச் செல்ல எழுந்த போது "உங்களுக்காக நான் இரவு உணவு தயாரிக்கப் போகிறேன். இருந்து சாப்பிட்டுச் செல்லுங்கள்" என்றார்.





"ஏன் இந்த மாற்றம்?" என்றேன். "எனது குழந்தையோடு நீங்கள் பழகியது எனக்கு மிகவும் மகிழ்ச்சியளித்தது. நீங்கள் எனது குடும்பத்தாரைப் போல. அதனால் தான்" என்று சிரித்தபடியே சென்றார்.

எனக்கு இன்றைக்கும் அந்த நாளை நினைத்துப் பார்க்கையில் மறக்க முடியாத ஓர் இனிய சம்பவம் என்றே சொல்லலாம்.

– இயகோகா சுப்பிரமணியம்

**இயகோகா சுப்பிரமணியம் :** தொழிலதிபர், பேச்சாளர், எழுத்தாளர் என பன்முகம் கொண்ட இவர் கோவை மாவட்டம், குளத்தூரில் நஞ்சப்பக் கவுண்டர் – கணபதியம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். பி. இ. மெக்கானிக்கல் முடித்த இவர் தன் நண்பர்களுடன் சேர்ந்து 'இயகோகா சிண்ட்ரான்ஸ்' என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். பின்னர் பல நாட்டு நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு நிறுவனங்களைத் தொடங்கி தனது வர்த்தகத்தை உலக அளவில் பரப்பியுள்ள இவர் மிகச்சிறந்த எழுத்தாளர். திரைகடல் ஓடு திரவியம் தேடு, வெற்றி நிச்சயம், வெற்றிச்சூடி, நிறம் மாற்றும் மண் போன்றவை இவர் எழுதிய முக்கிய நூல்கள்.

## செயல்பாடுகள்

- சுவிட்சர்லாந்து சென்ற இந்தியப் பயணியின் அனுபவத்தைக் குறிப்பாக எழுதுங்கள்.
- உங்கள் பயண அனுபவத்தைக் குறிப்பாக எழுதுங்கள்.
- பாடப்பகுதியில் உள்ள பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுங்கள்.

## உலக அமைதி மலரட்டும்

தமிழன் எங்கள் பேரு
ஆசியா எங்கள் ஊரு
இந்தியா எங்கள் வீடு – இந்த
அகிலம் எல்லாம் எங்கள் நாடு
அமைதியைத் தா...! உலக அமைதியைத் தா...!

மனிதன் எங்கள் சாதி
மானுடம் எங்கள் நீதி
மதங்களைக் கடந்து நேசிப்போம் – இந்த
உலக அமைதியை யாசிப்போம்
அமைதியைத் தா...! உலக அமைதியைத் தா...!



அன்பே எங்கள் தெய்வம்
அகிம்சையே எங்கள் வேதம்
எல்லா உயிரும் உறவாகும் – அதைக்
கொல்லும் கருவியும் பகையாகும்
அமைதியைத் தா...! உலக அமைதியைத் தா...!

அணு ஆயுதங்கள் ஒழிப்போம்
அன்பை அகிலத்தில் விதைப்போம்
தேசம் கடந்து நேசிப்போம் – இந்த
தரணி முழுவதும் சுவாசிப்போம்
அமைதியைத் தா...! உலக அமைதியைத் தா...!

– சர்தார், ஐ.ஏ.எஸ்.

**சர்தார், ஐ.ஏ.எஸ் :** தமிழ்நாட்டில் உள்ள கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பிறந்த இவர் உலக ஒற்றுமையை வலியுறுத்தி பல்வேறு கவிதைகளை எழுதியுள்ளார். ஒரு தாய் மக்கள், நீயின்றி நானா, மகிழட்டும் மண் வாசனை, சுதந்திர தாகம் போன்ற கவிதைகள் குறிப்பிடத்தக்கவை. தேசிய ஒருமைப்பாட்டிற்காகக் குமரியிலிருந்து இமயம் வரை நடந்து சாதனை படைத்த முதல் இந்தியர் ஆவார்.

### செயல்பாடுகள்

- சர்தார் ஐ.ஏ.எஸ். அவர்களது வாழ்க்கைக் குறிப்பை அடிப்படையாகக்கொண்டு தன் விவரப் பட்டியல் தயாரியுங்கள்.
- 'உலக அமைதி மலரட்டும்' கவிதையின் மையக்கருத்தைக் குறிப்பிட்டு நயம் பாராட்டி எழுதுங்கள்.
- உல ஒற்றுமையை வலியுறுத்தும் பிற கவிதைகளைத் திரட்டுங்கள்.

## அர்த்தமுள்ள வாழ்க்கை

அன்பைப் பகிர்தலே அனைத்துக்கும் அடித்தளம். இது நம் குடும்பங்களில் இருந்து துவங்கி உலகளாவியதாக விரிவடைய வேண்டும். நமக்கு அது புதிதல்ல. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பூங்குன்றனாரின் வரிகள் உலகம் ஓர் உன்னத உறவுக்கூடம் என்பதைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

இன்றைக்கு நாம் செம்மையாக இயங்கிக் கொண்டிருக்கிறோம் என்றால் நம் முன்னோர்களின் வாழ்க்கை நெறிகள் மற்றும் குடும்ப நிர்வாக முறைகள் நம்மை வழிநடத்திக் கொண்டிருப்பதுதான் அதற்குக் காரணம். உறவுகளைப் புரிந்துகொள்ளும் பயிற்சிக் கூடமாகக் குடும்பமே திகழ்கிறது. வயது வரம்பிற்கும் தனிமனித விருப்பு வெறுப்புக்கும், கோபதாபங்களுக்கும் அப்பாற்பட்ட உணர்வுகளால் பிணைந்த உறவு முறைகளே குடும்பத்தை நெறிப்படுத்தும் என்பதை நம் முன்னோர்களின் வாழ்க்கை முறைகள் எடுத்துரைக்கின்றன.

பெற்றோர், உற்றார், உறவினர், ஆசிரியர், கணவன் – மனைவி, பிள்ளைகள், நண்பர்கள், சமுதாயம் என நமது உறவு வட்டத்தை விரிவுபடுத்திக் கொண்டே போகலாம். ஒவ்வொரு உறவு வட்டத்திற்குமான வரையறை ஆழமானது. ஆனால் அதனை நிர்ணயிப்பது நாம் அதற்குத் தரும் முக்கியத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. மனிதன் ஒரு சமுதாய விலங்கு என்பதற்கிணங்க நல்லதொரு வாழ்க்கைப் பயணத்தைச் சீரமைத்துக் கொள்ள உறவுகள் உறுதுணையாக நிற்கின்றன. பெறுதலைக் காட்டிலும் தருவதில் உள்ள இன்பம், ஆழமான புரிதல், பரஸ்பர அக்கறை உள்ளிட்டவை உறவை வலுப்படுத்தும் அடிப்படைக் காரணிகள். வழிகாட்டிகளைவிட வாழ்ந்து காட்டியவர்கள் உன்னதமானவர்கள். ஆனால் இன்றைக்கு நாகரிக வளர்ச்சி என்ற போர்வையில் உன்னதமான உறவுமுறைகளை உறவு நெறிகளைத் தொலைத்துக் கொண்டிருக்கிறோம். அதனை மீட்டெடுப்பது நமது கடமை.

கூட்டுக்குடும்பங்கள் குறைந்து தனிக்குடும்பங்கள் மிகையாக உருவெடுக்கும் இக்கால கட்டத்தில் பெற்றோர்களின் உறவை இறுதிவரை போற்றுவது ஒவ்வொருவரின் கடமை. பெருநகரங்களில்



பள்ளிகளின் எண்ணிக்கைக்கு இணையாக முளைத்து வரும் முதியோர் இல்லங்கள், உறவுகளின் அபாயகரமான பரிமாணத்தை நமக்கு உணர்த்துகின்றன. பொருள் சேர்ப்பது மட்டும் வாழ்க்கையின் முழுநேரப் பணி என்றில்லாமல், உறவுகளையும் சேர்த்துப் போற்றிப் பயணிப்பதை இன்றைய தலைமுறை கவனத்தில் கொள்ள வேண்டும். அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, பேரன், பேத்தி, மாமா, அத்தை என்ற அடுக்கடுக்கான பெயர் வரிசைகள் மட்டுமே உறவின் மொழி அல்ல. அதற்கும் அப்பாற்பட்ட உணர்வுகளின் உன்னத வெளிப்பாடுகள் அவை. மனச்சங்கடங்களைச் சகித்துக் கொண்டு உறவினைப் போற்றுவது, விவாதங்களில் விட்டுக் கொடுத்து இணக்கம் காண்பது, தேவைகளைத் துறந்து தியாகத்தில் புளகாங்கிதம் அடைவது ஆகிய இவையனைத்தும் உறவின் உன்னதத்தை உறுதி செய்யும்.

ஏனென்றால் உடல் சார்ந்து, உணர்வு சார்ந்து, சமூகம் சார்ந்து, பொருளாதாரம் சார்ந்து, உலகியல் சார்ந்து மனிதனுக்கு எவ்வளவு தேவைகள் உண்டோ அவ்வளவு உறவுகள் அவசியம். நமது சில தேவைகளை நிறைவு செய்வதற்காக உறவுகள் ஏற்பட்டிருக்கின்றன என்றாலும், அந்த உறவுகளின் தேவைகளை ஈடுசெய்ய வேண்டிய கட்டாயமும் நமக்கு உண்டு. மூத்தோர்கள் இதனை முழுவதுமாக கடைப்பிடித்தார்கள். இளைய தலைமுறைக்கு இதனை நேர்த்தியாகக் கற்றுத் தருவது இன்றைய காலகட்டத்தின் அவசியம். இது கூட்டுக் குடும்பச் சூழல்களை மேன்மேலும் வலுப்படுத்தும். உறவுக்கு முடிவேயில்லை என்கிறார் தத்துவமேதை ஜே.கிருஷ்ணமூர்த்தி. உறவினர்கள் மறைந்து போகலாம். ஆனால் உறவுகள் தொடரும். அன்பு, இரக்கம், உண்மை, உற்சாகம், தைரியம், நம்பிக்கை, மகிழ்ச்சி ஆகியவற்றைக் கைக்கொள்வது உறவை உன்னதமாக்கும். மகிழ்ச்சியான குடும்பங்களை உற்றுநோக்கினால் அங்கு இந்த நற்பண்புகள் உறைந்திருப்பதைக் காணலாம்.

வெற்றிகரமான குடும்பங்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ சமூக வளர்ச்சிக்குத் தங்களின் பங்கினை அளிக்கின்றன. எதிர்காலத் தலைமுறையினரையும் இதைச் செய்ய வைக்கின்றன. உறவுகள் தோட்டம் போன்றவை. கவனிப்பு இல்லாத விளைநிலத்தில் களைகள் முளைப்பது போல் கவனம் சிதறிய குடும்பங்களில் குழப்பம் என்ற களை

முளைக்க வாய்ப்புண்டு. அதனை ஆரம்ப நிலையிலேயே கிள்ளி எறிவது அவசியம். குடும்ப உறுப்பினர்கள் ஒன்றாகச் செலவிடும் நேரத்தின் அளவு அவர்களுக்கிடையேயான பரஸ்பர அக்கறையையும் கவனத்தையும் புரிதலையும் நிர்ணயிக்கிறது.

குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு நபர்களின் செயல்பாடுகளைக் கூர்ந்து கவனித்து, அதற்கான ஊக்கத்தையும் ஒத்துழைப்பையும் நல்கும்போது நலமான வாழ்க்கை முறை உறுதியாகும். குறைந்தது நாளுக்கு ஒரு வேளையாவது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து உணவு உண்ணும் பழக்கம் அவர்களுக்கு இடையேயான நெருக்கத்தைப் பன்மடங்கு பெரிதாக்கும் என உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.



நெருக்கடிகள் என்பது ஒவ்வொரு குடும்பத்திலும் நிகழக்கூடிய யதார்த்தமான சூழல். நெருக்கடியின்போது உறுதியுடன் ஒன்றிணைந்து செயல்படும் திறமைமிக்க குடும்பங்கள் வலுவான குடும்பங்களெனப் போற்றப்படுகின்றன. சுயநலம் தவிர்த்து குடும்ப நலத்திற்கு முதலிடம் என்ற அர்ப்பணிப்பும் தனிநபர் எடுக்கும் முடிவுகளில் சக குடும்ப உறுப்பினர்களின் நலத்தைக் கருத்தில் கொள்வதும் நல்லிணக்கத்தை வளர்க்கக்கூடிய குடும்பப் பண்பாட்டு முறைகளைப் போற்றுவதும் குடும்பங்களை வலுவாக்குகின்றன.

வறுமையின் அவலத்தையும் இறப்பையும் பத்திரிகைகளில் படிக்கும் போதும் புலம் பெயர்ந்தோரின் தவிப்பினை, அகதிகளின் கூக்குரலை, பேரிடர்களில் ஒட்டுமொத்த குடும்பத்தையே தொலைத்து விட்டு நிராயுதபாணியாக நிற்பவர்களைக் காணும்போதும் நமது நெஞ்சம் பதறுகிறது. அதுவே மனிதம். இம்மனிதத்தின் சக்தி மகத்தானது. உலக உறவுகளில் உள்ள இடைவெளியைக் குறைக்கவல்லது. இடர்களைத் தீர்க்கவல்லது. அமைதியையும் பாதுகாப்பையும் நிலைக்கச் செய்வது. ஒற்றுமை உணர்வு மிகுந்த ஓர் உன்னத உலகைப் படைக்கவல்லது மனிதம். சர்வதேச அமைதியும் பாதுகாப்பும் ஒற்றுமை உணர்வில் இருந்துதான் உருவெடுக்கிறது. தற்போதைய கிளர்ச்சிகளுக்கும் போர் ஆயத்தங்களுக்கும் மண்மீதான ஆசைதான் காரணம். உலகப்பற்று உருவெடுக்கும்போது எல்லைகள் உடைக்கப்படும். மனித உறவு மேம்படும்.. உலகில் உள்ள வளங்களைச் சீராகப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற சிந்தனை வலுப்பெறும். அடுக்குமாடிக் குடியிருப்போ, அண்டை வீடோ, அண்டை நாடோ குறுகிய மனப்பான்மையை விட்டொழித்து அனைவரிடமும் பரந்த மனப்பான்மையுடன் பழக



ST-807-7-TAMIL (AT)-9-VOL-2

முற்படுவோம். அமைதியையும் மகிழ்ச்சியையும் பாதுகாப்பையும் தரும் அற்புதக் கவசம் அன்பு. தனிப்பட்ட உறவாகட்டும், உலகளாவிய அன்பாகட்டும், எல்லா இடங்களிலும் அடிப்படைத் தேவையென்னவோ ஆழமான புரிதல்தான்.

(தினமலர், பிப்: 26, 2021)

இப்பாடப்பகுதி தினமலர் இணைய இதழிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- உறவின் முக்கியத்துவத்தைக் கூறும் நாடகங்களைத் திரட்டிப் பள்ளி இலக்கிய மன்றத்தில் நடித்துக் காட்டுங்கள்.
- ‘வளமான வாழ்விற்குப் பெரிதும் துணைபுரிவது கூட்டுக் குடும்பமே! தனிக்குடும்பமே! என்னும் தலைப்பில் நடைபெறும் பட்டிமன்றத்தில் நீங்கள் விரும்பும் தலைப்பில் பேச பட்டிமன்றக் குறிப்பு தயார் செய்யுங்கள்.
- உமது ஊர்த் திருவிழாவில் நடைபெறும் "உறவுக்குக் கைக்கொடுப்போம்" என்னும் நாடகத்திற்கான அறிவிப்பு தயார் செய்யுங்கள்.
- "தற்காலத்தில் முதியோர்கள் நிலை" என்னும் தலைப்பில் சொற்பொழிவுரை தயாரியுங்கள்.
- தற்காலத்தில் உறவினர்களுக்கிடையே உள்ள உறவு நிலையை ஆய்வு செய்து பத்திரிகைக்குத் தலையங்கம் தயாரியுங்கள்.



அலகு 6

# உழைப்பே உயர்வு



சங்க கால மக்கள் நிலத்தை ஐவகையாகப் பிரித்து நிலம் சார்ந்த தொழில்களைச் செய்து தங்கள் வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டனர். மக்கள் தற்காலத்தில் நவ நாகரிக வாழ்க்கையை மேற்கொண்டாலும் வயல், மலை, கடல் சார்ந்த தொழில்களின் பயனாக அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் பொருளாதார மேம்பாடும் அடைந்துள்ளனர். எனவே, நிலங்களில் நடைபெறும் தொழில்களின் முக்கியத்துவத்தையும், சிறப்பினையும் மாணவர்கள் அறியும் வகையில் இவ்வலகு அமைக்கப்பட்டுள்ளது.

# வயலும் வாழ்வும்



## முத்தொள்ளாயிரம்

அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாய்அவிழ
வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப் – புள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு



**முத்தொள்ளாயிரம் :** சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மீது பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு இது. மூவேந்தர்களின் நாடு, அரண், படைச்சிறப்பு, போர்த்திறம், வீரம், ஈகை முதலான அரிய செய்திகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு மன்னரைப் பற்றியும் 900 பாடல்கள் வீதம் 2700 பாடல்கள் அடங்கிய நூல் எனக் கருதப்படுகிறது.

## கம்பராமாயணம்

தண்டலை மயில்கள் ஆட,
தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க,
குவளை கண் விழித்து நோக்க,
தெண் திரை எழினி காட்ட, தேம்
பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட,
மருதம் வீற்றிருக்கும் மாதோ.

– கம்பர்

**கம்பர் :** இவர் பிறந்த ஊர் சோழநாட்டுத் திருவழுந்தூர். இராமாயணத்தைத் தமிழில் இயற்றிய பெரும் புலவர். 'கல்வியிற் பெரியவன் கம்பன்' எனவும் 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' எனவும் வரும் தொடர்கள் கம்பரின் சிறப்பை வெளிப்படுத்தும். ஏர் எழுபது, திருக்கை வழக்கம், சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.



## முக்கூடற்பள்ளு

முந்தித் தரிசை யடித்து மறித்து
முச்சா லடித்திட் டுழவு நாலும்
முழுதும் உழுது திருந்தப் பரம்பு
மூன்றுந் தடவியே
அந்தத் தொளிக்குட் சமைந்த நாற்றை
அடுத்த வயலில் பிடுங்கி வேறே
அடுக்கி முடிந்து வட்ட வட்டங்க
ளாய்க்கு வித்தபின்
வந்தித் தழகர் பதத்தைத் துதித்து
வகுந்து நாற்றை எடுத்து நெற்றியில்
வைத்து நாலு திசையும் நோக்கி
வாழ்த்திக் கும்பிட்டே
பந்திப் படுத்தி நிரையை வகுத்துப்
பரவை யொலிபோல் குரவை யெழுப்பி
பயிர்நெருங் காமல் கலந்து போகாமல்
பதியப் பதியும் பள்ளீரே.

**முக்கூடற் பள்ளு :** பள்ளு என்ற சிற்றிலக்கிய வகையில் சிறந்த நூல். நெல்லை மாவட்டத்தில் உள்ள பொருநை ஆற்றங்கரையில் முக்கூடல் நகரம் உள்ளது. அழகர் பெருமானைப் போற்றி எழுதப்பட்டுள்ளது. நூலின் காலம் கி.பி. 1680. பாடல்கள் சொல் நயம் மற்றும் ஓசை நயத்தோடு எழுதப்பட்டுள்ளன.

### செயல்பாடுகள்

- அள்ளல், பழனம், புள்ளினம், பார்ப்பு ஆகிய சொற்களை அகர வரிசைப்படுத்திப் பொருள் எழுதுங்கள்.
- கம்பராமாயணப் பாடலின் மையக் கருத்தைக் குறிப்பிட்டு நயம் பாராட்டி எழுதுங்கள்.
- கம்பர் குறிப்பிடும் மருதநிலக் காட்சியை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டுக் குறிப்பு எழுதுங்கள்.
- உங்களுக்குத் தெரிந்த நெல் வகைகளின் பெயர்களைத் தொகுத்து வரிசைப்படுத்துங்கள்.
- முக்கூடற்பள்ளு பாடலின் வழியாக நாற்று நடும் முறையைக் குறித்துக் குறிப்பு எழுதுங்கள்.

## வயல் சுற்றுலா

ஒரு காலத்தில் காவிரி ஆற்றின் கிளை ஆறுகளில் இருந்து வயலுக்கு நீர்ப் பாய்ச்சும் வாய்க்கால்களும், தேவைக்கு அதிகமான நீர் வெளியேறுவதற்கான வடிகால்களும் நரம்பு மண்டலம் போல அந்த வயல்களின் நடுவே ஊடுருவிப் பாய்ந்திருந்தது.

இப்போதெல்லாம் ஆற்றில் நீர்வரத்து நிச்சயமில்லை. அது மட்டுமில்லாது வாய்க்கால்களையும் வடிகால்களையும் சரிவர பராமரிப்பதும் இல்லை. தோப்புகளிலும், வயல்களிலும் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து, அதிலிருந்து நீரைக் கொண்டுதான் இப்போது விவசாயம் நடைபெறுகிறது.

வண்டி, தார்ச் சாலையிலிருந்து கிளைத்த மண் சாலையொன்றில் திரும்பி, சற்று நேரம் ஓடியபின் வயல்வெளிக்கு நடுவில் ஒரு இடத்தில் நின்றது. ஓட்டுநர் முரளி, இறங்கி வந்து பின்புறக் கதவினைத் திறந்து குழந்தைகள் கீழே இறங்கவும் உதவினார். அனைவரும் கீழே இறங்கி நிற்கவும், தூரத்திலிருந்து சிலர் இவர்களை நோக்கி வரவும் சரியாக இருந்தது.

அப்படி வந்தவர்களில் மூன்று ஆண்களும் ஒரு வயதான பெண்மணியும் இருந்தனர். நால்வருமே முத்து தாத்தாவின் நிலங்களில் விவசாய வேலைகளில் ஈடுபடக் கூடியவர்கள்தான். ஆண்கள் மூவரில் வயதானவராக இருந்த காளிமுத்துவுக்குக் கொஞ்சம் நிலமும் இருந்தது. அதுபோக முத்து தாத்தாவின் சாகுபடியை மேற்பார்வை பார்த்துக் கொள்வதும், தேவையெனில் இறங்கி வேலை செய்வதும் அவரது வழக்கம். மீதி இரண்டு பேரும் ஊரிலிருக்கும் வயல்வெளிகளில் எங்கெல்லாம் வேலை கிடைக்கிறதோ அங்கெல்லாம் சென்று தினக்கூலி முறையில் வேலை செய்வார்கள். அவர்களின் பெயர்கள் பன்னீர்செல்வம், ராஜேந்திரன்.

இவர்களுடன் உடன் வந்த பெண்மணி பன்னீரின் தாய் முத்துக்கண்ணு. அவரும் விவசாயக் கூலிதான். விவசாய வேலைகளில் ஆண்களுக்கு நிகராக, சொல்லப் போனால் ஆண்களை விட அதிகமாகக் கூட பெண்களின் உழைப்பும் இருக்கும்.

### வேளாண்மை காப்போம்

அண்ணனும் தம்பியும் வாளிகளில் நீரைச்சுமந்து வந்து செடிகளுக்கு ஊற்றிக் கொண்டிருந்தனர். "நான் ஐந்து வாளி ஊற்றிவிட்டேன்" என்றான் தம்பி. "நீ நான்கு வாளிதான் ஊற்றினாய்; பொய் சொல்லாதே, போ" என்றான் அண்ணன். அடுத்த நிமிடம் அவர்களின் வாய்ச்சண்டை கைகலப்பாகியது. அவர்கள் வாளியால் ஒருவர் மற்றவரைத் தாக்கும் நிலைக்கு வந்துவிட்டனர். நல்ல வேளையாக அங்கு அப்போது தாத்தா வந்தார். அவர்களைப் பிடித்துப் பிரித்து நிறுத்தினார்.

"என்ன பசங்கடா நீங்க? எந்த வீட்டிலாவது அண்ணன் தம்பி இப்படி சண்டையிடுகிறாரா? உங்களுக்கு மட்டும் சண்டையிட எப்படி மனது வந்தது? அதுவும் வாளியைத் தூக்கிக்கொண்டு வெறிகொண்டவர் போல் நிற்கிறீர்கள்?"

"தாத்தா, அவன்தான் காரணம். நான் ஐந்து வாளி ஊற்றிவிட்டேன். ஆனால் அவன் நீ நான்கு வாளிதான் ஊற்றினாய் என்கிறான். அதனால்தான் சண்டை வந்தது" என்றான் தம்பி.

"நமது தோட்டத்தில் எளிதாகத் தண்ணீர்ப் பாய்ச்ச சீக்கிரமாய் வசதி செய்து தரச் சொல்லுவேன். அதுவரை சிரமம்தான்; பொறுத்துக்கொள்ளுங்கள்; சண்டையிடாமல் வாளியில் நீரை மொண்டு ஊற்றி செடிகளைப் பாதுகாருங்கள். மாலையில் ஆடு உள்ளே நுழையாமல் பார்த்துக்கொள்ளுங்கள்" என்றார்.

"தாத்தா! அவன் நான்கு வாளிதான் ஊற்றினான்" என்று ஆரம்பித்தான் அண்ணன். "நிறுத்து, நான் சொல்வதைக்

வயலில் விளைந்த நெல்லை வீட்டுக்குக் கொண்டு வந்த பின்னரும் செய்ய வேண்டிய வேலைகள் நிறைய உண்டு. அவற்றைச் செய்வது பெரும்பாலும் பெண்கள்தான். "நல்லாருக்கீங்களா ஆயி? புள்ளைங்க ராசாவாட்டம் இருக்காங்க. வூட்டுக்காரர் வரலீங்களா?" என்று முத்துக்கண்ணு அபிராமியை விசாரிக்க ஆரம்பித்தார். "ஆமா, அவருக்கு லீவ் அதிகம் இல்ல. அதுனால நாங்கமட்டும் முன்னாடி வந்தோம். அப்புறமா அவர் வந்து எங்களை அழைச்சுட்டுப் போவார்."

"சந்தன காளியம்மன் கோவிலுக்குச் சாமி கும்பிட வந்தீங்களாக்கும்?"

"கோவிலுக்கும் போகணும் தான். ஆனா அதுக்கு முன்னாடி வெளிச்சத்தோட வயல் வரப்பெல்லாம் புள்ளைங்களுக்கு பாக்கணுமாம்." அபிராமி பேசிக் கொண்டிருக்கையில் இடையில் புகுந்தார் தாத்தா.

"பரம்பரையா விவசாயம் பண்ணிகிட்டிருக்கற நம்ம வீட்டுல பிறந்துட்டு, இந்தப் பொடியன், அதான் அபிராமியோட புள்ளையாண்டான் இருக்கானே. அவன் என்ன தெரியுமா கேட்டான்?" என்று இழுத்தார் தாத்தா. "தம்பி அப்படி என்ன கேட்டுச்சு!"

"அரிசி எந்த மரத்துல காய்க்கும்னு கேக்கறான்" என்று சிரித்தவாறே சொன்னார் தாத்தா.

வந்திருந்த அனைவருமே அந்தச் சிரிப்பில் கலந்து கொண்டனர். தன்னைக் கிண்டல் செய்கிறார்கள் என்கிற அளவில் புரிந்ததால் கண்ணனுக்குக் கோபம் வந்தது. ஆனால் கோபத்தைக் காட்டிக் கொண்டால் இந்தப் பெரியவர்கள் அதற்கும் சேர்த்து இன்னும் அதிகமாக சிரிப்பார்களே ஒழிய, கிண்டலை நிறுத்தப் போவதில்லை. எனவே அமைதியாக இருப்பதே நல்லது என்று அதற்குள்ளாகவே புரிந்து கொண்டிருந்தான்.

"தம்பி, நெல்லு மரத்துல காய்க்காது. வயல்ல விளையும். இப்பத்தான் கதிர் பிடிக்க ஆரம்பிச்சிருக்கு. இருந்தாலும் நெல்லும் தெரியும். வாங்க வந்து பாருங்க" என்று பேசியபடியே கண்ணனின் கை பற்றி முதலில் அழைத்துச் சென்றார் பன்னீர்.

மயூரியைத் தூக்கக் குனிந்தார் முத்துக்கண்ணு.

கேள்; சில நாடுகளில் செடிகளைப் பாதுகாக்க மக்களின் முயற்சியையும் அவர்கள் கடைப்பிடிக்கும் முறைகள் பற்றியும் அறிந்தால் மிகவும் வியப்பாய் உள்ளது. காட்டில் இருந்து வரும் முயல்கள், வீட்டுத் தோட்டத்தில் வளரும் செடிகளின் தளிர்களைக் கடித்து தின்னாதிருக்க அவர்கள் ஒவ்வொரு செடியைச் சுற்றியும் 3 அடி உயரமான கம்பி வேலி அமைக்கின்றனர். சிலர் இரத்தம், இறைச்சி போன்று நாற்றம் தரும் கரைசலை அல்லது தோட்டக்கலைத் துறை விற்பனை நிலையங்களில் கிடைக்கும் நரியின் சிறுநீர்த் துகளைத் தெளிப்பானால் வேலியில் தெளிக்கின்றனர். அவ்வாறு செய்வதால் அச்செடிகளின் பக்கத்தில் முயல் வருவதில்லை. அந்தத் தெளிப்பானை மீண்டும் மீண்டும் பயன்படுத்தி முயல்களை விரட்ட முடிகிறது" என்றார் தாத்தா. "செடிகளைப் பாதுகாக்கும் முறை வித்தியாசமாய் இருக்கிறதே!" என்று வியந்தான் அண்ணன்.

தாத்தா தொடர்ந்தார். "தோட்டக்கலையில் மிகவும் ஆர்வம் கொண்ட சிலர் எடுக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகள் இன்னும் விநோதமாக இருக்கிறது. குறிப்பாகப் பகல் இரவு வித்தியாசமின்றி நீண்ட நாள்கள் சூரிய ஒளியை அனுபவிக்கும் சுவீடன், நார்வே போன்ற நாடுகளில் உறைபனி படரும் நாள்களில் தோட்டத்துச் செடிகளை, மக்கள் தங்கள் குழந்தைகளைப் பாதுகாப்பது போல் மெல்லிய போர்வையால் மூடி வைக்கின்றனர். சிலர் ஈரமான வைக்கோலால் பொதிந்து வைக்கின்றனர். மறுநாள் வெப்ப நிலை அதிகமாகும்போது அவற்றை அகற்றி விடுகின்றனர்".

"மனிதர் போர்த்திப்படுக்கும் போர்வைகள் செடிகளுக்கா?" தம்பி வியந்தான்.

"உங்களுக்கு ஏன்மா சிரமம்? நான் அவள தூக்கிக்கறேன்" என்றார் அபிராமி.

"உங்களுக்குச் சும்மாவே வரப்புல நடந்து பழக்கமில்ல இல்லயாம்மா? இடுப்புல புள்ளைய வச்சுக்கிட்டு நடக்க முடியாது. நீங்க பேசாம வாங்க சொல்றேன்" என்றபடி அவரது பதிலுக்குக் காத்திராமல் குழந்தையைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு பன்னீருக்குப் பின்னால் நடந்தார் முத்துக்கண்ணு.

"சின்னக் களத்து மேடு வரைக்கும் கூட்டிட்டுப் போயிட்டு அப்படியே திரும்பி வந்துருங்க. அதுக்கு மேல போக வேணாம்" பின்னாலிருந்து கத்தினார் தாத்தா.

"சரிங்க" என்று திரும்பிப் பார்த்தபடி சத்தமாக பதிலளித்தார் முத்துக்கண்ணு.

சாலையோரத்தில் அவர்கள் வண்டியிலிருந்து இறங்கியபோது கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சைக் கம்பளம் போலத் தெரிந்த வயல்கள், அவற்றை நெருங்க நெருங்க இன்னும் தெளிவாகத் தெரிய ஆரம்பித்தன.

வயலைச் சிறு சிறு சதுரங்களாகப் பிரித்தது போல ஒற்றையடிப் பாதை ஓடியது. அந்தப் பாதை மேல் ஏறி நடக்க ஆரம்பித்தபோது பன்னீர், கண்ணனின் கையைப் பிடித்துக் கொண்டார்.

"பாத்திக்குள்ள வுழுந்துடாம, வரப்புல கால நல்லா ஊணி ஜாக்கிரதையா நடந்து வாங்க கண்ணு" என்றார் பன்னீர்.

"வரப்புன்னா என்னது?"

"இதோ இப்ப நாம நடக்கறோமே, இதுதான் தம்பி வரப்பு. நடுவுல இருக்கறதுக்கு பேர் பாத்தி"

"ஓ, பார்டர வரப்புன்னு சொல்வீங்களா? பார்டருக்குள்ள இருக்கற ஏரியா பேர் பாத்தியா?"

பன்னீர் "ஆமாம் தம்பி" என்றார்.

கதிர் விட ஆரம்பித்திருந்ததால் நெல் மணிகள் பச்சை நிறத்தில் இருந்தன. பின்னால் இது நன்கு விளைந்து மஞ்சள் நிறத்தில் நெல்லாக மாறும் என்பதையும், அதன் உமி நீக்கி அரிசியாக்கிய பின்னரே நாம் அதைச் சமைக்க முடியும் என்பதையும் வீட்டிலேயே அம்மா அவனுக்கு

"உறைபனிக் காலத்தில் பூக்கள் வாடாதிருக்க, பனிபெய்யும் நாளுக்கு முந்தைய நாளில் சுற்றுப்புறத்தில் நீரைத் தெளித்து வைக்கின்றனர். ஈரமான மண் நீராவியை வெளியிடுகிறது; வெப்ப நிலை அதிகரிக்கிறது. அதனால் இரவு முழுவதும் செடிகள் கதகதப்பை உணர்கின்றன. அவற்றைச் செய்தித்தாள் மற்றும் துணிகளால் மூடி வைக்கின்றனர். ஆண்டின் பாதி நாள்கள் பகலிலும் இரவிலும் சூரியன் காணப்படும்; மீதி நாள்கள் எப்போதும் இருட்டாகவே இருக்கும். அங்கும் மக்கள் வேளாண்மை செய்து உணவு படைக்கின்றனர் என்றால் அவர்கள் எப்படிப்பட்ட உழைப்பாளிகளாய் இருக்க வேண்டும்" என்று கூறினார் தாத்தா.

"அவர்கள் எந்தெந்த உணவுப் பொருள்களைப் பயிர்செய்கின்றனர் ?" தம்பி கேட்டான்.

"அந்நாட்டில் சாதகமான சூழல் நிலவும் இடங்களில் கோதுமை, பார்லி, ஓட்சு போன்ற தானியங்களையும், உருளை, பீட்ரூட் கிழங்கு வகைகளையும் பயிர் செய்கின்றனர். வீடுகள் தோறும் புல்வெளியும் சிறிய தோட்டங்களில் பூ மற்றும் கனிதரும் மரங்களும் வளர்க்கப்படுகின்றன. பால் பண்ணைத் தொழிலும், ஆடு, மாடு, பன்றி வளர்ப்பும் சிறப்புற நடைபெறுகின்றன.

காடுகளால் அந்நாட்டுக்கு மிகுதியான வருமானம் கிட்டுகிறது. அதனால் காடுகளின் பாதுகாப்பில் மக்களும் அரசும் சிறப்பான கவனம் வைத்துள்ளனர். மூசு என்னும் ஒருவகைக் கடமான் எண்ணிக்கை அங்கு மிகமிக அதிகம். அவற்றால் மக்கள்

விளக்கியிருந்ததால் கண்ணன் அடுத்த கேள்விக்குத் தாவினான்.

"நெல்லு விளைஞ்சு, நாம எல்லா நெல்லையும் பறிக்கறதுக்கு மேக்சிமம் எவ்ளோ நாள் ஆகும்?"

"இப்ப நாம் போட்டுருக்கறது ஐ.ஆர். இருபது; இது ஒரு நாலரை மாசம் வளரும். அப்புறம் நெல்லையெல்லாம் ஒவ்வொன்னா பூ பறிக்கறாப்பல பறிச்சுக்கிட்டு இருக்க முடியாது தம்பி, மொத்தமா கதிரை அறுத்து, கட்டா கட்டி எடுத்துட்டு போய் களத்து மேட்டுல அடிப்போம். அப்ப நெல்லுமணியெல்லாம் உதிர்ந்து வந்துரும்"

"ஓ"

"இப்ப அதுக்கெல்லாம் மெஷின் வந்துருச்சு. அதுக்குள்ள கதிர அறுத்து போட்டோம்னா நெல்லைத் தனியா கொட்டிரும். வைக்கோலக் கூட நல்ல அழகா சுருட்டி சுருட்டி ரொட்டி மாதிரி வெளில தள்ளிருது."

"இது விதை போட்டு வளக்கணுமா இல்லாட்டி அப்படியே நர்சரிலேர்ந்து வாங்கிட்டு வந்து வளக்கணுமா?"

மிகுந்த இழப்பை அடைகின்றனர். அது கால்நடைக்கென வளர்க்கப்படும் தீவனப் பயிர்களைச் சூறையாடுகிறது; இரவில் வேலியை விலக்கி அழித்து உள்ளே நுழைந்து பயிரை நாசம் செய்து, உழவரின் கன்றுக் குட்டிகளை வெளியே விரட்டி அங்கேயே படுத்துக்கொள்கிறது. வேளாண் விவசாயிகளின் பயிர்ப் பச்சைகளை அழித்தும், தின்றும், அதனால் விலைமிகுந்த கால்நடைத் தீவனங்களை வாங்க வைத்தும், அவர்களுக்கு இழப்பை உண்டாக்குகிறது. இந்தக் கடமான் ஆப்பிள் மரங்களையும் விட்டு வைப்பதில்லை.

காடுகளின் நிலையோ இன்னும் மோசம். கடமான்கள் அங்கு வளரும் சிறு பச்சைப் பயிர்களை உண்பதில்லை. ஆனால் இளம் பைன் மரங்களை அழித்து கன்றுகளைத் தின்று தீர்க்கிறது. இவ்வாறு நாட்டின் முக்கிய ஏற்றுமதிப் பொருளை அழிக்கிறது. 850 கிலோ கிராம் எடை கொண்ட ஒரு கடமான் குளிர்காலத்தில் 200 லிட்டர் பைன் காய்களைத் தின்று தீர்க்கிறது. தனது குட்டிக்கு உணவாக்க பெரிய பைன் மரத்தையும் எளிதாக அசைத்துத் தரையில் வீழ்த்துகிறது.

பகலாக இருக்கும் இரவையும், இரவாக இருக்கும் பகலையும் ஆறாறு மாதங்களாகக் கழிக்கும் அந்த மக்களும் வேளாண்மை, கால்நடை வளர்ப்பு போன்ற வேலைகளில் ஈடுபட்டு வாழ்வாதாரத்தைப் பேணுகின்றனர். ஆனால் நீங்களோ சிறிய இந்தத் தோட்டத்தைப் பாதுகாக்க பத்து வாளித் தண்ணீர் தூக்கி வர சண்டை இடுகிறீர்கள்" என்று பேசி முடித்தார் தாத்தா.

"விதை தெளிச்சு, நாத்து வந்ததும் பறிச்சு நடணும்"

"அப்படின்னா." என்று புரியாமல் இழுத்தான் கண்ணன்.

"அதையெல்லாம் தாத்தா அப்புறமா விளக்கமா சொல்லுவாங்க. இப்ப நீ விரசா நட. இருட்டறதுக்குள்ள கோவிலுக்குப் போயிட்டு, வீட்டுக்குப் போகலாம்" என்று அவனை அதட்டிய அபிராமி, "இப்படியே திரும்ப களத்து மேட்டுக்குப் போயிரலாம்மா" என்று முத்துக்கண்ணுவிடம் சொன்னார்.

அவர்கள் வயலைச் சுற்றிப் பார்த்துவிட்டு, மீண்டும் தாத்தாவும் காளிமுத்துவும் நின்று பேசிக் கொண்டிருந்த இடத்திற்கே வந்துவிட்டிருந்தார்கள்.

"என்னடா சுட்டிப் பயலே, நெல்லு எப்படி விளையுதுன்னு பாத்துகிட்டயா?"

"ம்..ம்.. பாத்தேன் தாத்தா. ஆனா நாத்தம்னு என்னெல்லாம் என்னமோ சொல்றார் இந்த மாமா. அதுதான் எனக்குப் புரியல."

"அது நாத்தமா இருக்காதுடா, நாத்துன்னு சொல்லி இருப்பாங்க. போன முறை உங்க வீட்டுக்கு வந்திருந்தப்ப பால்கனில நிறைய செடில்லாம்

வச்சிருந்தீங்கள்ள, அதெல்லாம் எப்படி வளக்கறீங்க?" என்று கேட்டார் தாத்தா.

அபிராமியும் கோபாலும் தங்களது அடுக்கக வீட்டிலும் கூட, பால்கனியில் சிலபல செடிகளை வளர்த்து வந்தனர். அந்தச் செடிகளுக்கு நீர் விடுவது போன்ற வேலைகளில் கண்ணனையும் ஈடுபடுத்தி வந்ததைத் தாத்தா கவனித்திருந்தார். அதனால் அவனுக்குத் தெரிந்த விஷயத்தையே உதாரணமாகக் காட்டி தெரியாத விவசாயத்தைப் புரிய வைக்க முயன்றார்.

"அதுவா.. அம்மா நர்சரிலேர்ந்து விதையோ இல்லாட்டி சின்ன செடியோ வாங்கிட்டு வருவாங்க. அத தொட்டி மண்ணுல குழி பண்ணி, அதுல புதைச்சு வைக்கணும். அதுக்கு தினமும் தண்ணி ஊத்தணும். அப்புறம் அம்மா வீட்லயே குப்பையெல்லாம் போட்டு உரம் ரெடி பண்ணுவாங்க. அத வேற அப்பப்ப போடணும். அப்படியே செடில்லாம் மெல்ல மெல்ல வளந்து பூக்கும். அப்படியே பூலேர்ந்து காய் வரும்."

"செடிய நடறதுக்கு நீ சொன்ன ரெண்டு விதத்தயும் இங்க செய்வோம். முதல்ல விதை போட்டு, அப்புறம் சின்ன செடியா வளந்ததும் எடுத்து, வேற இடத்துல நடுவோம்."

"அப்படியா?"

"ஆமா! வீட்டுத் தொட்டி மாதிரி இல்லாம பெரிய அளவுல செய்யறோம்ன்றதால சின்னதா குழி தோண்டறதெல்லாம் சரிப்பட்டு வராது. அதுனால மொத்தமா வயலுக்கு நீர்ப் பாய்ச்சி, அந்த மண்ணு பக்குவமா இருக்கறப்ப உழுது, மொத்தமா விதை நெல்லை தெளிச்சுருவோம்.

"ஒஹோ"

"ம், அப்புறம் குட்டிக் குட்டியா செடி முளைக்கும். அதைத் தான் நாத்துன்னு சொல்லுவோம். அந்த நாத்தெல்லாம் ரொம்ப இருந்தா வளர முடியாது. அதுனால அதுங்களையெல்லாம் பறிச்சு, வயல்ல சரியான இடைவெளி விட்டு வரிசையா மீண்டும் நட்டு வச்சுருவோம்."

"தாத்தா நீங்கள் கடமானைப் பார்த்திருக்கிறீர்களா?" அண்ணன் கேட்டான். "நான் பார்த்திருக்கிறேன். உங்கள் மாமா, அத்தை மற்றும் என் பேரக் குழந்தைகளைப் பார்ப்பதற்காக சுவீடன் சென்றபோது நேரில் பார்த்தேன்" என்றார் தாத்தா. வீட்டுக்குள் சென்று கடமான் படத்தை அவர்களுக்குக் காட்டினார்; அவர்கள் அதைப் பார்த்து மகிழ்ந்தனர்.

ஒன்பது மணியானதும் அண்ணனும் தம்பியும் சமாதானமாகப் பள்ளிக்கூடம் சென்றனர். ஆனால் மறு நாள் காலை தோட்டத்துக்கு வந்தபோது அவர்களுக்கு அதிசயம் காத்திருந்தது. அடிபம்பு அகற்றப்பட்டு ஆழ்துளைக்கிணற்றில் சிறிய மோட்டார் பொருத்தப்பட்டிருந்தது. தாத்தா வந்து விசையை அழுத்த தண்ணீர் தானாகச் செடிகளுக்குப் பாய்ந்தது.

வியந்து போன சிறுவர்கள் கையில் களைக்கொத்திகளை எடுத்துக்கொண்டனர். பாத்திகளின் ஓரத்திலும் வாய்க்கால் நடுவிலும் வளர்ந்து நின்ற களையை அகற்ற முனைந்தனர். தாத்தா அவர்களை வியப்புடன் பார்த்தார்; அவர்களின் முயற்சியைக் கண்டு மகிழ்ந்து, அவர்களைக் கைகளால் அணைத்துக் கொண்டார்.

– லூர்து எஸ். ராஜ்

"அவ்வளவுதானா?"

"இன்னும் இருக்கு! நீ சொன்னா மாதிரி, தண்ணி பாய்ச்சணும், உரம் போடணும். இந்த உரம், தண்ணியெல்லாம் பயன்படுத்திகிட்டு, வேற தேவையில்லாத செடியெல்லாம் நடுவுல முளைக்கும். அதெல்லாம் களைன்னு சொல்வோம். அதை கவனமா எடுத்தரணும்"

"ஓ, நாங்க கூட தொட்டில தேவையில்லாத செடி முளைச்சா அதையெல்லாம் எடுத்துருவோம்"

"கரெக்ட்! அதுதான் களையெடுக்கறதுன்னு சொல்றது. அப்புறம் என்ன? அழகா நெல்லு வளர்ந்து கதிர் பிடிக்கும். இதோ இப்ப இங்க பாத்தியே, பச்சையா குட்டிக் குட்டியா நெல்மணிகள் வந்திருக்கில்ல... அதுதான் கதிர் பிடிக்கறது. இது நல்லா வளர்ந்ததும் நெல்லு மஞ்சளா மாறும். முழுக்க வளர்ந்ததும் அப்படியே கதிரை அறுத்து கட்டுக் கட்டா கட்டி எடுத்துட்டு வருவோம்."

"புரியுது. இப்ப நாம நிக்கற இந்த இடம் வயல் மாதிரி இல்லையே"

"இந்த இடத்துக்குத்தான் அறுப்புக்களம்னு பேரு. நல்லா சமன்படுத்தி வச்சிருக்கற இங்க வச்சு அந்த கதிர்லேர்ந்து நெல்லு மணியெல்லாம் அடிச்சு உதிர்த்து எடுப்போம். அப்படியும் கதிருல ஒட்டியிருக்கும் நெல்லு மணிகளை, மாடுங்கள விட்டு மிதிக்க வச்சு பிரிப்போம். இப்படி கதிரைத் தரையில பரப்பி, மேல மாட்டை ஓட்டி நெல்லைப் பிரிக்கறதத்தான் போரடிக்கறதுன்னு சொல்லுவோம்."

"ஓ! நாங்கல்லாம் போரடிக்கறதுன்னா பொழுது போகாம கடுப்பாகறதத்தான் சொல்லுவோம்." என்றான் கண்ணன். மீண்டும் ஒருமுறை பெரியவர்கள் அனைவரும் சிரித்தனர்.

"மாடு கட்டிப் போரடிச்சால் மாளாது செந்நெல் என்று ஆனை கட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரைன்னு ஒரு பாட்டு கூட உண்டு. அது சரி, கதிரடிப்பு, போரடிப்பு எல்லாம் இப்ப எது? மிஷினுக்குள்ள கதிர திணிச்சு



விட்டால் அதுவே வைக்கோல் தனியா, நெல்லு தனியா பிரிச்சு அழகா கொடுத்துருது. நெல்லு மனுஷனுக்கு, புல்லு அதான் வைக்கோல் மாட்டுக்கு. அவ்ளோதான் நெல்லு விளையற கதை. இனி நெல்லு எந்த மரத்துல காய்க்குதுன்னு கேக்க மாட்டியே"

சிறிது வெட்கத்துடன் "மாட்டேன் தாத்தா" என்றான் கண்ணன்,

எல்லோரும் மீண்டும் வண்டியில் ஏறினர். வண்டி கிளம்பும் முன் நினைவு வந்தவராக தாத்தா தலையை வெளியில் நீட்டி, "முத்துக்கண்ணு..." இந்த வாரத்துல என்னிக்கு ஊருக்கு வந்தாலும் வீட்டுப்பக்கம் சித்த வந்துட்டு போ. அரிசி பொடைக்க வேண்டியிருக்குன்னு மரகதம் சொல்லிட்டிருந்தா."

"சரிங்க, நாளைக்கே வரேன். நானும் இந்த முட்டி வலிக்கு ஆஸ்பத்திரிக்கு வரணும்னுதான் இருக்கேன். காலைலயே வந்துடறேன்" என்றார் முத்துக்கண்ணு. மையச்சாலையில் ஏறும் வரை மிக நிதானமாக வந்த வண்டி அதன் பின் வேகம் பிடித்தது.

– லக்ஷ்மி பாலகிருஷ்ணன்

**லக்ஷ்மி பாலகிருஷ்ணன் :** இவர் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 அன்று ராஜகோபாலன், ராஜலட்சுமி இணையருக்கு மகளாக சென்னையில் பிறந்தார். கல்லூரி நாட்களில் கவிதைகள் எழுதத் தொடங்கிய இவர் பல்வேறு பத்திரிகைகளுக்குக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். எழுதாப் பயணம், ஓர் அன்னையின் பார்வையில் ஆட்டிச உலகம், ஆனந்தவல்லி, மானசா போன்றவை உட்பட பல நூல்களை எழுதியுள்ளார். பல்வேறு விருதுகளையும் பெற்றுள்ளார். இவர் எழுதிய 'நெல் விளைந்த கதை' என்ற நூலிலிருந்து நம் பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- உழவு தொடர்பான பழமொழிகளைத் திரட்டுங்கள்.
- உழவர் திருநாளை முன்னிட்டுப் பள்ளியில் நடைபெறும் பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு உரையாற்ற "உழவின் சிறப்பு" என்னும் தலைப்பில் சொற்பொழிவுரை தயார் செய்யுங்கள்.
- நெல் வேளாண்மையின் படிநிலைகளை வரிசைப்படுத்துங்கள்.



# மலைச்சாரல்



## அகத்தியர் மலை



அகத்தியர் வாழும் பொதிகை மலையில் கடல் மட்டத்திலிருந்து சுமார் 6132 அடி உயரத்திலுள்ள அகத்தியரைத் தரிசிக்கச் செல்வதைப் புனிதப் பயணம் என்றும் சாகசப் பயணம் என்றும் கூறலாம்.

அபூர்வ மூலிகைகள், மனதைக் கவரும் அருவிகள், சிற்றோடைகள், ஆறுகள், எங்கு காணினும் இயற்கையின் கொடையான பசுமையான அடர்ந்த மரங்கள் நிறைந்த காடுகள், புல்வெளிகள் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள இப்பொதிகை மலை இயற்கை நமக்கு அளித்த கொடை.

இந்த அடர்ந்த காட்டில் சிறு அட்டை முதல் மான், காட்டெருமை, கரடி, சிறுத்தை, புலி, யானை, செந்நாய், பாம்பு, உடும்பு மற்றும் காடுகளில் உள்ள ஊர்வன, பறப்பன உள்ளிட்ட அனைத்து வனவாழ் உயிரினங்களும் உள்ளன.

தமிழ் முனிவரைத் தரிசிக்க கேரளத் தலைநகரான திருவனந்தபுரம் பி.டி.பி நகரிலுள்ள வனவிலங்குக் காப்பாளர் அலுவலகத்தில் அனுமதி பெற்று, அவர்களது தகவலின் பேரில் போணக்காட்டிலுள்ள வனத்துறை சோதனை மையத்தில்

பணம் செலுத்தி, அனுமதிச் சீட்டு பெற்று அங்கிருந்து வாகனம் மூலம் சுமார் பத்து கி.மீ. தொலைவு சென்று, போணக்காடு பிக்கெட் ஸ்டேசன் என்ற இடத்திலிருந்து வனத் துறையினர் நமக்கு ஏற்பாடு செய்துள்ள வழிகாட்டியுடன் மூன்று நாள் பொதிகை மலைப் பயணம் தொடங்குகிறது.

முதல் அரைமணி நேரப் பயணத்தில் நாம் முதலில் காண்பது விநாயகர் கோயிலை. அவரை வணங்கி நடைப்பயணம் தொடங்குகிறது. சுமார் ஒரு மணிநேரப் பயணத்தில் கரமனையாற்றை அடைகிறோம். அடர்ந்த வனப்பகுதி இங்கிருந்து தான் தொடங்குகிறது..

இவ்வாறு மலை ஏற்றம், இறக்கம், சிற்றாறு, அருவிகள், புல்வெளி, அடர்ந்த வனம் ஆகிய வழிகளில் நடந்து சுமார் ஆறு மணி நேரப் பயணத்தில் (நன்றாக நடைப்பழக்கம் உள்ளவர்களுக்கு ஒரு மணி நேரம் ஆகலாம்.) அதிருமலை எஸ்டேட் என்ற இடத்தை அடைகிறோம்.

அங்கு கேரள வனத் துறையினர் பக்தர்கள் தங்குவதற்காகக் கட்டியுள்ள அதிருமலை கேம்ப் ஷெட்டில் முதல் நாள் இரவு தங்குகிறோம்.

சுமார் ஒரு மணிநேர நடைப்பயணத்தில் பொதிகை மலையின் அடிவாரத்தை அடைகிறோம். அங்கு சிறிது நேரம் ஓய்வு, அங்குள்ள தென் பொதிகை மானசரோவரில் சிறு குளியலை முடித்துவிட்டு (இது முற்றிலும் மூலிகை நீரைக் கொண்டது) மீண்டும் நடைப்பயணம். பதினைந்து நிமிட நடைப் பயணத்தில் தமிழக வனப்பகுதி எல்லையான சங்கு முத்திரை என்ற இடத்தை அடைகிறோம்.

இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 4,000 அடி உயரம் கொண்டது. சங்கு போன்ற அமைப்பை உடையதால் இப்பெயர். கேரளத்தினர் இப் பகுதியைப் 'பொங்காலைப் பாறை' என்று கூறுகின்றனர். கேரளத்தவர்கள் இங்கு வந்து பொங்கலிட்டு அகத்தியரை வழிபடுவதால் இந்த இடம் பொங்காலைப்பாறை என்றழைக்கப்படுகிறது.

இச்சங்கு முத்திரைப் பகுதியின் மற்றொரு பள்ளத்தாக்கில் நமது வற்றாத ஜீவநதியாம், பொருநை என்று அழைக்கப்படும் தாமிரவருணி உற்பத்தி இடமான பூங்குளம் சுனை உள்ளது.

இந்தச் சங்கு முத்திரை பகுதியிலிருந்துதான் பொதிகை மலையை நோக்கிய மிகவும் செங்குத்தான பாதை தொடங்குகிறது. இப்பாதையில் பெரும் பகுதி பாறைகளாகவே காணப்படுகிறது. இச்சிகரத்தின் பாதி உயரம் வரை, இடது புறத்தில் மரங்கள் நிறைந்த மழைநீர் வழியும் சாய்வான பகுதி வழியே ஏறிச் சென்று பின் வழித்தடங்கள் அற்ற பாறைகள் வழியே துன்பத்தைப் பொருள்படுத்தாது, காலும், கையும் ஊன்றி மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கி, நாக்கு வறண்டு பின் செங்குத்தான பகுதியில் கயிறு மற்றும் இரும்புக் கயிறு பிடித்துக் கவனத்துடன் ஏறிச் சென்றால் கடல் மட்டத்திலிருந்து சுமார் 6,132 அடி உயரமுடைய பொதிகை மலைச் சிகரத்தை அடையலாம்.

**ஆமணக்குக்கும் யானைக்கும்**

முத்திருக்கும் கொம்பசைக்கும் மூரித்தண் டேந்திவரும்
கொத்திருக்கும் நேரே குலைசாய்க்கும் – எத்திசைக்கும்
தேமணக்குஞ் சோலைத் திருமலை ராயன்வரையில்
ஆமணக்கு மால்யானை யாம்

– காளமேகப் புலவர்

இந்த உச்சிப் பகுதியில் திடீர் திடீரென வெயிலும் சில நேரங்களில் உடலை நடுங்கச் செய்யும் பலத்த குளிர் காற்றும், சிலநேரம் மழையும், சாரலும் ஏற்படும்.

தொடர்ந்து மிகவும் கவனமாகக் கீழே இறங்கத் தொடங்கி மூன்று மணி நேரப் பயணத்தில் மீண்டும் அதிருமலை கேம்ப் ஷெட்டை அடைந்து, அங்கு உணவு அருந்திவிட்டு, அன்றிரவு அங்கு தங்கினோம்.

இம் மூன்று நாள் பயணத்தின்போது சுத்தமான காற்று, மூலிகை கலந்த நீர், செல்போன் தொந்தரவு இல்லாத வெளி உலகத் தொடர்பின்மை, பார்க்கும் இடங்கள் எல்லாம் மனதைக் கவரும் பசுமைவெளி ஆகியவற்றால் நமது உடலும் உள்ளமும் புத்துணர்வு பெற்றது என்றால் அது மிகையாகாது.



1998 ஆம் ஆண்டு தமிழக வனத்துறை பொதிகை மலை செல்ல அனுமதி மறுத்து விட்டது. பின் பொதிகை மலை புனித யாத்திரைக் குழுவினர் மற்றும் பக்தர்களின் முயற்சியால் வனத் துறை சில கட்டுப்பாடுகளுடன் மீண்டும் 1999–இல் பொதிகை மலை செல்ல அனுமதி வழங்கியது. இந்நிலையில் 2009 இல் தமிழக வனத்துறை தமிழகம் வழியாகப் பொதிகை மலைக்குச் செல்ல அனுமதி மறுத்ததுடன் கேரளம் வழியாகச் செல்ல அறிவுறுத்தியது.

– தினமணி

இந்தப் பயணக்கட்டுரையானது தினமணி நாளிதழிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

**செயல்பாடுகள்**

- 'ஆமணக்குக்கும் யானைக்கும்' பாடல் கூறும் பொருள் ஒற்றுமையை எழுதுங்கள்.
- மலைவாழ் உயிரினங்களைக் குறித்துக் குறிப்பு எழுதுங்கள்.
- மலைகளின் பயன்களை வரிசைப்படுத்துங்கள்.
- நீங்கள் பயணம் சென்ற அனுபவத்தைக் கடிதமாக எழுதுங்கள்.

## எரியும் பனிக்காடு

(தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைச் சிக்கல்களை மையமாகக் கொண்டதே 'எரியும் பனிக்காடு' என்ற நாவல். பஞ்சம் பிழைக்க வழி தெரியாமல் அவதிப்பட்டுக்கொண்டிருந்த கருப்பனுக்கு வால்பாறை தேயிலை எஸ்டேட்டிலிருந்து ஓர் அழைப்பு வருகிறது. கருப்பனுக்கு விறகு வெட்டும் பணி. வள்ளிக்குத் தேயிலை கிள்ளும் பணி. தீப்பெட்டி அளவே உள்ள தகர வீடு. கழிப்பறை, மருத்துவ வசதிகள் கிடையாது. அட்டைப் பூச்சிகள், காட்டு விலங்குகளின் தொந்தரவு மிகுந்த சூழ்நிலையில் கருப்பனும் வள்ளியும் அனுபவிக்கும் பிரச்சினைகளை எடுத்துரைக்கும் நாவலின் ஒரு பகுதியே நமது பாடப்பகுதி.)

பிப்ரவரி மாதம் விடைபெற்றுக் கொள்ளும் நேரத்தில் சங்கர பாண்டியன் ஏராளமான கூலிகளோடு சமவெளிகளிலிருந்து திரும்பி வந்தான். அவர்களில் முத்தையா குடும்பம் இல்லாததைக் கண்டு கருப்பனும் வள்ளியும் ஏமாற்றமடைந்தனர். புதிதாக வந்தவர்களில் மயிலோடை கிராமத்திற்குப் பக்கத்து ஊர்களைச் சேர்ந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று கருப்பன் விசாரித்தான். அதிலும் ஏமாற்றம்தான் மிஞ்சியது.

"முத்தையா அண்ணாச்சி திரும்ப வருமா?" வள்ளி ஒருநாள் கேட்டாள்...

"வர்றேன்னுதான் சொல்லுச்சு. கொஞ்சநாள் கழிச்சு வந்தாலும் வரும். ராமாயி உங்கிட்ட எதுனாச்சும் சொல்லிச்சா?"

வள்ளி இல்லையென்று தலையசைத்தாள்.

"கொஞ்சநாள் பாக்கலாம். வர்றதாயிருந்தா மேஸ்திரியோடவே வந்திருப்பாகள்ள?" ஏமாற்றத்தில் மூழ்கியிருந்த கருப்பன் தனக்குத்தானே முணுமுணுத்துக்கொண்டான்.

"வேற ஏதாவது எஸ்டேட்டுக்குப் போயிருப்பாகளா?"

"அப்படியிருக்காது. இந்த எஸ்டேட்தான் ஆனமலைலயே நல்லதுன்னும், இங்கதான் காச்சல் கம்மின்னும் நெறய கொழுந்து கிள்ள முடியும், சம்பளம் கிடைக்குமுன்னும் அண்ணாச்சி சொல்லியிருக்குது. அதனால கண்டிப்பா வேற எஸ்டேட்டுக்குப் போயிருக்க மாட்டாக."

ஒரு வாரம் கழித்து வெள்ளையன் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்தான். அது முத்தையாவிடமிருந்து வந்த கடிதம். முத்தையாவும், ராமாயியும் கருப்பனின் அம்மாவையும், அக்காவையும், மச்சானையும் பார்க்க மயிலோடைக்குப் போயிருந்தார்களாம். எல்லோரும் நலமாக இருக்கிறார்கள். கருப்பனும், வள்ளியும் வராதது குறித்து அவர்களுக்கு ஏமாற்றம்தான். ஆனால் முத்தையா, அவர்கள் கொஞ்சம் பணம் சேர்த்து விட்டு விரைவில் வந்து விடுவார்கள் என்று நம்பிக்கை அளித்துள்ளான்.

ஒரு மாதத்தில் தானும் தன் மனைவியும் எஸ்டேட்டுக்குத் திரும்பி வந்து விடுவதாக கடிதத்தில் முத்தையா உறுதியும் அளித்திருந்தான்.

**கொல்லுறானே கங்காணி**
கொண்டையிலே பூவிருக்க
கொண்டுவந்த கங்காணி;
கொந்தரப்பு வேலையிலே
கொல்லுறானே கங்காணி;
ஏல மலைக்குப் போனேன்
ஏழெட்டு நாள் வேலை பார்த்தேன்
ஊரை நினைக்கையிலே
உருகுதையா எம்மனசு.
ஏலைமலையும் கண்டேன்;
ஏலைமலைத் தோட்டம் கண்டேன்
பாவிப்பய பஞ்சம் வந்து
பண்ணைப்புறம் கோம்பை கண்டேன்.
–சேகரித்தவர் எஸ் எஸ் போத்தையா

விரக்தியில் தோய்ந்து போயிருந்த கருப்பனுக்கும் வள்ளிக்கும் அந்தக் கடிதம் மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தது. தாங்களே மயிலோடைக்குப் போய்வந்ததைப் போலத் தோன்றியது அவர்களுக்கு. முத்தையாவும் ராமாயியும் வரும் நாளுக்காக இப்போதிருந்தே அவர்கள் காத்திருக்கத் தொடங்கினார்கள் பெற்றோரைப் பற்றி இன்னும் அதிக விவரங்களைப் பெறுவதற்காக.

இன்னொரு வாரம் கழிந்தது. முத்தையாவினிடத்தில் கோவிந்தன் என்ற புதிய கூலியின் குடும்பம் அமர்த்தப்பட்டது. கோவிந்தனின் மனைவி மாரியாயி மற்றும் அவர்களது இரண்டு வயதுப் பெண்

குழந்தையோடு அவன் தம்பி ராஜாவும் மலைக்கு வந்திருந்தனர். இது பற்றி கருப்பன் வெள்ளையனிடம் கேட்டபோது, முத்தையாவுக்கு இன்னொரு நல்ல இடம் கொடுக்கப்படும் என்று கூறினான். "முத்தையா பழைய கூலிடே, அவனுக்கு நல்ல எடம் கொடுக்கணும்லா."

கோவிந்தனின் பெற்றோர்கள் சின்னம்மையினால் இறந்து போனதால், கவனித்துக் கொள்ள யாரும் இல்லையென்று கோவிந்தன் தம்பியையும் தன்னோடு அழைத்து வந்திருந்தான். அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அறை மிகவும் சிறியதென்பதால் ராஜாவுக்குத் தூங்க தனியிடம் ஒதுக்க முடியவில்லை.

மறுநாள் புதிய கூலிகள் பதிவு செய்யப்பட்டு முதன்முதலாக வேலைக்குச் சென்றனர். அவர்கள் இன்னொரு குழுவில் இருந்ததால் வள்ளியால் மாரியாயிக்கு எந்த உதவியும் செய்ய முடியவில்லை. இரவில் மாரியாயி தன்னுடைய அனுபவங்களை வள்ளிக்கு விவரித்தாள்.

"பழைய ஆளுங்க கிள்ளுற வேகத்தைப் பார்த்து திகைச்சுப் போயிட்டேன். இது நம்மால முடியவே முடியாதுன்னு நெனச்சிட்டேன். ஆனா சாயந்தரத்துக்குள்ள கொஞ்சம் பழகிட்டேன். பெரிய கஷ்டமாத் தெரியல."

"ஆமா. போகப் போக வேகமா கிள்ளிப் பழகிரலாம். கிள்ளுறது கஷ்டமே இல்ல ...." வள்ளி வாக்கியத்தை முடிக்கவில்லை என்பதை மாரியாயி கண்டு கொண்டாள்.

"வேறெ என்ன கஷ்டம். எல்லாத்தையும் சொல்லு" மாரியாயி வற்புறுத்தினாள்.

"நாம கொழுந்து கிள்ளினா மட்டும் போதுமா. அதை பாக்டரிக்குத் தூக்கிட்டு போகணும். இப்ப நமக்கு நிறைய கொழுந்து கிடைக்கறதில்லை. ஆனா சீசனில் கூடை நிறைஞ்சு போயிடும். சில சமயம் மத்தியானமும் ராத்திரியும் ரெண்டு தடவை எடை போட வேண்டியிருக்கும். கூட நெறய சொமய தூக்கிட்டு சாதாரணத் தரையிலேயே நடக்க முடியாது. இதுல வேற நட்டகுத்தா இருக்கிற மலை மேல ஏறணும். சும்மா மலை மேலே ஏறினாலே மூச்சு வாங்கும். சீக்கிரத்திலே காய்ச்சல் காலம் தொடங்கிடும். எங்க ஊருல இந்த மாதிரி காய்ச்சலில் நான் கஷ்டப்பட்டதே இல்ல. அக்கம் பக்கம் யாருக்கும் வந்தும் பார்த்ததில்லை. அது மனுசன நடு நடுங்க வைக்கும். தூக்கித் தூக்கிப் போடும். ஒரு தடவை வந்துட்டு உடவா செய்யும். திரும்பத் திரும்ப வந்திட்டே இருக்கும். ஒரு மனுசன விட்டு வைக்காது. காய்ச்சலுக்குக் குடுக்கிற மருந்து இருக்கே, கசப்புண்ணா கசப்பு அப்பாடி. காய்ச்சலே பரவாயில்ல மாதிரி தோணிடும். அதவிட்டா மழைக்காலம் வரும். மாதக்கணக்கில நிக்காம மழை பெய்யும். அட்டைக கூட்டம் கூட்டமா வந்து இருக்கிற ரத்தத்தையெல்லாம் உறிஞ்சி எடுத்திரும். ரொம்ப பயந்துடாத. சீக்கிரத்துல எல்லாம் பழகிப் போயிரும். மொதல்ல எனக்கும் இப்படி வந்து சிக்கிட்டோமேன்னு தான் இருந்துச்சு. போகப்போக இதெல்லாம் பழகிப் போச்சு."

– பி.எச். டானியல்

தமிழில் – இரா. முருகவேள்

**இரா. முருகவேள் :** தமிழ் நாட்டில் சிவகங்கை மாவட்டத்தில் 1953 ஆம் ஆண்டு நா. சீ. இராமசாமி, மீனாட்சி தம்பதியருக்கு மகனாய் பிறந்தார். இன்பமயமான தமிழக வரலாறு, செம்புலம், நீலத்தங்கம் போன்றவை உட்பட பல நூல்கள் எழுதியுள்ளார். பி. எச். டேனியல் எழுதிய 'ரெட் டீ' என்ற நாவலை 'எரியும் பனிக்காடு' என்ற பெயரில் மொழிபெயர்த்துள்ளார். நம் பாடப்பகுதி இந்நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் சந்திக்கும் பிரச்சினைகளைக் கலந்துரையாடிக் குறிப்பாக எழுதுங்கள்.
- பின்வரும் பகுதியைத் தூய தமிழ்நடையில் எழுதுங்கள்.

  "ரொம்ப பயந்துடாத. சீக்கிரத்துல எல்லாம் பழகிப் போயிரும். மொதல்ல எனக்கும் இப்படி வந்து சிக்கிட்டோமேன்னு தான் இருந்துச்சு. போகப்போக இதெல்லாம் பழகிப் போச்சு"

## தேனீ

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலைச் சேர்ந்தவர் ஜினோ. தேனீ வளர்ப்பில் சாதனை புரிந்ததற்காக, இவருக்குச் சிறந்த தேனீ வளர்ப்பாளர் என்ற தேசிய விருது கிடைத்துள்ளது. இவர், 'ஜி ஹனி' என்ற பெயரில், தேனீ வளர்ப்பு மற்றும் தேன் உற்பத்திக்கான நிறுவனத்தை நடத்தி வருகிறார்.

தேனீ வளர்ப்பில் சாதனை புரிந்தது குறித்து ஜினோ கூறியதாவது "என் தந்தையுடன் இணைந்து பத்து வயது முதல் தேனீ வளர்ப்பில் ஈடுபட்டு வருகிறேன். தேனீ வளர்ப்பில், முப்பது ஆண்டுகள் எனக்கு அனுபவம் உள்ளது. என்னிடம் ஐயாயிரம் தேனீ வளர்ப்புப் பெட்டிகள் உள்ளன.

ஆண்டுதோறும், பத்தாயிரம் தேனீ வளர்ப்புப் பெட்டிகளைத் தோட்டக்கலைத் துறை வாயிலாக சப்ளை செய்து வருகிறேன்.

விவசாயிகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், மாணவர்கள் என பலதரப்பட்டவர்களுக்கும் தேனீ வளர்ப்பு குறித்துப் பயிற்சி அளித்து வருகிறேன். தேனீ வளர்ப்புப் பெட்டிகளைத் தயாரிக்க தேக்கு, புன்னை, மஹாகணி மரப்பலகைகள் தான் ஏற்றதாக உள்ளன.

தேனீ வளர்ப்புப் பெட்டிகளைத் தயாரித்து, தரையில் இருந்து இரண்டரை அடி உயரத்தில் வைக்க வேண்டும். தேன் அடையில் கீழ் அறையில் ராணித் தேனீ முட்டைகளை வைத்து, இனப்பெருக்கம் செய்யும். மேல் அறையில் தேனீக்கள் தேனைச் சேமிக்கும்.

தேனீ வளர்ப்புப் பெட்டிகளை, பூக்கள் அதிகம் உள்ள இடங்கள், அதிக நிழலான இடங்களில் இரவு நேரத்தில் வைக்க வேண்டும்.



அதிக தண்ணீர் தேங்கும் இடங்கள், எறும்புகள் இருக்கும் இடங்கள், மரங்கள், தூண்கள், மரக்கட்டைகளின் அருகில் பெட்டிகளை வைக்கக் கூடாது. மர ஸ்டாண்டுகள் வழியாக எறும்புகள் ஏறிச் செல்வதைத் தடுக்க வேண்டும். தேனீக்களை ஓணான், பல்லி போன்றவை உண்ணும் என்பதால் ஸ்டாண்ட் பகுதியில் கிரீஸ் தடவ வேண்டும்.

ஒவ்வொரு தேனீ வளர்ப்புப் பெட்டிக்கும், நான்கு முதல் ஆறு அடிவரை இடைவெளி இருக்க வேண்டும். அதே நேரம், ஒரே இடத்தில், ஐந்து முதல் இருபது பெட்டிகளை வைக்கலாம்.

பூக்கள் அதிகம் உள்ள இடங்களில், முப்பது பெட்டிகள் வரை வைக்கலாம். தேன் பெட்டிகளுக்கு அருகில் செல்லும் போது, வாசனைத் திரவியங்கள் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

புகை பிடித்த பிறகும், மது அருந்திய பிறகும் அங்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும். தேனீக்கள் புது இடத்தில் பழக மூன்று முதல் ஐந்து நாட்கள் வரை ஆகும். எனவே அத்தகைய நாட்களில் ஒரு டம்ளர் தண்ணீரில் அதே அளவு சர்க்கரையைக் கலந்து, கூட்டின் மேல் அறையில் வைக்க வேண்டும். தட்டுகளில் உள்ள சர்க்கரைத் தண்ணீரில் தேனீக்கள் விழுந்து இறக்காமல், இப்பணியைச் செய்ய வேண்டும்.

இதற்காக, தட்டின் மீது இலைகளைப் பரப்பி விட வேண்டும். தேனீக்கள் இலைகளின் மீது அமர்ந்து சர்க்கரைத் தண்ணீரை உறிஞ்சும். புதிதாக வைக்கப்படும் பெட்டிகளில் இருந்து தேன் எடுக்க, மூன்று மாதங்கள் ஆகும்.

### மழைக்காலம்

வாரம் ஒரு முறை கட்டாயம் பெட்டியைத் திறந்து பார்க்க வேண்டும். அப்போது தான் தேனீக்கள் முறையாகக் கூடு கட்டுகிறதா என்பது தெரியும். பெட்டியில் தேவையில்லாத இடங்களில் உள்ள மெழுகைச் சேகரித்து வைக்க வேண்டும்.

ஜனவரி முதல் மார்ச் வரையும், ஜூன் மாதம் முதல் ஆகஸ்ட் வரையும் பூக்கள் அதிகம் இருக்கும். இந்த மாதங்களில் அதிக தேன் கிடைக்கும்.

ஏப்ரல் முதல் மே மாதம் வரையும், செப்டம்பர் முதல் டிசம்பர் வரையும், தேன் குறைவாகக் கிடைக்கும். மழைக் காலங்களில், தேன் எடுப்பதற்காகக்

**அளபெடை**

பூவோஒ.... பூ   பழமோஒ.... பழம்   கீரையோஒ.... கீரை

என்று வியாபாரி தனது பொருட்களை விற்க வரும் போது கூவி விற்பதை நாம் காண்கிறோம். இதற்குக் காரணம் என்ன? பூ, பழம், கீரை என்று சொல்லி விற்றால் வாங்குபவர்களின் காதில் சரியாக விழாது. நீட்டிச்சொல்லும் போது அவர்கள் என்ன விற்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரியும்.

இதேப்போல புலவர்களும் தாம் இயற்றும் செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய அளபெடையைப் பயன்படுத்துகிறார்கள். அளபெடை என்றால் நீண்டு ஒலித்தல் என்று பொருள். இது மொழியில் முதல், இடை, கடை என மூன்று நிலைகளில் வரும். அளபெடுத்து வரும்போது நெடில் எழுத்துகள் ஏழும் அளபெடுக்கும். இதன் அடையாளமாக நீண்டு ஒலிக்கும் நெடில் எழுத்தின் குறில் எழுத்து இடம்பெறும். இவ்வளபெடை இரண்டு வகைப்படும்.

1. உயிரளபெடை

   ஓஒதல் வேண்டும் – முதல்
   கெடுப்பதூஉம் கெட்டார்க்கு – இடை
   நல்ல படாஅ பறை, ஆடுஉ, மகடுஉ – கடை

2. ஒற்றளபெடை

   கலங்ங்கு நெஞ்சம்
   மடங்ங் கலந்த





கூட்டைவிட்டு தேனீக்கள் வெளியே செல்லாது. அத்தகைய நேரத்தில், சர்க்கரைத் தண்ணீரை அவற்றிற்கு உணவாக வழங்க வேண்டும்.

கேரளாவில் ரப்பர் மரங்களிலும், தமிழகத்தில் முருங்கை மரங்களிலும் தேன் உற்பத்தி அதிகம் நடக்கிறது.

ஆண்டுதோறும் என்னிடம் உள்ள பெட்டிகள் வாயிலாக, பத்தாயிரம் கிலோ ரப்பர் மரத் தேனும் 5,000 கிலோ முருங்கை மரத் தேனும் கிடைக்கிறது. நான் உற்பத்தி செய்யும் தேனுக்கு 'அக்மார்க்' தரச்சான்று வழங்கப்பட்டு உள்ளது.

தேனீ வளர்ப்பு வாயிலாக செடிகளில் மகரந்தச் சேர்க்கை ஏற்பட்டு காய்கறிகள், பழங்கள், மகசூலும் அதிகரித்து வருகிறது. எனவே, தேனீ வளர்ப்பு, தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தி அதிகரிக்கவும் பயன்படுகிறது.

தமிழக தோட்டக்கலைத் துறையுடன் இணைந்து தேனீ வளர்ப்பை அதிகரிக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறேன்." இவ்வாறு அவர் கூறினார்.

– தினமலர் பத்திரிக்கைச் செய்தி

இப்பாடப்பகுதி தினமலர் பத்திரிக்கையில் வெளிவந்த செய்தியாகும்.

## செயல்பாடுகள்

- தேனீ வளர்ப்பில் தேசீய விருது பெற்ற ஜினோ அவர்களைப் பாராட்டிக் கடிதம் எழுதுங்கள்.
- தேனீ வளர்க்கும் முறைகளைக் கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்
- சுற்றுச்சூழல் தினத்தன்று பள்ளியில் அறிவியல் பூங்கா திறந்து வைக்கப்படவுள்ளது. இதற்கான சிறப்பு விருந்தினராக ஜினோ அவர்கள் வருகை தர உள்ளார். இந்நிகழ்ச்சிக்கான சுவரொட்டித் தயாரியுங்கள்.



# கட்டுமரம்



## நெய்தல்

நெய்தல் நிலம் நிறைந்திருக்கும் – மழை
பெய்தல் வளம் பெருக்கி வைக்கும்
கயல்கள் இனம் களைகட்டும்
கணக்கில் கோடி செல்வம் கிட்டும்.

அலைகள் அடிக்கும் கடலிலும்
கடல்நீர் பாயும் உப்பாற்றிலும்
ஒப்பற்ற புதுப்புனல் உவர்நீரிலும்
மீனினங்கள் மெய்சிலிர்க்க வைக்கும்



உப்பங்கழிகள் உவகை தரும்
பின்னில் நீர்கள் பின்னிநிற்கும்
சதுப்பு நிலவளம் சுந்தரமாகும்
படகோட்டும் மீனவர்க்குப் பகட்டாகும்.

நன்னீர் நிலைகள் ஓய்ந்திடலாம்
கோடையில் கொடுமையில் காய்ந்திடலாம்
விவசாயம் தனையும் ஓய்த்திடலாம்
நெய்தல் நிலமது பொய்க்காது

காற்றும் கடலும் கலந்திருக்கும்
காற்றுள்ள பொழுதெலாம் இசையெழுப்பும்
அலைகள் கடலின் உயிர்நாடி
அலைகளில் செல்லலாம் மீன்தேடி

கடற்கரைப் பரப்புகளில் உப்பளங்கள்
உப்பளங்கள் நன்றியின் அடையாளங்கள்
கடல்செய்த நன்மைக்குச் சாட்சியவை
உப்புக் குவியல்கள் – வெள்ளி மலைகள்

உப்பின்றி எதிலும் சுவையுண்டோ?
உப்பில்லை என்றால் தவறன்றோ
உப்பிட்டோர்க்கு நன்றி செய்திருப்போம்
நெய்தலை நன்றியால் நினைத்திருப்போம்

உப்புநிலை உயர்ந்தாலும் உயிர்களுண்டு
உப்புவிளை நீர்களிலே நிறையுண்டு
அற்புத ஆர்ட்டீபியா அங்குண்டு
அங்கின்றி அவை எங்குண்டு?

– வெ. சுந்தரராஜ்

**வெ. சுந்தரராஜ் :** இவர் 1943–ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டம், கடையனோடை என்ற சிற்றூரில் பிறந்தார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பயிற்றுநராகப் பணியாற்றினார். இவரது அலங்கார மீன் வளர்ப்பு, முத்துச்சிப்பி ஆகிய நூல்கள் தமிழக அரசின் விருதினைப் பெற்றுள்ளன. இவர் எழுதிய 'கடல் வேளாண்மை' என்ற நூலிலிருந்து இக்கவிதை எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- 'நெய்தல்' என்னும் கவிதையை நயம் பாராட்டி எழுதுங்கள்.
- 'உப்புநிலை உயர்ந்தாலும் உயிர்களுண்டு
  உப்புவிளை நீர்களிலே நிறையுண்டு
  அற்புத ஆர்ட்டீபியா அங்குண்டு
  அங்கின்றி அவை எங்குண்டு' – எனும் பாடல் வரிகளை விமர்சனம் செய்து எழுதுங்கள்.
- 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்னும் பழமொழிக்கேற்ற நிகழ்ச்சி ஒன்று எழுதுங்கள்.

## தவம்

கட்டுமரம் இன்னும் கரை அடையவில்லையே என்ற கவலை தாஹாசாஹிப்புக்கு. கடலின் ஆழத்தில் சிப்பி எடுக்கச் சென்ற எல்லாக் கட்டுமரங்களும் கரை சேர்ந்தாயிற்று. எதிர்பார்த்தபடி சிப்பிகள் கிடைக்காததால் சிப்பி குளிக்கச் சென்ற குளியாளிகள் முகங்களிலும் நூலாமடைகள். உமலுகள் காலியாயிருந்தன. சிலரது உமலுகளில் இத்திக்காணும் சிப்பிகள் கிடந்தன. கிடைத்தவை எல்லாம் சிறுசுகள். சதைப்பிடிப்பு இல்லாதவை.

கரை வந்த கட்டுமரங்களை மொய்த்த வியாபாரிகள் சிப்பிகளை எடுத்து ஒன்றோடு ஒன்றைத் தட்டி உடைத்து சிப்பிக்குள் சதையைச் சோதனை போட்டனர். மூக்குச்சளிபோல் இம்புடுகாணும் சதை. பல்லில் ஒட்டத்தான் ஆகும். ஒரு வாய்க்குப் பத்துச் சிப்பி போதாது.

கட்டுமரக்காரன் சிப்பிக்கு விலை சொன்னபோது தாஹாசாஹிப் ஜேப்பு புத்தானை அமுக்கி அடைத்தார். பற்றி எரியும் இந்த நீக்கம்பு விலையில் வாங்கவா? இந்த மூக்காடைச் சிப்பியில் எப்படி அப்பம் அவிப்பது ...? ஓர் ஊருக்கு ஊர் கொண்டு போக வேண்டியதல்லவா.

பண்டெல்லாம் மலிஞ்சி மண்ணேறிக்கிடந்த சிப்பிக்கு இப்பம் வந்த கிறாக்கியையும் அது ஒரு கிட்டாப் பொருளாகி விட்டதையும் நினைத்த போது அவரது இதயம் பற்றியது.

பழைய காலம் போலல்ல; இப்பம் சிப்பிக்கு ரொம்ப அருத்தியான நேரம். இந்தக் கடலோர கிராமத்திற்கு ரோடு வருவதற்கு முன் கரையோர மக்கள் மட்டும் சிப்பி சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். அதன் ருசியின் ரகசியம் அவர்களுக்கு மட்டுமே தெரிந்திருந்தது. நவுசாயியும் அவளுடைய சின்ன வயதில் தின்று செழித்தவள். இப்போது காலம் தலைகீழானது. பெண் மக்களைத் தொலைவிடங்களில் கல்யாணம் செய்து கொடுத்ததிலிருந்து பெற்றோர்களுக்குக் கடுதாசி எடுத்து ஒரு கிறுக்கு "சிப்பி அப்பம் அவிச்சுக் கொடுத்தனுப்புங்கொ" இப்படி ஊர்ப்பட்ட ஜனங்களுக்கெல்லாம் சிப்பியின் ருசி தெரிந்துவிட்டது முதல் கெட்ட காலம். இதனால் மட்டும் சிப்பிக்குத் தட்டுப்பாடு வரவில்லை. அப்பவும் ஏராளம் சிப்பிகளை உமல் உமலாகக் கொண்டு வந்து கொட்டுவார்கள் கட்டுமரக்காரர்கள்.

கடலையும் கரைவரும் மரங்களிலுள்ள வெற்று உமல்களையும் பார்த்துக் கொண்டு கொட்டாவி விட்ட அவரது சிந்தனையில் மினி வேன்கள் வந்தன. உறுமி உறுமி வரும் மினிவேன்கள் சிப்பிகளை நிரப்பிக் கொண்டுப் போவதைப் பார்க்கும் போதெல்லாம் இப்பம் வெள்ளைக்கார துரைமாரும் சிப்பி சாப்பிடத் தொடங்கி விட்டார்களோ என்று அவருக்குத் தோன்றியதுண்டு.

மினிவேன்களைத் திட்டி என்ன பயன்? நெடுநெடா ரோடு கிடப்பதால் அது வருது போவுது. கடலை உற்றுநோக்கினார். அங்குத் தெரிந்த கட்டுமரங்களை எண்ணினார். ஒண்ணோ ரண்டோ மரங்கள். கடலில் எஞ்சிய அந்த மரங்களை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டு நின்றார். ஒரு நேரத்தில் தொடுவெட்டிச் சந்தை நாளில் சடையனின் மாட்டு வண்டி மட்டும் வருமளவிற்குக் கிடந்திருந்த ஒரு வண்டித்தடம், அதில் கல்போட்டுத் தார் போடுவதற்குக் காரணமாயிருந்தது ஒரு தேர்தல் வாக்குறுதி.



ரோடு வருவதற்குக் குரல் எழுப்பியவர்களில் தானும் ஒருவனாக இருந்ததை நினைத்த போது அவருக்கு இப்போது ஒரு குற்ற உணர்வு தோன்றியது.

வடக்குத் தெற்காகக் கால் நீட்டிக் கிடக்கும் கடற்கரை ரோட்டிலிருந்து வந்த மினி வேன்களின் பூவாங் பூவாங் சத்தம் அவரது செவிட்டைப் பிளந்தது. கடற்கரையில் நின்று கடலை நோக்கினார். தொடர்ந்து பார்க்க முடியவில்லை. கண்கள் கூசின. சூரியன் நீல நிறக் கண்ணாடிக் கூட்டிற்குள்ளிலிருந்து அவரது கண்களைச் சுட்டது.

கடலில் எஞ்சிக் காணப்படும் மரங்களில் ஒன்று பனி அடிமையுடையதாக இருக்கலாம். அவனுடைய மரம் கரை சேருமானால் அதில் ஏராளம் சிப்பிகள் கிடைக்குமென்று அவர் எதிர்பார்த்தார். நல்ல சதை அடர்த்தியுள்ள சிப்பிகள், சக்கைச் சுளை போல்.

அவரது நெஞ்சு படபடத்தது. கடலில் கிடக்கும் ஒன்று இரண்டு மரங்களும் சதி செய்து விடுமோ? அவை வருவதை நம்பித்தான் இந்த நெடுநேரத் தவம்.

பலமுறை மூழ்கி ஏராளம் சிப்பி கொண்டு வருபவன் பனி அடிமை. அவனுடைய மரம் இன்னும் கரை சேர்ந்ததாகத் தெரியவில்லை. சிப்பி கிடைக்கும் காலங்களில் முதலில் கடலில் மரம் இறக்குவதும் கடைசியாகக் கரை சேருவதும் பனி அடிமை. அவரது கால்கள் களைத்தன. மணலைக் காலால் சீய்த்துக் கொண்டு தரையில் உட்கார்ந்தார்.

சூரியன் தாழ்ந்து விட்டது. இன்னும் ஓர் அடி தொலைவுண்டு தொடுவானத்தைத் தொடுவதற்கு.

சந்தேகங்கள் பல அவரைச் சூழ்ந்தன. நேரம் இவ்வளவு ஆன பிறகும் கடலிலிருந்து வராத பனி அடிமையை யாருமே தேடுவதாகவும் தெரியவில்லை. கரையில் நிற்போர் யாருமே கடலில் உற்று நோக்கவுமில்லை. மினிவேன் எழுப்பிக் கொண்டிருந்த ஒலி இப்போது கேட்கவில்லை.

அவர் மட்டும் நின்று கொண்டிருந்தார். மனசுக்குள் வேர்கள் பரவிக் கிடக்கும் எதிர்பார்ப்பு. கடலின் மீது வியாபித்த காரிருளில் சிப்பிப்பாறை மூழ்கியது.

நடுநிசியானாலும் பனி அடிமையின் மரம் கரைக்கு வருமென்ற நம்பிக்கை உறுதியில் அங்கே உட்கார்ந்திருந்தார்.



நேரம் செல்லச் செல்ல மனசுக்குள் களிப்பு. இரவாகி விட்டதால் சிப்பி மலிவாகக் கிடைக்கும். வாங்குவதற்கு வேறு யாருமில்லை.

இரவு எவ்வளவு நேரமானாலும் சிப்பி வாங்கி அப்பம் அவித்துக் கொண்டு செல்ல வேண்டும். இரவு அல்லது காலை வண்டியில் புறப்பட வேண்டும்.

நேரத்தின் பாய்ச்சலை மறந்த நிலையில் குளிர் மணலில் உட்கார்ந்திருந்த அவரது வெப்ப மனசில் நவுசாயி நிரம்பி நின்றாள்.

ஒரு கை அவரது தோளில் தொட்ட போது நடுங்கி எழும்பி விட்டார்.
"ஏன் இஞ்ச இரிக்கியோ....?"

குரல் கேட்டுப் புரிந்து கொண்டார். பனி அடிமை!

"மரம் கரை அணஞ்சுதாப்பா...."?

"அணஞ்சுது"

"சிப்பி"

"மினிவேன்காரன் வாண்டியிட்டு போயிட்டான். எளும்பி ஊட்டுக்குப் போங்கோ நாயனே."

கடல் ஊதிய சீதக்காற்றிலும் அவருடைய நெஞ்சு வேர்த்துக் கொட்டியது. அந்த வியர்வை வெப்பத்தில் அவர் தகித்தார்.

–தோப்பில் முகம்மது மீரான்



**தோப்பில் முகம்மது மீரான் :** குமரி மாவட்டத்தின் கடற்கரை கிராமமான தேங்காய்ப்பட்டணம் இவரின் சொந்த ஊர். தந்தை முஹம்மது அப்துல் காதர், தாயார் முஹம்மது பாத்திமா, மனைவி ஜலீலா மீரான் ஆவர். இவர் 5 புதினங்களையும் 6 சிறுகதைத் தொகுப்புகளையும் சில மொழிபெயர்ப்புகளையும் எழுதி வெளியிட்டுள்ளார். இவரது 'சாய்வு நாற்காலி' என்ற புதினம் 1997–இல் தமிழ் இலக்கியத்திற்கான சாகித்திய அகாதமி விருது பெற்றது.

### செயல்பாடுகள்

- 'தவம்' சிறுகதையை மையக்கருத்து, பாத்திரப் படைப்பு, மொழிநடை போன்றவற்றின் அடிப்படையில் விமர்சனம் செய்யுங்கள்.
- நீங்கள் கண்டு இரசித்த கடற்கரையின் அழகினை வர்ணனைக் குறிப்பாக எழுதுங்கள்.
- 'தவம்' சிறுகதையில் இடம்பெற்றுள்ள வட்டார வழக்குச் சொற்களைத் தொகுத்துத் தூய தமிழ்ச் சொற்களை எழுதுங்கள்.

## குளியாளிகள்

பாரதம் பாருக்களித்த பரிசுகள் பலவற்றில் கொற்கை முத்தும் ஒன்று. கடல்சார் திரவியங்களைக் கரைகொண்டு சேர்ப்பதில் முத்துக்குளித்தல் முதன்மையானது. கடலுக்குள் மூழ்கி மூச்சடக்கி முத்துச்சிப்பிகளை அள்ளிச் சேர்த்து மேலே கொண்டு வருபவன் குளியாளி. பல நூற்றாண்டுகள் பாரம்பரியமாக முத்துக்குளிப்பதில் ஈடுபட்டவர்கள் அத்தொழிலை நிறுத்தி அரை நூற்றாண்டு கடந்தோடிவிட்டது. தொன்றுதொட்டு தொடர்ந்து இத்தொழில்நுட்பமும் தொழிலாளிகளும் வேகமாகக் குறைந்து வருகின்றனர்.

கடலுக்குள் குளித்துத் தேடும் தொழில் முத்துக்கும் சங்குக்கும் மட்டுமானதல்ல. முத்துக்கென்று இப்பொழுது குளிப்பது இல்லையென்றாலும் சங்கு, கூடு, தோடு போன்றவைகள் எடுப்பதற்கான குளியாளிகள் இன்றும் உள்ளனர்.



ST-807-10-TAMIL (AT)-9-VOL-2

இவர்களது வருவாய் போதுமானதாக இல்லாததால் குளியாளித் தொழில் வல்லுநர்களின் எண்ணிக்கை குறைந்து போகிறது. இவர்கள் பரம்பரை ஞானத்தைச் சார்ந்து வந்தவர்கள். தேவைக்கேற்ப தங்களின் தொழில் நுணுக்கங்களை மாற்றிக்கொள்கிறார்கள்.

### சங்குக் குளித்தல்

சங்கு குளித்தலும் முத்துக்குளித்தல் போன்று பழமையானது. கடல் மிகவும் தெளிந்த நிலையில் காணப்படும் டிசம்பர்–ஜனவரி மாதங்களில் சங்குக் குளித்தல் அதிகம் நடைபெறுகிறது. இடுப்பில் அரைச்சால் என்றழைக்கப்படும் சிறிய கச்சாத்தைக் கட்டிக்கொண்டு கடலுக்குள் குளிப்பார்கள். கடலுக்கடியில் காணப்படும் வலம்புரி, இடம்புரி, முள்சங்கு, நட்சத்திரமீன் போன்ற வகைகளைக் கச்சாத்தில் கட்டிக்கொண்டு நீரின்மேல் மட்டத்திற்கு வருவார்கள். எந்தச் சங்கு எந்த இடத்தில் அதிகம் காணப்படும் என்பதைத் தங்கள் நீண்டகாலத் தொழில் அனுபவம் மூலமாகத் தெரிந்து வைத்திருக்கின்றனர்.

### கூண்டுக் குளித்தல்

சிங்கி இறால் (Lobster) மீனுக்கு அதிக விலை கிடைக்க ஆரம்பித்தவுடன் இம்மீனைப் பிடிக்கப் பல யுக்திகளை மீனவர்கள் யோசனை செய்தனர். அதில் வெற்றிகரமான ஒருமுறை சிங்கி இறாலைக் கூண்டு தாழ்த்திப் பிடிப்பது ஆகும். கூண்டைக் கடலுக்கடியில் குறிப்பிட்ட இடத்தில் அழுத்தி வைத்து 2, 3 நாட்கள் கழித்து கூண்டை மேலே கொண்டு வந்து அகப்பட்ட சிங்கி இறால்களை வெளியே எடுத்துக் கொண்டு புதிதாக சிங்கி இரையை இட்டு மீண்டும் முன்போல குளியாளிகள் கூண்டைப் பாறைகளுக்கிடையில் தாழ்த்தி வைப்பார்கள்.

இந்தக் கூண்டுகளில் சிங்கி இறால் தவிர விளமீன், சென்னவரை, பக்கோட்டி (கிளிமீன்) போன்ற வகைகளும் கிடைக்கின்றன. கூண்டு தாழ்த்திக் காத்திருந்த குளியாளிக்குக் கூண்டில் சிங்கி இறால் கிடைக்காவிட்டாலும் உழைப்பிற்குக் கூலியாக மீன்களாவது கிடைக்கும். குளியாளிகள் கூண்டு வைக்கும்போது நீரோட்டம், பாறை மடைகள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு வைப்பார்கள். சில வேளைகளில் குளியாளிகள் சிங்கி இறால்கள் பாறையில் இருந்தால் கையாலேயே பிடித்துவிடுவார்கள். இதற்கு முன் எச்சரிக்கையாகக் கையுறை பயன்படுத்திக் கொள்வார்கள்.

தூத்துக்குடியைப் பூர்வீகமாகக் கொண்டவர்களில் 60, 70 குளியாளிகளை இன்றும் அரசின் குறிப்பிட்ட கடல் அடித்தரை ஆய்வுப் பணிகளுக்கு அவ்வப்போது பயன்படுத்திக் கொள்கின்றனர். லட்சத்தீவில் சுமார் 600 அடி ஆழத்திலிருந்து 15 டிகிரி செல்சியசிலும் மேல் மட்டத்தில் 25 டிகிரி செல்சியசிலும் எடுக்கப்பட்ட கடல்நீரிலிருந்து, குடிநீர் தயாரிப்பதற்கான ஆய்வில் பலவகைகளில் குளியாளிகள் ஈடுபடுத்தப்படுகின்றனர். கவரத்தி, அகத்தி, மினிக்காய் தீவுகளில் வசிக்கும் மக்கள் தங்களது தினசரி தேவைக்கான குடிநீரைச் சுயமாகவே தயாரித்துக் கொள்கின்றனர்.

## சிப்பிக் குளித்தல்

அக்டோபர் முதல் பிப்ரவரி வரை பாறையுடன் ஒட்டியிருக்கும் கடற்பாசி மற்றும் பிற விலங்குகளுடன் சிப்பிகள் காணப்படுகின்றன. உணவாகப் பயன்படும் பெர்னா இன்டிகா, விரிடிஸ் என்னும் இரண்டு சிப்பி இனங்களைக் கல்லிக்கா என்கிறார்கள். கல்லுக்கருவா எனப்படும் மரக்கைப்பிடி கொண்ட கல்லுளியுடன் கடலில் குளித்து சிப்பிகளைப் பாறையிலிருந்து சுரண்டிச் சேர்த்து இடுப்பில் பிணைத்திருக்கும் கச்சாலில் இடுவார்கள். கல்லுளி சுமார் ஒரு கிலோ எடை கொண்டது. கச்சாலில் நிரம்பிய அறுவடை கட்டுமரத்தில் கொட்டப்படுகிறது. குளியாளி மீண்டும் குளித்துப் போவார்.

சிப்பித் தோடுகள் சிங்கி இராலைக் கவரும் இரையாகக் கூண்டுகளில் நொறுக்கிப் போடப்படுகின்றன. சிப்பிகள் மொத்தமாகவோ எண்ணிக்கை அடிப்படையிலோ விற்பனை செய்யப்படுகின்றன. சிப்பி ருசியான புரத உணவு. வேகவைத்து அல்லது சிப்பித்தசையைச் சுக்காவாக வரட்டியோ பொரித்தோ உண்பார்கள். சிப்பியும் மரவள்ளிக் கிழங்கும் கடற்கரையில் பிரசித்தி பெற்ற உணவு. இதயநோய்க்குச் சிப்பி உணவை மருந்தாகக் கடற்கரை மக்கள் நம்புகின்றனர்.

சிப்பிக்காகக் குளிக்கும் குளியாளி, பாறைகளில் ஒட்டியிருக்கும் மூரை குச்சிமீன் (Sea Urchin) வகைகளையும் பிடுங்கிச் சேகரித்து வருவார்.

## சிப்பிச்சங்கு குளித்தல்

பாறைகள் நிறைந்த கடலடித்தரைகளில் பல்வேறு சிப்பித்தோடுகளின் சேகரங்களைக் காணலாம். இவை சங்கு, சிப்பி போன்ற இறந்துபோன உயிரிகளிலிருந்து உதிர்ந்த தோடுகளாகும். இவை கடலடியிலும் அலைவாய்க் கரையிலும் நீரோட்டம் மற்றும் அலைவேகத்தைப் பொறுத்து அலைவாய்க்கரையில் ஒதுங்குகின்றன. சுட்ட சுண்ணாம்பாகத் தயாரிப்பதற்கு இந்தச் சிப்பித் தோடுகளே சேகரிக்கப்படுகின்றன.

சுண்ணாம்பு ஆலைகளில் இந்தச் சிப்பித்தோடுகள் கொட்டப்பட்டு சுடப்படுகின்றன. இயற்கைச் சுண்ணாம்புக் கலவை வழக்கொழிந்து போயிருக்கும் சூழலில் சிப்பிக் குளிப்பவர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது.

குளியாளி என்னும் பாரம்பரியத் தொழிலை இப்போது அதிகமாகச் செய்பவர்கள் தென்தமிழக மீனவரே ஆவர். தொன்றுதொட்டு இவர்கள் இத்தொழில்நுட்பத்தில் வல்லவர்களாக இருக்கின்றனர். தூத்துக்குடி முதல் கொச்சி வரை பெரும்பாலும் இவ்வினக்குழுவினரே குளியாளியாக இருக்கின்றனர். குறிப்பாக ஆற்றுப்படுகைகள் இவ்வாறான தொழில்களில் ஈடுபடச் சாதகமாக உள்ளன. இத்தொழில்நுட்பத்தில் கடியப்பட்டணம் ஓர் முன்னோடி.

கடியப்பட்டணம் என்னும் கடற்கரை கிராமம் குளியாளிகளுக்கு மட்டுமின்றி ஓடாவிகளுக்கும் பிரசித்தி பெற்றது. ஓடாவிகள் என்பவர்கள் கட்டுமரம், படகு கட்டும் வல்லுநர்கள். ஓடம் கட்டியதால் இவர்களுக்கு ஓடாவி என்னும் பெயர் வந்திருக்கலாம். கட்டுமரம் சேர்ப்பதற்குப் பொதுவாக அல்பீசியா என்னும் தீக்குச்சி மரத்தைப் பயன்படுத்துகின்றனர். மஞ்சு, ஓடம், வத்தால், கோட்டியா,

திமில், கட்டுமரம் போன்ற பல்வேறு கலன்கள் தொழில்புரியும் இடத்திற்கேற்பவும் தொழிலின் தேவைக்கேற்பவும் வடிவமைக்கப்படுகின்றன. குமரி மாவட்டத்தில் கட்டுமரம் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இக்கட்டுமரத்தின் நடுவட்டி, தொரம், நெருக்கு, ஒட்டம். வாரிக்கல், சுத்தரஞ்ஞான் தடுப்புகள் போன்ற பல பாகங்களை நுட்பமாகச் செதுக்கி, சரிபார்த்து குறிப்பிட்ட தொழிலுக்கேற்ப வடிவமைப்பு செய்வதில் குறும்பனை, கடியப்பட்டணம் ஓடாவிகள் தேர்ச்சி பெற்றவர்கள். விசைப்படகு, ஃபைபர் போட்டு போன்ற கலன்களின் வருகையால் ஓடாவிகளுக்கும் தேவையில்லாமல் போய்விட்டது. கட்டுமரத்துக்குப் பாய் தயாரிப்பவர்களுக்கும் வேலையில்லாமல் போய்விட்டது. தேவையில்லாமற் போயிற்று. கலம் செய்த வல்லுநர்கள் காலம் தள்ளச் சிரமப்படும் அவலநிலை வந்துள்ளது. குளியாளியும் ஓடாவியும் இன்று வானம்பார்த்த பூமியைப்போல் வறண்ட வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். தென்தமிழக பாரம்பரியக் குளியாளிகள் நவீனத்துவத்துக்கு மாறவில்லை. கோவணம் அளவுக்கான சிறு உள்ளாடை மட்டுமே அணிந்துகொண்டு கடலுக்குள் குளித்துச் செல்லுகிறார்கள். காலையில் சுமார் 7, 8 மணிக்குத் தங்கள் இஷ்ட தெய்வ வேண்டுதலுடன் பணியைத் தொடங்குகின்றனர்.

கடந்த 30 வருடங்களாகக் குளியாளிகள் தங்கள் தொழிலில் சில மாற்றங்களைச் செய்துகொண்டனர். முத்துக்குளிக்கச் செல்கையில் ஆழத்திற்குச் செல்லும் பொருட்டு தென்னநார்க்கயிற்றில் கல்லைக் கட்டிக்கொண்டு செல்வார்கள். இப்போது நைலான் கயிற்றில் இரும்புக் குண்டு கட்டிப் பயன்படுத்துகிறார்கள். கண்ணின் பாதுகாப்பிற்கு மூக்கையும் அடைத்துப் ப்ளாஸ்டிக் கண்ணாடி அணிகின்றனர். வேகமாக நீந்துவதற்காகக் காலில் ஃபோர்க்கல் அலுமினியத் தகட்டைப் பயன்படுத்துகிறார்கள். இத்தகடு சுமார் 2 மில்லிமீட்டர் திண்ணமும் ஒரு அடி விட்டமும் கொண்ட தகடு ஆகும். இதில் குளியாளி தனது காலுக்குப் பொருத்தமான அளவு துவாரமிட்டு செருப்புக் கட்டுவது போல இறுக்கிக் கட்டிக்கொள்வர். மேலிருந்து பார்த்தால் குளியாளியின் கால்கள் கடல்நீரில் பளிச்சென்று தெரியும்.

குளியாளி ஃபோர்க்கலுடன் வேகமாக நீந்திச்செல்ல முடியும். இவைபோன்றவற்றைப் பயன்படுத்திக் குளியாளிகள் 40 முதல் 70 அடி ஆழம்வரை கடலுக்கடியில் மூழ்கிச் செல்கின்றனர். அவ்வப்போது கடல் மீன்களால் தாக்கப்படுவதும் உண்டு. இனயம்புத்தன்துறையில் குளியாளிகள் சங்கம் வைத்திருக்கின்றனர். வருடத்திற்கு ஒருமுறை சந்தித்து விவாதிக்கின்றனர். ஆபத்து நிறைந்த இத்தொழிலை 20 வயது முதல் 45 வயது வரை மட்டுமே தொடரமுடியும். அதற்குப் பிறகு மீன்பிடிப்பில் ஈடுபடுவது வழக்கம். அல்லது தோடைக்காரனாய்ப் பணி செய்வார்கள். குளியாளி கடலுக்குள் செல்லும்போது கடலின் மேல்பரப்பில் கலத்தில் அமர்ந்து குளிப்பவரின் மூச்சடக்கும் திறனை அனுசரித்து நேரத்தை மேலாண்மை செய்பவர் தோடைக்காரன். குளியாளிகளுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டால் தேர்ந்த தோடைக்காரன் முதலுதவி அளிப்பான். மூச்சுத்திணறும் நேரங்களில் தோடைக்காரன் குளியாளியின் முதுகில் ஓங்கி அடிப்பான். பெரும்பாலும் மூச்சுத்திணறல் சரியாகி சுயநினைவு திரும்பிவிடும். அனேகக் குளியாளிகள் வாயிலிருந்து வாய்க்கு மூச்சுக்கொடுக்கும் முதலுதவி முறைக்கும்

பரிச்சயப்பட்டவர்கள். இவர்களது நினைவில் ஓரிரு விபத்துகளைத் தவிர்த்து எவ்வித உயிர்ச் சேதமும் தென்தமிழகக் கடற்கரைகளில் நிகழவில்லை என்கிறார்கள். குளியாளிகளுக்கு உயிர்க்காப்பீடு செய்யவேண்டும் என்ற எண்ணமே இல்லை. இதற்குக் காரணம் தங்களது குளிக்கும் தொழில்நுட்பத்தின் மீதுள்ள அபரிமித நம்பிக்கை. ஆபத்தான தொழில் என்ற உள்பயத்தை விலக்குவதாகவும் உளவியல் ரீதியாக இவர்கள் சில நம்பிக்கைகளைக் கொண்டுள்ளனர். கடல்சார்ந்த வாழ்வாதாரப் பொருளீட்டுதலில் இவர்கள் மாறுபட்ட பொருளாதார சூழ்நிலையில் இன்று தங்கள் பகுதிக் கடலுக்கு அப்பால் சென்று பணிசெய்ய ஆரம்பித்துள்ளனர். பலர் கடலுக்கு அன்னியப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். கடலோரத்தின் அனேக குடும்பங்கள் வெளியூரிலிருந்து குடும்பத்தலைவர் அனுப்பும் பணவிடை பொருளாதாரத்தை நம்பித்தான் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களின் மாற்று வாழ்வாதாரமும் விவாதிக்கப்பட வேண்டியதொரு சமூகச் சிக்கல் ஆகும்.

– ஜஸ்டின் திவாகர்

**ஜஸ்டின் திவாகர் :** நெய்தல் நில மக்களின் வாழ்வியல் சூழல்களைத் தம் படைப்புகளில் எடுத்துரைப்பவர். இவர் எழுதிய 'கொல்லணி' என்ற நூலிலிருந்து இப்பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- 'நெய்தல் நிலமும் தொழிலும்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.
- குளியாளிகளின் தொழில் நுணுக்கங்களைக் குறித்து விளக்கக் குறிப்பு தயார் செய்யுங்கள்.
- சிலேடை நயம் தரும் சில பாடல்களைத் தொகுத்துப் படியுங்கள்.
- தோடைக்காரர் பற்றிய தகவல்களைத் திரட்டி சிறுகுறிப்பு எழுதுங்கள்.
- ஐவகை நிலங்களையும் அவற்றின் தொழில்களையும் விளக்கி படத்தொகுப்பு தயாரியுங்கள்.



## அகராதி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அகவை | – | வயது | சிரம் | – | தலை |
| அங்கம் | – | உறுப்பு | செறாஅமை | – | சினமடையாமை |
| அடுக்ககம் | – | அடுக்குமாடிக் குடியிருப்பு | தண்டலை | – | சோலை |
| அபிநயம் | – | நடிப்பு | தனம் | – | செல்வம் |
| அயர்வு | – | சோர்வு | தாண்டவம் | – | நடனம் |
| அரக்காம்பல் | – | சிவந்த ஆம்பல் மலர் | தாழை | – | தென்னை/தாழம்பூ |
| அவிழ | – | மலர | திக்கில் | – | திசையில் |
| அழல் | – | நெருப்பு | தீம் | – | இனிய |
| அள்ளல் | – | சேறு | நூலாமடைகள் | – | சிலந்தி வலை |
| ஆக்கம் | – | செல்வம் | நொம்பலம் | – | வலி / வேதனை |
| ஆழி | – | கடல் | படப்பை | – | தோட்டம் |
| இடர் | – | துன்பம் | பரவை | – | கடல் |
| ஈடற்றது | – | இணை இல்லாதது | பள்ளீர் | – | பள்ளியர் |
| ஈன்ற | – | பெற்றெடுத்த | படினம் | – | குளம் |
| உடுக்கள் | – | விண்மீன்கள் | பார்ப்பு | – | குஞ்சு |
| உமலுகள் | – | ஓலைப்பைகள் | பாரோர் | – | உலகத்தார் |
| உவரி | – | கடல் | பிடி | – | பெண் யானை |
| எழினி | – | திரைச்சீலை | பிழை | – | தவறு |
| கண்ணோடாது | – | இரக்கம் காட்டாது | புணர்ந்தார் | – | நட்பாகக் கூடுதல் |
| கரவா | – | மறைக்காமல் | புள்ளினம் | – | பறவையினம் |
| கவ்வை | – | ஒலி | புளகாங்கிதம் | – | பெருமகிழ்ச்சி |
| களிப்பு | – | மகிழ்ச்சி | புனல் | – | ஆறு, நீர் |
| கன்னல் | – | இனிமை / கரும்பு | பெண்ணை | – | பனை |
| கான் | – | காடு | பேதை | – | அறிவில்லாதவர் |
| கிளை | – | சுற்றத்தார் | பொறி | – | இயந்திரம் |
| குன்று | – | மலை | முழவு | – | மத்தளம் |
| கூலம் | – | தானியம் | முன்றில் | – | முற்றம் |
| கூழ் | – | கஞ்சி | வரை | – | மலை |
| கேளிர் | – | உறவினர் | வியப்பு | – | ஆச்சரியம் |
| கொண்டல் | – | மேகம் | வெரீஇ | – | பயந்து |
| சித்திரம் | – | படம் | வௌவல் | – | கொள்ளுதல் |

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதினான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**
ஸ்ரீ கணேஷ், TC. 14/2036, வான்ரோஸ் ஜங்ஷன்,
கேரளா பல்கலைகழகம் P.O, திருவனந்தபுரம்–34, தொலைபேசி : 0471–2326603
இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in
www.kescpcr.kerala.gov.in

**சைல்டு ஹெல்ப் லைன்–1098, கிரைம் ஸ்டோப்பர்–1090, நிர்பயா–1800 425 1400**
**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் – 0471–324300/44000/45000**

*Online* ***R. T. E Monitoring : www.nireekshana.org.in***